
வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார்

சி. சுப்பிரமணியன்



இந்திய இலக்கியச் சிற்பிகள்

வெள்ளகால்
ப. சுப்பிரமணிய முதலியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்கு கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை ஓர் எழுத்தர் எழுதுகிறார். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். (நாகார்ஜுன மலைச் சிற்பம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம். புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார்

சி. சுப்பிரமணியன்

சாகித்திய அகாதெமி

Vellakal Pa. Subramania Mudaliar : Monograph in Tamil by C. Subramanian, Sahitya Akademi, New Delhi, 2005, Rs. 25

முதல் பதிப்பு: 2005

ISBN-81-260-2088-1

சாகித்திய அகாதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங்ஸ், நான்காம் மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ 25

அச்சு: கோரமண்டல் பிரிண்டர்ஸ்பி லிமிடெட், சென்னை -14

உள்ளுறை

முன்னுரை

1970 களின் தொடக்கத்தில் நான் திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியின் தமிழ்த் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கிறேன். அப்போது பல்கலைக் கழக ஆய்வுப் பட்டப் படிப்பிற்காக முயன்று கொண்டிருந்தேன். பணியிலிருந்து கொண்டே அவ்வாறு ஆய்வு செய்யச் சில கட்டுப் பாடுகள் இருந்தன. எனவே என்னால் ஆய்வு மேற்கொள்ள முடிய வில்லை. இந்த நேரத்தில் பெரும்பேராசிரியர் டாக்டர். மு.வரதராசனார் அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தார்கள். அவர்களுடைய பழைய மாணவன் என்ற முறையில் நான் அவர்களை அணுகி எனதுவிருப்பத்தைச் சொன்னேன்.

''ஓர் ஆசிரியர் தமது கல்வித் தகுதியை வளர்த்துக் கொள்ள முய லும்போது எதுவும் தடைக்கல்லாக இருக்கக் கூடாது'' என்று அவர் கள் தமது கருத்தைக் கூறியதோடு அதற்கான வழிவகைகளையும் வகுத்துத் தந்தார்கள்.

அதுவரை எனது ஆய்வுக்குரிய தலைப்பை நான் முடிவு செய்யா மலேயே இருந்தேன். வணக்கத்திற்குரிய என் பேராசிரியர் பெரு மகனாரிடமே ஒரு தலைப்பைத் தருமாறு கேட்டேன். அப்போது அவர்கள் சொன்னது எனது உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்டது. 'நீங்கள் வேலை பார்க்கும் கல்லூரியுடன் தொடர்புடைய ஒரு தமிழ்ப் பெருங்கவிஞரை எப்போதாவது நினைத்துப் பார்த்தது உண்டா?' என்று கேட்டார்கள். அவர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை உடனே புரிந்து கொண்டேன். ஆய்வுப் படிப்பிற்குரிய விண்ணப்பப் படிவத்தில் ''வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரின் நூல்கள் - ஓர் ஆய்வு'' என்ற தலைப்பை எழுதி அவர்களிடம் காட்டினேன் அவர்கள் சிரித்துக் கொண்டார்கள் 'சிறப்பாகச் செய்யுங்கள் என்றார்கள்' என் பேராசிரியர் பெருந்தகையின் அருள்வாக்காக அதை ஏற்றுக் கொண்டேன். ஆய்வுப் பணியில் ஈடுபட்டேன்; முயன்று முடித்தேன்; பட்டமும் பெற்றேன்.

ஆய்வை மேற்கொண்ட பிறகுதான் வெள்ளகால் முதலியார் அவர் களுடைய ஆழ்ந்தகன்ற இலக்கண இலக்கியப் பயிற்சியும், கவித்திறனும் படைப்பாற்றலும் ஆங்கில மொழிப் புலமையும் அறிவியல் அறிவாற்றலும் எனக்குத் தெரிய வந்தன. அவர்களைப் பற்றிய வரலாற்றை எழுதித் தமிழுக்குக் காணிக்கையாக்க வேண்டு மென்று கருதினேன் ''அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா'' என்னும் மூதுரை எவ்வளவு உண்மையானது என்பதை உணர்ந்து கொண்டேன்.

வெ.ப.சு. அவர்களைப் பற்றிய பொது நிலையில் விவரிக்கும் ஓரிரு நூல்கள் முன்பே வெளி வந்துள்ளன. ஆனால், தமிழ்ப் பெருங் கவிஞரை இந்திய இலக்கியச் சிற்பிகள் என்னும் வரிசையில் வைத்துப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நல்ல வாய்ப்பினை நான் பெறுவதற்கு சாகித்திய அகாதெமியின் சென்னைக் கிளை எனக்கு உதவிற்று. அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணியில் நான் ஈடுபட்டு வெ.ப.சு அவர்களின் சில நூல் களைத் தேடும்போது திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியின் தாளாளராக இருந்த திரு. கி.ந. அம்மையப்ப முதலியார் அவர்கள் அன்பு கூர்ந்து சில நூல்களை அஞ்சல் வழியிலும் ஆள் வாயிலாக வும் அனுப்பி உதவினார்கள் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரியது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநராக இருந்த பேராசிரியர் சு ந. சொக்கலிங்கம் அவர்களும் சில நூல்களைத் தந்துதவினார்கள். அவர்களுக்கும் நான் நன்றியுடையேன்.

திருநெல்வேலி ம தி.தா. இந்துக் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திரு. ச. சங்கரநாராயணன் அவர்கள் இந்நூல் உருவாக்கத்தில் ஆர்வத்துடன் எனக்குத் துணை நின்றார்கள் என் நெஞ்சார்ந்த நன்றி அவர்களுக்கு என்றென்றும் உண்டு.

சென்னை மாநகராட்சி மேனிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. அ சுந்தரேசன் அவர் களும் எனக்கு உற்றுழி உதவினார்கள் என் இதயம் நிறைந்த நன்றி அவர்களுக்கு எப்போதும் உரியது

இந்நூலுக்கு இன்றியமையாத ஆங்கில இலக்கிய நூல்களையும், ஒப்பீட்டு ஆய்வேடுகளையும் தந்து உதவிய பேராசிரியர், முனைவர் அ.அ மணவாளன் அவர்களுக்கு நான் நன்றியுடையேன்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பதிப்பாசிரியர் திரு. மதியழகன் மற்றும் ஆசான் மெமோரியல் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர், முனைவர் தியாகமணி ஆகியோர் இந்நூலின் வளர்ச்சிக்குப் பக்கத் துணையாக நின்று உதவியவர்கள். எனது உளமார்ந்த நன்றியை அவர்களுக்கு உரிமையாக்கிக் கொள்கிறேன்.

சி. சுப்பிரமணியன்

1
வாழ்க்கை வரலாறு

முன்னோர் வரலாறும் முதலியார் பட்டமும்

தொன்மைச் சிறப்புடைய தொண்டைமண்டல வேளாளர் மரபைச் சேர்ந்தவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார். இவருடைய முன்னோர்கள் காஞ்சியைச் சேர்ந்த ஊர்களில் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர். அவருள் வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றவர் அரியநாதர் என்பவர். அவர் காஞ்சிபுரத்தை அடுத்த மெய்ப்பேடு என்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்து விசயநகரப் பேரரசில் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்காலத்தில் படைவீரராகப் பணியாற்றி வந்தார். அப்போது பீஜப்பூர் சுல்தான் விசயநகரப் பேரரசின்மீது படையெடுத்து வந்தார். போர்க்களத்தில் மாற்றார் படைத்தலைவன் சல்மத்கான் என்பவன் கிருஷ்ணதேவராயரைக் குறி வைத்து அவரை நெருங்கினான். இதனைக் கண்ட அரியநாதர் அவ்வீரனுடன் போராடி அவனை அடிபணியச் செய்து எதிரிப்படையைப் புறங்கண்டு தம் மன்னர்க்கு வெற்றி வாகையையும் சூட்டினார்.

அரியநாதரின் இந்த அரியபெரிய வீரதீரச் செயல்களை மன்னர் பாராட்டியதோடு அமையாமல் அவருக்குப் ''படைமுதலி'' என்னும் பட்டத்தைத் தந்து, அவரைப் படைத்தளபதியாக்கி, அமைச்சர்க்குரிய தகுதியையும் வழங்கினார். அன்று முதல் அரியநாதர் ''தளவாய் அரியநாத முதலியார்'' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார் என்பது வரலாற்றுச் செய்தி பின்னர் அரியநாதர் வழிவந்தோர் தமது இயற்பெயருடன் இப்பட்டப் பெயரையும் இணைத்துக் கொண்டனர் 'முதலியார்' என்னும் விருதுப் பெயர் காலப்போக்கில் இனப்பெயராக மாறி வழங்கி வருகிறது என்பதை வரலாற்றால் அறியலாம்

சோழவந்தான்

தளவாய் அரியநாத முதலியார் விசயநகரப் பேரரசர் விருப்பப்படி மதுரைக்கு வந்து விசுவநாத நாயக்கருக்கு முடிசூட்டி அவரது படைத்

தலைவராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் தமது இருப்பிடத்தை மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் இடையில் நெடுஞ்சாலையிலுள்ள சோழவந்தான் என்ற ஊரில் அமைத்துக் கொண்டு அங்கிருந்து அரசியல் நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

வளமார்ந்த சிற்றூராக இருந்த சோழவந்தானுக்குத் தமது இனத்தவரை தாம் பிறந்த மெய்ப்பேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து அழைத்து வந்து குடியமர்த்தினார். சோழவந்தான் நகரமாயிற்று. இங்குக் குடியேறிய குடும்பங்களில் ஒன்றுதான் இந்நூலுடைத் தலைவர் வெள்ளகால் சுப்பிரமணி முதலியார் அவர்களின் முன்னோர் குடும்பம்.

குடும்பப் பெருமை

சோழவந்தானில் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணிய முதலியார். அந்நாளில் ஆர்க்காடு நவாபு மன்னர்களின் பிரதிநிதிகளாக இருந்து திநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த மேடை தளவாய் திருமலையப்ப முதலியார் சோழவந்தான் சுப்பிரமணிய முதலியாரின் மேன்மைக் குணங்களை அறிந்து அவருடன் நட்புக் கொண்டார். பின்னர் தம் உடன்பிறந்தாளின் மகள் உலகண்ணியை அவருக்கு மணமுடித்து வைத்தார். இரு குடும்பங்களும் மண உறவு கொண்டன. இதன்பிறகு சோழவந்தான் சுப்பிரமணிய முதலியார் திருநெல்வேலி மாவட்டத்திற்கு அடிக்கடி வந்து போகும் வாய்ப்பினைப் பெற்றார்.

வெள்ளகாலில் புதுமனை

அவர் ஒரு முறை நெல்லைமாவட்டம், தென்காசிக்கு அண்மையில் அமைந்ததும், பொதிகைத் தென்றல் வந்துலாவும் பொழில் சூழ்ந்ததுமான சிற்றூராகிய வெள்ளகாலுக்குச் சென்றார். நீர் வளமும் நில வளமும் செழித்துக் கொழிக்கும் அதன் இயற்கை எழில், முதலியார் அவர்களின் உள்ளத்தை ஈர்த்தது. குற்றால மலையிலிருந்து கொட்டும் குளிர் அருவிநீர் சிற்றாறு என்னும் பெயருடன் ஓடி வந்து அங்குள்ள வாய்க்காலில் வெள்ளமாகப் பெருகி வரப்புயர்ந்த வயல்களில் பாய்ந்து விளை நிலங்களையெல்லாம் வளம் பெருகச் செய்து கொண்டிருந்தது. எப்போதும் வாய்க்காலில் தண்ணீர் வெள்ளம்போல்

ஓடிக் கொண்டிருந்தமையால் அதற்கு வெள்ளகால் எனப் பெயர் அமைந்தது என்பர்

'திருக்குற் றாலச் சிவபுரி நதியில்
அத்தலத் தெம்பிரான் அருளேபோல
வெள்ளம் பெருகி விரைந்துதன் காலால்
எழுந்து நடக்கும் இயல்பி னாலே
வெள்ள காலென விளம்பு நகர்'

என்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வித்துவான் மு.ரா. அருணாசலக் கவிராயர் வெள்ளகாலின் பெயர்க்காரணம் கூறியுள்ளார்.

வளமார்ந்த வெள்ளகாலில் சோழவந்தான் சுப்பிரமணிய முதலியார் மாளிகை கட்டிக் குடியேறினார். இதனை,

'வழுதி நாட்டிடை வளநா டுற்றதே மானும்
பழுதில் சோழன்வந் தானெனும் பழம்பதி யோன்; அச்
செழிய நாட்டுறு சேரநா டெனத்திகழ் தென்னம்
பொழில் வளம்பொலி வெள்ளகாற் புதுக்குடி புகுந்தோன்'

எனவரும் பாடலில் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.*

குடும்பம் தழைத்தது

சோழ வந்தான் சுப்பிரமணிய முதலியார் - உலகண்ணி தம்பதியர் குடும்பம் தழைக்கலாயிற்று. தம் மகளை மேடை தளவாய் குமார சாமி முதலியாருக்கு மணமுடித்து வைத்தார் தம் மகன் பழநியப்ப முதலியாருக்கு ஆழ்வார் குறிச்சி ஆறை அழகப்ப முதலியாரின் மகளைத் திருமணம் செய்து வைத்தார். அழகப்ப முதலியார் குடும்பம் தளவாய் குடும்பத்திற்கு முன்னரே 'சீமை அதிகாரம்' செய்த பெருமைக்கு உரியது. ஆறை அழகப்ப முதலியார் மதுரை அரசி இராணி மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று சீமைகளின் ஆட்சி நிர்வாகத் தலைவராய இருந்து பெயரும் புகழும் பெற்றவர்

இவ்வாறு இருபெருங் குடும்பங்களிலும் கொண்டும் கொடுத்தும் மணஉறவு பெற்ற சோழவந்தான் சுப்பிரமணிய முதலியாரின்

---

* சுவர்க்க நீக்க மொழிபெயர்படுச் சிறப்புப் பாயிரம்

செல்வாக்கு ஓங்கியது. உடைப்பெருஞ் செல்வராய்ப் பெரும் புகழுடன் வாழ்ந்தவரின் பெயரர்தாம் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார். அவர்கள் தம் முன்னோர் குலப்பெருமை குறித்து

'எமாது தொண்டை மண் டலகுலத் தினர்இரண் டிராமர்
சமானர்; ஆறைமே வகழப்ப தராபதி தளவாய்
குமார சாமிவேந்(து) இவர்கள்கோக் குடிச்சம்பந் தங்கொள்
பெமான், மெய்ச் சுப்பிரமணியன், என் பெயரன்,என்பெயரன்.

என்று கூறியுள்ளார்.

என் பெயரன் - என் பெயரையுடையவன்;
என் பெயரன் - என்னுடைய பாட்டன்.*

பழநியப்ப முதலியார்

சோழவந்தான் சுப்பிரமணிய முதலியாரின் புதல்வர் பழநியப்ப முதலியார். அவர் நிர்வாகத் திறமையும் பொதுநலம் பேணும் பண்பும் மிக்கவராய்த் திகழ்ந்தார். இவரது காலத்தில் 'தளவாய் எஸ்டேட் 'கோர்ட் வார்டு' (Court of Wards) அதிகாரத்தில் இருந்தது. பழநியப்ப முதலியார் அந்தப் பொறுப்பை ஏற்றுத் தளவாய் எஸ்டேட்டை வளர்ச்சியடையச் செய்தார். தமது ஊரான வெள்ள காலுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பல செய்து பெரும்புகழ் பெற்றார். பழநியப்ப முதலியாரின் செய்தவப் பயனாய்த் தோன்றியவரே இந்த நூலின் நாயகர் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

பிறப்பும் இளமைக் கல்வியும்

வெ.ப.சு. முதலியார் அவர்கள் பழநியப்ப முதலியாரின் மூத்த மகனாக 1857ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14 ஆம் நாள் ஆழ்வார்குறிச்சியில் பிறந்தார். பிள்ளைப் பருவம் முடிந்ததும் ஐந்தாண்டுக்காலம் வெள்ளகாலில் வாழ்ந்த இவர் கல்விச் செல்வம் பெற வேண்டித் தம்முடைய அத்தையின் கணவர் திருநெல்வேலி மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். இன்று வ.உ.சிதம்பரனார் தெரு என்று வழங்கப் பெறும் அன்றையத் தெற்குப் புதுத்தெருவில் அமைந்திருந்த கணபதி

---

* சுவர்க்க நீக்க மொழிபெயர்ப்புச் சிறப்புப் பாயிரம்.

வாத்தியாரின் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் வெ.ப.சு. அவர்களின் இளமைக்காலக் கல்விப் பயிற்சி தொடங்கியது.

கணபதி வாத்தியார் என்று மக்களால் மரியாதையுடன் அழைக்கப் பட்ட கணபதியா பிள்ளை சிறந்த தமிழ்ப்புலவர் பரம்பரையைச் சேர்ந்தவர். இப்புலவர் பெருமகனார் பெரும்புலவர் அழகிய சொக்க நாத பிள்ளையின் சிறிய தந்தையார் ஆவார். இவர், தம்மிடம் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனிடத்திலும் அக்கறை காட்டுவார். ஒவ்வொரு நாளும் வகுப்புகள் தொடங்குமுன் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடுவார். தெருவெங்கும் குறள் முழக்கம் கேட்கும். இத்தகைய நல்லாசிரியரிடம் நான்காண்டுகள் படிக்கின்ற பொன்னான வாய்ப்பினை வெ.ப.சு. அவர்கள் பெற்றார்கள்.

''அக்காலத்துத் தமிழ்ப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்களுக்குள்ளே சிறந்த கல்வி அறிவும் போதிக்கும் திறமை உடையவரும் தமது பள்ளிச் சிறுவர்களுக்குக் கல்விப் பயிற்சியும் கடவுள் பக்தியும் நல்லொழுக்கமும் உண்டாகச் செய்தலில் அத்தியந்த சிரத்தை உடைய வருமாக இருந்த கணபதி ஆசிரியர் எனக்குப் பாலப் பருவக் கல்வி பயிற்றியவர் ஆவார்'' என்று தம்முடைய ஆசிரியர் குறித்து வெ.ப.சு. அவர்கள் கரந்தைத் தமிழச்சங்க வெள்ளிவிழா மலரில் (1938) 'அழகிய சொக்கநாதர் வரலாறு' பற்றிய கட்டுரையில் நினைவு கூர்ந்து எழுதியுள்ளார்கள்.

பின்னர் அவர்கள் திருநெல்வேலி அரசடிப் பாலத்தில் இருந்த மிஷன் பள்ளியில் தமிழொடு ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார். இவ்வாறு தளவாய் அரண்மனையிலிருந்து படித்து வந்த வெ.ப.சு. அவர்களுக்குத் தமிழ் இலக்கியங்கள் பற்றி அறிந்து கொள்ளவும், அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் நல்ல வாய்ப்புகள் கிடைத்தன.

புராண, இதிகாசங்களில் ஈடுபாடு

அரண்மனையில் முத்துசாமிப் பிள்ளை என்பார் வேலை பார்த்து வந்தார். அவர் ஒளியிழந்த கண்ணுடையார். ஆனாலும் அறிவுக்கண் ணொளி பெற்றவர். பாரதம், இராமாயணம், திருவிளையாடற்புராணம் போன்ற இதிகாசங்களிலும், புராணங்களிலும் ஆழ்ந்த புலமைமிக்க வர். கருத்துகளைக் கேட்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் எடுத்துக் கூறும் சொல்வன்மையும் பெற்றிருந்தார். சின்னஞ்சிறு வயதில் வெ.ப சு. அவர்கள் அவரிடம் கதை கேட்டு மகிழ்வார்.

அரண்மனையில் பாரத அம்மானை, வைகுண்ட அம்மானை, பவளக்கொடிமாலை, முதலிய நூல்கள் முறையாகப் படிக்கப்பட்டு வந்தன வெ.ப.சு. அவர்கள் அவற்றையும் விரும்பிக் கேட்பதுண்டு இவை யாவும் அவருடைய இலக்கிய ஆர்வத்துக்கு உரமூட்டின. தமது ஒன்பதாம் வயதிலேயே அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய சிறு நூல்களைக் கற்றார். பன்னிரண்டாம் வயதில் திருக்குற்றாலத் தலபுராணம், வரகுணாதித்தன் மடல், விறலிவிடு தூது போன்ற நூல்களையும், பதினான்காம் வயதில் 'கூளப்ப நாயக்கன் காதல்' நூலையும் படித்து முடித்தார். 'கற்றனைத் தூறும் அறிவு' என்பதற்கேற்ப வெ ப.சு அவர்கள் இளமையிலேயே பெற்ற இலக்கியப் பயிற்சி பிற்காலத்தில் அவர்களது தமிழ்ப்புலமைக்கு அடித்தளமாய் அமைந்தது

புலவர்களுடன் தொடர்பு

பழங்காலத் தமிழ் மன்னர்கள் அவையில் புலவர்கள் கூடியிருந்து தமிழை வளர்த்தது போலத் தளவாய் முதலியார் அரண்மனையிலும் நிகழ்ந்து வந்தது. திருநெல்வேலியை அடுத்துள்ள தச்சநல்லூர் என்னும் சிற்றூரைச் சேர்ந்த பெரும்புலவர் அழகிய சொக்கநாதப் பிள்ளை அடிக்கடி தளவாய் அரண்மனைக்கு வருவதுண்டு ஒரு முறை சென்னை சி.வை தாமோதரம்பிள்ளை தொல்காப்பியத்தைப் படியெடுக்க விரும்பினார். தமது விருப்பத்தை அவர் தளவாய் இராமசாமி முதலியாரிடம் கூறினார். அதனை ஏற்றுக் கொண்ட தளவாய் அவர்கள் புலவர் அழகிய சொக்கநாத பிள்ளையிடம் படியெடுக்கும் பணியை ஒப்படைத்தார்கள் புலவர் நுண்மாண் நுழை புலம் மிக்கவர். திருநெல்வேலி காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், காந்திமதி கலித்துறை அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்கள் பலவற்றை இயற்றியவர். அவர் அரண்மனைக்கு வரும்போதெல்லாம் அவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

அக்கூட்டத்தில் ஒருவராக அமர்ந்து வெ ப.சு. அவர்கள் அரும் பொருள் விளக்கங்களைக் கேட்டு அறிந்து கொள்வார். 'கற்றலின் கேட்டல் நன்று' என்னும் வழக்கம் அவரிடம் இயல்பாகவே அமைந்து விட்டது. அவரது இலக்கிய ஆர்வத்தையும் அறிவு நுட்பத்தையும் கண்ட புலவர் பெருமக்கள் அவரிடம் அன்பு பாராட்டி நெருங்கிப் பழகினர் புலவர்கள் கூடுமிடமெங்கும் அவர்களுடன் இருந்து அவர்

களின் கவிதைகளையும் ஆய்வுரைகளையும் கேட்டுக்கேட்டு வெ.ப.சு. அவர்கள் தமது புலமைத்திறனை வளர்த்து வந்தார்கள்.

தமிழ் விருந்தளித்த நெல்லைச் சவுக்கை

அக்காலத்தில் திருநெல்வேலி தெற்குப் புதுத்தெருவின் தென் பகுதியில் கவிராஜ நெல்லையப்ப பிள்ளையின் இல்லம் அமைந்திருந்தது. அவ்வீட்டின் பின்புறம் ஒரு தோட்டம். அங்கு ஓர் அழகான சவுக்கை, புலவர்கள் கூடும் சங்கமாக அது விளங்கிற்று. இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த வள்ளல் முத்துசாமிப் பிள்ளை அவர்கள் அந்தச் சவுக்கையில் வந்து தங்குவது வழக்கம். அவர் கவிச்சுவை உணர்வு மிக்கவர். எனவே புலவர்கள் அவரைத் தேடிவந்து கவிதை கள் பாடி மகிழ்விப்பார்கள். முத்துசாமி பிள்ளையவர்கள் கவிஞர் களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்பப் பரிசுகளை வழங்குவார். தமிழ்ச் சங்கமாக விளங்கிய அந்தச் சவுக்கையில் கூடும் புலவர்களுள் வேம்பத்தூர் பிச்சு ஐயர், கல்போது புன்னைவனக் கவிராயர், முகவூர் கந்தசாமிக் கவிராயர் அவர் குமாரர் அருணாசலக் கவிராயர், சுப்பிர மணியக் கவிராயர், இன்னும் சிறப்பாகச் சென்னிகுளம் அண்ணா மலை ரெட்டியார் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவராவர். வெ ப.சு அவர்களின் இலக்கிய அறிவுப் பசிக்கு இந்த இடம் நல்ல விருந்து அளித்து வந்தது

இலக்கிய இலக்கணப் பயிற்சி

கவிராயர் நெல்லையப்ப பிள்ளைக்கும் வெ.ப.சு அவர்களுக்கும் நெருங்கிய நட்புறவு உண்டாயிற்று. இருவரும் சேர்ந்து பல புராண இலக்கியங்களைக் கற்றனர். வெ.ப.சு. அவர்கள் இருபது வயதுக்குள் சிற்றிலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தபின் நன்னூல், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி, பிரயோக விவேகம் ஆகிய இலக்கண நூல்களையும் கருத் தூன்றிக் கற்றுத் தேர்ந்தார்கள் தேர்வு எழுதிப் பட்டம் பெறுவதற்காக அவர் படிக்கவில்லை. ஆர்வ மிகுதியினால் இலக்கிய இலக்கணங்க ளைக் கற்று வந்தார். இது பிற்காலத்தில் நல்ல பல இலக்கியங்களைப் படைக்க அவருக்கு உறுதுணையாக இருந்தது.

இந்துக் கலாசாலைக் கல்வி

வெ.ப சு அவர்கள் பள்ளிப் படிப்பையும் விட்டுவிடவில்லை திருநெல்வேலி அரசடிப் பாலத் தெருவிலிருந்த மிஷன் பள்ளியில் படித்து முடித்தபின் அக்காலத்தில் திருநெல்வேலிப் பாலம் என்று வழங்கப் பட்ட திருநெல்வேலிச் சந்திப்பில் அமைந்த இந்துக் கலாசாலைப் பள்ளியில் மெட்ரிகுலேசன் வகுப்பில் சேர்ந்தார்கள். பிற்காலத்தில் அமைச்சராக இருந்தவரும் 'சர்' 'நைட்' போன்ற பட்டங்களைப் பெற்ற வருமான டி.என். சிவஞானம் பிள்ளை அப்போது முதலியார் அவர் களுடன் படித்து வந்தார். இருவரும் நெருங்கிய நண்பர்களாகவும் இருந்தனர். இருவரும் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றனர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரிக் கல்வி

மெட்ரிகுலேசன் படிப்பை முடித்துவிட்டு வெ.ப.சு அவர்கள் வெள்ளகாலுக்குத் திரும்பிவிட்டார்கள். இவருடைய பள்ளி நண்பர் டி.என். சிவஞானம் பிள்ளை சென்னைக்குச் சென்று கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்தார்கள் அவர் தம்முடைய நண்பர் மேற்படிப்புக்கு வராததைக் கண்டு வெ.ப.சு அவர்களைக் கடிதங்கள் வாயிலாக வருமாறு வேண்டிக் கொண்டார் எனினும் வெ.ப.சு அவர்கள் சென்னைக்குப் போகவில்லை. சிவஞானம்பிள்ளை வருந்தி வருந்தி அழைத்தமையால் இறுதியில் வெ ப சு அவர்கள் தம் நண்பரின் வேண்டுகோளை ஏற்றுச் சென்னை சென்றார் கல்லூரியில் சேர்வதற் கான காலம் கடந்துவிட்ட போதிலும் சிவஞானம் பிள்ளை அவர்க ளின் முயற்சியினால் வெ.ப.சு அவர்கள் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்தார்கள் அது ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். அவர் கள் வகுத்த கல்வித் திட்டத்தின்படி படித்துத் தேர்ச்சி பெற வேண்டும். வெள்ளைக்காரப் பாதிரியார்களே கல்லூரிப் பேராசிரியர்களாக இருந்தனர். அந்தச் சூழ்நிலையில் வெ ப.சு அவர்கள் கல்வி கற்றதில் குறையொன்றுமில்லை. இவர்களுடன் படித்தவர்களும் மேல் வகுப்பில் படித்தவர்களும் இவர்களிடம் வந்து தமிழ்ப்பாடத்தில் தமக்குள்ள ஐயங்களைக் கூறி இவர் தரும் விளக்கங்களைப் புரிந்து கொண்டு தெளிவு பெறுவார்கள் இத்தகைய சூழலில் அவர்களுக்காகத் தாம் கம்பராமாயணத்தைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றதாக வெ.ப சு. அவர்கள் தம் நண்பர்களிடம் கூறியிருக்கிறார்கள்

வெ.ப சு அவர்கள் அறிவாற்றல் மிக்கவராய் இருந்தும் 1878-79 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் நடைபெற்ற பல்கலைக்கழகத் தேர்வுகளில் வெற்றிபெறவில்லை. பட்டப்படிப்பிற்கான இந்தக் கல்வி வெ.ப.சு அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டதன்று. தம் பள்ளி நண்பர் டி.என். சிவஞானம் பிள்ளையின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் அவரது கட்டாயத்திற்காகப் படித்தாரேயன்றித் தாமாக விரும்பிக் கற்கவில்லை. ஆனால், இவர்கள் பின்னர் ஈடுபாட்டுடன் படித்த தொழிற் கல்வியில் பாராட்டுக்குரிய முறையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறித்தவக் கல்லூரி அனுபவங்கள்

கல்லூரித் தேர்வில் தமக்கு வெற்றி கிடைக்காமற்போனாலும் கிறித்துவக் கல்லூரி வாழ்க்கையை வெ.ப.சு அவர்கள் பெருமையாகவே பேசுகிறார்கள். அங்கு டாக்டர்.மில்லர், கூப்பர், அலெக்ஸாண்டர், பேட்டர்சன், மெக்டனால்டு ஆகிய வெளி நாட்டு ஆசிரியர் பெருந்தகையோரிடமும் சுப்பராமையர், ரெங்கையச்செட்டி, சின்னசாமிப்பிள்ளை, ரெங்கசாமி ராசா ஆகிய நம் நாட்டு ஆசிரியர் பெருமக்களிடமும் படிக்கக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதினார்கள். மேலும் டாக்டர்மில்லர் போன்ற பாதிரிமார்களுடன் பழகும்போது உயிரினும் மேலான ஐந்து ஒழுக்க நெறிகளை இவர்கள் கற்றுக்கொண்டு தமது வாழ்விலும் தவறாமல் பின்பற்றி வந்தார்கள்.*

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிப் புலமையையும் வாழ்க்கை நெறிகளையும் நல்லாசிரியப் பெருமக்களிடமிருந்து பெற்ற பின்னர் வெ.ப.சு தமது ஊருக்குத் திரும்பிச் சொந்த நிலங்களில் வேளாண்மையில் ஈடுபட்டார்கள்

---

* புலனடக்கம் (To be sexually pure), கள்ளுண்ணாமை (Not to touch liquor) புலால் உண்ணாமை - கொள்கையால் மட்டுமன்றி நடைமுறையிலும் To avoid flesh - (not on principle, but on convention) தமிழில் எழுத்தறிவும் கல்வியறிவும் பெறுவதில் எல்லோர்க்கும் முன்னே நிற்பது (Not to be behind anybody in writing as well as understanding Tamil) ஆங்கில மொழியறிவில் எல்லோர்க்கும் முன் நிற்பது (Not to be behind, anybody in understanding English)

தொழிற்கல்வி

வெ.ப.சு அவர்களின் தந்தையார் பழநியப்ப முதலியார், தமது செல்வாக்கால் தம் மகனை முதலில் அரசாங்க வேலையில் அமர்த்தினார். இந்த நேரத்தில்தான் சென்னை-சைதாப்பேட்டையில் அரசு, வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்கிற்று முதலியார் அவர்கள் அதில் சேர்ந்து படித்து 1884ஆம் ஆண்டில் G.M.A.C (Graduate of the Madras Agricultural College). பட்டம் பெற்றார்கள். வேளாண்மை வெ.ப.சு அவர்களின் குடும்பத் தொழில். எனவே அத்துறையில் இவருக்கு ஆர்வம் மிகுதியாக இருந்ததாலும் 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' என்பதன் அடிப்படையிலும் வேளாண்மைக் கல்வியைச் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தார்கள். அக்கல்வியில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகத் தேர்வு பற்றியோ பட்டம் பெறுவது பற்றியோ கவலையின்றிப் படித்து வெற்றிபெற்றார்கள்.

வேளாண் கல்லூரியில் பட்டம் பெற்றபின் கால்நடை மருத்துவத் துறையில் 1885-87 வரை பணிபுரிந்தார்கள். பின் 1890 இல் அந்தத் துறை எடுக்கப் பட்டது. வெ.ப.சு ரெவன்யூ போர்டு அலுவலகத்தில் வேலையில் சேர்ந்தார். அரசு மீண்டும் கால்நடை மருத்துவத் துறையைத் தொடங்கியது. முதலியார் அவர்களைத் திரும்பவும் அத்துறையில் அரசு நியமனம் செய்தது. அத்துறையில் உயர் கல்விக் காக அவர்கள் பம்பாய் வெட்னெரிக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கப் பட்டார். அங்கு ஆர்வமுடன் கற்று G.B.V.C.(Graduate of the Bombay Veterinary College) என்ற பட்டம் பெற்றார்.

மேற்கொண்ட பணிகள்

கால்நடை மருத்துவக்கல்வி, முதலியார் அவர்களுக்கு நீண்ட கால வேலை வாய்ப்புக்கு உதவியது. 1895 ஆம் ஆண்டில் அவர் கள் கால்நடை மருத்துவத் துறையில் 'முதுநிலை கால்நடை மருத் துவ உதவியாளராகக்' (Senior Veterinary Assistant) காலெடுத்து வைத்து ஆறாண்டுகளுக்குப் பின்னர் 1911ஆம் ஆண்டில் துணைக் கண்காணிப்பாளராக (Deputy Superindentent) பதவி உயர்வு பெற்றார்கள்.

இவர்களது தகுதிக்கும் திறமைக்கும் இது ஒரு பெரிய பதவி இல்லைதான். அப்போது இவர்கள் பெற்ற மாத ஊதியம் ரூபாய்

இருநூறு மட்டுமே செல்வக்குடியில் பிறந்து வாழ்ந்த வெ.ப.சு அவர்களுக்கு இத்தொகை பெரிதாகத் தோன்றவில்லை. இவர்கள் ஊதியம் கருதி உழைத்திருந்தால்தானே பணத்தைப்பற்றிக் கணக்குப் பார்த்திருப்பார்கள். அரசுப் பணி புரிவது ஒரு கௌரவம் (prestige) என்ற கருத்து மக்களிடையே பரவியிருந்த காலம் அது ஆனாலும் இத்தகைய கௌரவத்தைப் பாராட்டாமல் ஏற்ற பணியில் ஈடுபாடு கொண்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளையும் நன்மதிப்பையும் வெ.ப.சு அவர்கள் பெற்றிருந்தார்கள்

அவர்கள் திறம்படப் பணி புரிந்து 15 8.1915இல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்கள். முதலியார் அவர்களின் பணி துறைதோறும் மேலதிகாரிகளின் பாராட்டுகளையும் நன்மதிப்பையும் பெறுமாறு அமைந்தது.

கால்நடை மருத்துவ நூல்கள் (மொழிபெயர்ப்பு)

வெ.ப.சு அவர்கள் வாழ்ந்த காலத்தில் கற்றோரும் மற்றோரும் ஆங்கிலமொழி மோகம் கொண்டிருந்தனர். ஆனால் வெ.ப.சு. அவர்கள் அறிவியல் துறையில், குறிப்பாக - கால்நடை அறிவியல் துறையில் தமிழுக்கு ஆற்றிய தொண்டுக்குத் தமிழ்ச் சமுதாயம் நன்றிக் கடன் பட்டுள்ளது.

1 இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம் (Indian Stock Owners' Manual Lieut Col James Mills, Inspector of Cattle Diseases). 2. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகின்ற அதிக பிராணாபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம் (More Deadly Forms of Cattle Diseases is India) என்னும் இவ்விரு நூல்களும் அவர்களது மொழிபெயர்ப்பு நூல்களாகும். இவற்றை அன்றைய அரசே வெளியிட்டது இவை ஐரோப்பியக் கால்நடை மருத்துவம் பற்றி முதன் முதலில் வெளிவந்த தமிழ் நூல்கள். இவை தவிர வெ.ப.சு அவர்கள் 'அம்மை குத்துதலும் அதன் உபயோகங்களும்' என்னும் ஒரு சிறு நூலையும் எழுதியுள்ளார்

அறிவியல் தமிழின் முன்னோடி

அறிவியல் நூல்களையும் தமிழில் எழுத முடியும் - எளிதில் புரியுமாறு எழுத முடியும் - இனிய எளிய செய்யுள் வடிவிலும் எழுத முடியும் என்று முதலியார் அவர்கள் சாதித்துக் காட்டியுள்ளார்கள்.

பாரதியார் தோன்றி 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று பாடிக்காட்டு முன்பே அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த வெ.ப.சு அவர்களின் செயல் வியந்து பாராட்டுதற்குரியது

கால்நடைத் துறையில் வெ.ப.சு அவர்களுக்கு உயர் அதிகாரிகளாக இருந்தவர்கள் ஆங்கிலேயர்கள். அவர்கள் ஓர் இந்தியரை - ஒரு தமிழரை எளிதில் பாராட்டிவிட மாட்டார்கள். ஆனால், தகுதியும் திறமையும் கொண்ட ஒருவரைப் பாராட்டாமல் விடவும் மாட்டார்கள். மேலதிகாரிகளின் பாராட்டுதல்கள் வெ.ப.சு அவர்களுக்குக் கிடைத்தன என்றால் அவர்களின் கடமை உணர்வு, நேர்மை, தன்னலமற்ற கடின உழைப்பு இவைதாம் காரணம். இவர்தம் உயரிய பண்புகளுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகளே பரிசுகளாக அமைந்தன.*

இல்லற வாழ்க்கை

'இல்லறமல்லது நல்லறமன்று' என்பதற்கேற்ப அறன் எனப்பட்ட இல்வாழ்க்கையிலும் வெ.ப.சு அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். அவருடைய பெற்றோர் அவருக்கு ஆறை இராமலிங்க முதலியார் மகள் வேலம்மாள் அண்ணியை மணம் செய்து வைத்தார்கள். வேலம்மாள் அண்ணியார் தம் கணவருடன் கருத்தொருமித்து அவருக்கு ஆதரவாக அன்புடன் வாழ்ந்து வந்தார்கள். இனிய வாழ்க்கைத்

---

*1. I specially ask for the services of this office as he (V.P.S) managed matters last year with conspicuous success and his previous experience will be invaluable - (J.Andrew Esq).

2..... a great credit is due to him (V.P.S) for his endeavours in obtaining a very wide popularity for the new treatment in Tanjore Dt. (Lt.Col. W.D. Gunn) - Extracts from memorandam no. 327. R.D. 30-4-1906.

3. .... He is an extremly hard-working and trust-worthy officer, worthy of promotion (Extract from the endorsment Dis.no.831 dt. 12.9.1901.)

4. Stock Inspector Subramania Mudaliar has invariably carried out his duties to my entire satisfaction. I consider him to be a very valuable Veterinary Assistant. I believe him also to be absolutely trust-worthy in the execution of his duty and I strongly recommend him for whatever promotion the Board see him fit to confer on him (Extracts from letter Dis.No. 837 dt.14.9.1901-J.D.E. Holmes M.A., A.V.D. Supt. C.V. Dept.)

துணையாக வேலம்மாள் அண்ணியார் வெ.ப.சு அவர்களுடன் பத்தொன்பது ஆண்டுகள் இல்லறம் நடத்தி 1899ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இவர் மறைந்த ஓராண்டிற்குப் பின் வெ.ப.சு அவர்கள் மறுமணம் செய்து கொண்டார்கள். தென்காசி வட்டம் கிடாரக்குளம் இராமசாமி முதலியாரின் மகள் வடிவம்மாள் அண்ணி வெ.ப.சு அவர்களின் இரண்டாம் மனைவியாவார். வடிவம்மாள் அண்ணியுடன் நடத்திய இல்வாழ்வின் நற்பயனாகச் செல்லம்மாள் அண்ணி, பழநியப்ப முதலியார், தீர்த்தாரப்ப முதலியார் ஆகிய நன் மக்களை அடையும் பேற்றினை வெ.ப.சு அவர்கள் பெற்றார்கள்.

பொதுநலப் பணிகள்

ஓய்வு பெற்ற பின்னரும் ஓய்ந்திராமல் மக்கள் தொண்டு செய்ய வெ.ப.சு. அவர்கள் உள்ளம் விரும்பியது. அதற்கேற்பப் பொதுநலப் பணிபுரியும் சூழலும் உருவாயிற்று.

அவர்கள் கால்நடை மருத்துவத்துறையில் ஆற்றிய பணிகளையும், காட்டிய ஆர்வத்தையும் நன்கறிந்த அன்றைய அரசு அவருக்குச் சில பதவிகளை வழங்கிப் பொதுநலத்தொண்டில் அவரை ஈடுபடுத்தியது.

1916ஆம் ஆண்டு அரசு வெ.ப.சு அவர்களைத் திருநெல்வேலி தாலுக்கா போர்டு (Taluk Board) உறுப்பினராக நியமித்தது. அங்கும் இவர் படிப்படியாகப் பதவி உயர்வுபெற்றார். 1919ஆம் ஆண்டில் அதன் துணைத்தலைவராகவும் அதற்கு அடுத்த ஆண்டில் தலைவராகவும் நியமிக்கப்பெற்றார். அதே ஆண்டில் வெ.ப.சு அவர் களின் நண்பர் டி.என். சிவஞானம் பிள்ளை மாவட்டக் கழகத் தலைவர் (District Board President) ஆனார்.

முதலியார் அவர்கள் தாலுக்கா போர்டு தலைவராகப் பணிபுரிந்த காலத்தில் பல நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். இவர் தம் திறமைக்கு எடுத்துக்காட்டாக இவர் ஆற்றிய பணிகளுள் ஒன்றனை இங்குக் குறிப்பிடலாம்.

திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையத்திற்கு மேற்கில் வெற்றிட நிலப்பகுதி கவனிப்பாரற்றுக் கிடந்தது. குப்பைக் கிடங்கு களும் சாக்கடை நீர்த்தேக்கங்களும் நிறைந்த அந்த இடம் சுற்றுச் சூழலை மாசுபடுத்திக் கொண்டிருந்தது. இதனை அடுத்த வெற்றிட மனைகளும் பயனற்றுக்கிடந்தன. முதலியார் அவர்களின்

திறமையால் இந்தப் பகுதி சீரடைந்தது. அந்த இடங்களைப் பயன் படுத்திக் கொள்ளும் வகையில் அவை தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டன. இதன் மூலம் தாலுக்கா போர்டுக்குச் செலவு ஏதும் இன்றி ஆண்டொன்றுக்கு ரூபாய் ஐயாயிரம் வருவாய் கிடைக்கத் தொடங்கியது. அப்போது அது மிகப்பெரிய தொகையாகும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல(து) அரசு

(குறள்: 384)

என்றார் வள்ளுவப் பெருந்தகை. இந்த வல்லமையை வெ.ப.சு அவர்களிடம் காண்கிறோம். இவர்களது ஆக்கப் பணிகளுக்கு அப்போது ஜில்லா போர்டின் (District Board) நியமனத் தலைவராக இருந்த இவர்களுடைய நண்பர் சர்.டி.என். சிவஞானம் பிள்ளை அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள்.

ஒழுக்கமும் நேர்மையும் கொண்ட வெ.ப.சு அவர்களின் நிர்வாகத் திறமையைக் கண்ட அன்றைய ஆங்கில அரசின் மாவட்ட ஆட்சியர் (District Collector) லயனல் டேவிட்சன் (Lionel Davidson Esq), வெ.ப.சு. அவர்களைத் தென்காசி பெஞ்ச் கோர்ட்டின் (Bench Court) தலைவராக 1922ஆம் ஆண்டில் நியமனம் செய்தார். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாது வழக்கு களைத் தீர்த்து வைத்த இவர்களது திறமையை வழக்குத் தொடுத்தவர் களும், அவர்களை எதிர்த்தவர்களும் - வாதியும் பிரதிவாதியும் மனநிறைவுடன் புகழ்ந்தனர்

இராவ்சாகிப் பட்டம் பெறுதல்

நெறிமுறை தவறாது அவர்கள் ஆற்றிவந்த பொதுநலப் பணிகளை அறிந்த மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வெ.ப.சு அவர்களுக்கு 1926ஆம் ஆண்டு ஜனவரியில் 'இராவ் சாகிப்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

1 5.1926இல் தென்காசியில் நடைபெற்ற பெரிய விழாவில் அன்றைய மாவட்ட ஆட்சியர் (District Collector) A.M.C.G. Tampoe Esq., M.A.; I.C.S. அவர்கள் இவ்விருதினை முதலியார் அவர்களுக்கு வழங்கிப் பெருமைப் படுத்தினார்.

தமிழ் உணர்வு

முதலியார் அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றும் கேட்டும் ஆழ்ந்த புலமை பெற்றவர். இலக்கியங்களை இயற்றித் தமிழுக்குத் தொண்டு செய்தவர். அவர்களது இலக்கியப் பணிகளுக்கு மேலாக அவர்கள் கொண்டிருந்த தமிழ் உணர்வு பின்வரும் தலை முறையினர்க்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

நம்நாடு அந்நியர்க்கு அடிமைப்பட்டுக்கிடந்த காலத்தில் அன்றைய ஆட்சிமொழியாக இருந்த ஆங்கிலமே உயர்ந்தது என்ற கருத்து கற்றவரிடையேயும் நிலவியது; நமது தாய் மொழியின் வளர்ச்சிக்கு வாய்ப்பில்லை என்ற எண்ணமும் இருந்து வந்தது. இந்தக் காலக் கட்டத்தில் வாழ்ந்த முதலியார் அவர்கள் தமிழ்மொழியின் ஆற்றலை நாடறியச் செய்தார்கள்

தமிழால் முடியும்

அறிவியல் நூல்களைத் தமிழில் கற்பிக்க முடியாது; அதற்கான பாடநூல்களும் இல்லை, பாடநூல்களை எழுதவும் இயலாது என்று நிலவியிருந்த கருத்தை மறுத்துத் 'தமிழில் அறிவியலைக் கற்பிக்க முடியும்' என்றும் 'பாடநூல்களை இயற்ற முடியும்' என்றும் ஆணித்தர மாகக் கூறினார்கள். வெறும் வாய்ச்சொல்லுடன் நின்றுவிடாமல் மறுக்க முடியாத ஆதாரங்களையும் அளித்தார்கள்.

தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்தல் வேண்டும் என்ற ஓர் இயக்கம் தோன்றியது. சட்டமன்றத்திலும் இது தொடர்பான கிளர்ச்சியும் நடைபெற்று வந்தது. இதன் விளைவாக அரசு, குழு ஒன்றை அமைத்தது; இதைப்பற்றி ஆய்ந்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொண்டது. குழுவில் இருந்த பலரும் மாறுபட்ட கருத் துடையவர்கள் அக்குழுவின் முன் முதலியார் அவர்கள் தமது கருத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்கள்.

மருத்துவக் கல்லூரியில் பாடங்களைத் தமிழில் நடத்த முடியும். அதற்குரிய நூல்கள் நெடுங்காலத்துக்கு முன்பே எழுதப்பட்டுள்ளன என்று சொன்னதோடு குழுவினரின் பார்வைக்கு மருத்துவக்கல்வி தொடர்பான நான்கு தமிழ் நூல்களையும் முதலியாரவர்கள் வைத்தார்கள். அவை, உடற்கூறு (Anatomy), மருந்து (Medicine), அறுவை மருத்துவம் (Surgery), பேறுகால மருத்துவம் (Midwifery) என்பன

இந்நூல்களைப் பற்றிய விவரங்களை இங்குத் தருவது மிகையாகாது. அமெரிக்க மிஷனைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் எஃப். க்ரீன் (Dr. Samuel F. Green, M.D.) என்ற பாதிரியார் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு வந்து அங்கே அமெரிக்க - இலங்கை மிஷனைத் தொடங்கினார்.

'யாழ்ப்பாண ஆபத்துக்குதவும் சங்கம்' (Jafna Friend-in-need Society) ஒன்றை நிறுவினார். அதன் சார்பில் மருத்துவக்கல்லூரி ஒன்றையும் தொடங்கி வைத்தார். அங்குப் பயிலும் மாணவர் களுக்குத் தமிழில் மருத்துவக் கல்வியைக் கற்பிக்க நூல்களைத் தமிழில் எழுதச் செய்தார். இச்செய்திகள் அந்நூல்களில் காணப் படுகின்றன.

நான்கு மருத்துவ நூல்கள் தமிழில் எழுதப்பட்டன.

1. உடற்கூறு (Human Anatomy)

இது கிரே, ஹார்னர், ஸ்மித் மற்றும் வில்ஸன் (Gray, Horner, Smith & Wilson) என்ற பேராசிரியர்களால் எழுதப்பட்டது. டேனியல் டபிள்யூ சாம்ப்மன் (Daniel W. Champman) என்ற மருத்துவரால் மொழி பெயர்க்கப் பட்டு 1872இல் யாழ்ப்பாணம் மணிப்பாய் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் 840 பக்கங்களைக் கொண்டது.

2. மருந்து (Medicine)

இந்நூல் ஹூப்பர் (Hooper) என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வில்லியம் பால் (William Paul) என்பவரால் வைத்தியாகரம் என்ற தலைப்புடன் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. 922 பக்கங்களைக் கொண்ட இந்நூல் திருவிதாங்கோட்டிலுள்ள நாகர்கோவில் இலண்டன் மிஷன் அச்சியந்திர சாலையில் 1872-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

3 அறுவை மருத்துவம். (Surgery)

ட்ருவிட் (Drwitt) என்பவர் 'The Science and Art of Surgery' என்ற தலைப்பில் இந்நூலை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இதனை ஜோஷுவா டான்போஃர்த் (Joshua Danforth) என்பவர் தமிழில் மொழிபெயர்த்தார்.

504 பக்கங்களைக் கொண்ட இந்நூல் மணிப்பாய் அச்சுக்கூடத்தில் 1867-இல் அச்சிடப்பெற்றது.

4. பேறுகால மருத்துவம் (**Mid-wifery**) இது 300 பக்கங்களைக் கொண்ட நூல்.*

அறிவியல் நூல்களைத் தமிழில் கற்பிக்க முடியும் என்று சான்று காட்டி நிறுவிய முதலியார் அவர்கள் சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்களுடைய காலச் சூழலில் அவர்கள் செய்த இந்தப்பணி பெரிதினும் பெரிது.

ஒரு மொழியில் கலைச் சொற்கள் எப்படி எப்போது உருவாகும்? எவ்வாறு அது நடைமுறைக்கு வரும்? என்ற விளக்கங்களையும் அக்குழுவினரிடம் முதலியார் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இதுவே உண்மையான மொழி உணர்வு. 'துறைதோறும் துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசனார் பாடிக்காட்டுவதற்கு முன்பே வெ.ப.சு அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். இவர்களுடைய இந்த முயற்சியே மீனாட்சி தமிழ்க் கல்லூரியும் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் உருவாகக்காரணமாக அமைந்தது. பாட நூல்களைப் பார்வையிட்டும் முதலியார் அவர்கள் கூறிய விளக்கங்களைக் கேட்டும் வியப்படைந்த குழுவினர், முதலியார் அவர்களைப் பெரிதும் பாராட்டினர்.

நியமனக்குழு உறுப்பினர்

சென்னைப் பல்லைக்கழகத்தில் தமிழ்த் துறைக்குப் பேராசிரியரை நியமிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவில் பல்கலைக் கழகத் துணைவேந்தர், விட்டில் ஹைஸ், பாலசுப்பிரமணிய ஐயர், உ.வே சாமிநாத ஐயர், நீலகண்ட சாஸ்திரி, வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் ஆகிய ஐவர் உறுப்பினர்களாக இருந்தனர்.

ஒரு பழம்பெரும் பல்கலைக்கழகப் பேராசிரியரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் உறுப்பினராக இருக்கும் தகுதியை வெ ப.சு அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பது பெருமைக் குரியதாகும்

கலைச் சொல்லாக்கக் குழு

1934ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட 'சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்' ஆற்றிவந்த ஆக்கப் பணிகளில் 'கலைச்சொற்கள்'

*சுப்பிரமணிய பிள்ளை, இ.மு , நெல்லைத் தமிழப்புலவாகள், சைவசிததாந்தக் கழகம், திருநெலவேலி, 1959

என்னும் நூலை வெளியிட்டதும் ஒன்றாகும். கலைச் சொல்லாக்கத்திற் காகத் தமிழ்ச் சங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவிலும் முதலியாரவர்கள் முதன்மைப் பொறுப்பேற்றுச் செம்மையாகச் செயல் பட்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகம், திருவாங்கூர் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் அன்றைய சென்னை முதலமைச்சராக இருந்த சி. இராஜகோபாலாச்சாரியாரின் ஆதரவுடனும் 'கலைச்சொற்கள்' என்னும் நூல் அச்சாகி வெளி வந்தது. வேளாண்மைத் துறைக்குரிய கலைச்சொல்லாக்கம் வெள்ளகால் முதலியார் அவர்களின் முயற்சியால் உருவாயிற்று.

நண்பர்கள்

'செயற்கரிய யாவுள நட்பின்' என்பார் வள்ளுவனார். இளமைப் பருவத்திலிருந்தே முதலியார் அவர்கள் புலவர் பெரு மக்களுடனேயே பழகி வந்தார்கள்.

'அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்'

(குறள் 441)

என்ற முறையில் இவர்கள் பழகத்தேர்ந்தெடுத்த பெரியோர்கள் எல்லோரும் தமிழ்ச் சான்றோர்கள். அவர்களுள் சிலரைப்பற்றி இங்குக் குறிப்பிடலாம்.

அழகிய சொக்கநாத பிள்ளை

அழகிய சொக்கநாத பிள்ளை திருநெல்வேலியை அடுத்த தச்ச நல்லூரில் வாழ்ந்த வன்னியப்ப பிள்ளையின் புதல்வர். வன்னியப்ப பிள்ளை சிறந்த சிவநெறிச் செல்வர். தமிழ் ஆசிரியராகச் சிறப்புறப் பணியாற்றியவர். சைவப்பற்றும் தமிழ்ப் பற்றும் மிக்க வன்னியப்ப பிள்ளையின் குடும்பத்தில் தோன்றியவர் அழகிய சொக்கநாதர். இவர் பல்துறை வித்தகர். நூல் விளக்கம் செய்வதிலும் நூல் பிரதியெடுப்ப திலும் வல்லவர். இவர் கையெழுத்து அச்சுப் பதித்தாற்போல் அழ குற அமைந்திருக்கும். சிறந்த கவிஞரான இவர் ஓவியப் புலவராக வும் விளங்கினார். இசைநயம் செறிந்த இவரது தமிழிசைப் பாடல் களே தமது இசைப்பயிற்சிக்கு அடிகோலியதாக திருவனந்தபுரம் இசைமணி இலக்குமண பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அழகிய சொக்க நாதர், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், காந்திமதியம்மைப் பதிகம்

முத்துசாமிப் பிள்ளை பேரில் 'காதற் பிரபந்தம்' சங்கர நயினார் கோயில் அந்தாதி, தாணுமால் பதிகம் முதலிய பன்னிரண்டு நூல்களையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் இயற்றியவர். அக்காலத்தில், திருநெல்வேலி நகரில் வாழ்ந்த கவிராஜ நெல்லையப்ப பிள்ளையும் அழகிய சொக்கநாதரும் தலைசிறந்த புலவர்கள். 'கலையில் அகத்தியன்' என்பது இவரது 'காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றத்தின் போது கவிஞர் ஒருவர் இவருக்கு வழங்கிய சிறப்புப் பெயராகும். திருநெல்வேலி தெற்குப் புதுத்தெருவில் கவிராஜ நெல்லையப்ப பிள்ளை அவர்கள் வீட்டில் அமைந்த சவுக்கையில் கூடும் தமிழ்ப் புலவர் கூட்டத்தில் முதன்மையாகத் திகழ்ந்தவர் அழகிய சொக்கநாதர். இவர் வாயிலாகவே சவுக்கைப் புலவர்களின் நட்பு முதலியார் அவர்களுக்குக் கிடைத்தது. இளமையிலேயே வெ.ப.சு அவர்கள் கவிதை இயற்றுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். இவர் தாம் இயற்றிய பாடல்களைக் கவிஞர்களிடம் படித்துக்காட்டிப் பிழைகளைத் திருத்தித் தருமாறு கேட்பது வழக்கம்; அவர்களும் திருத்திக் கொடுப்பார்கள். திருத்தப்பட்ட பாடல்கள் அவர்களின் பாடல்களாகவே மாறியிருக்கும். தம்முடைய பாடல்கள் திருத்தமின்றிப் புலவர்களால் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று முதலியார் ஏங்குவார்களாம். அவர்களது ஏக்கம் நீங்கும் வண்ணம் முதலியாரவர்களின் பாடல்களைப் புலவர்கள் அப்படியே ஏற்கும் நிலையை உருவாக்கிக் கொடுத்தர்வகளுள் அழகிய சொக்கநாதர் முதன்மையானவர் என்று முதலியார் அவர்கள் கூறியுள்ளார்கள்.

உ.வே. சாமிநாத ஐயர்

உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தம் வாழ்வில் ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் இடையறாது தமிழ்ப்பணியாற்றிய தகைசால் பெருமகனார். தமிழ்மொழியின் ஒளிவிளக்கு, எண்ணற்ற பழந்தமிழ்ச் சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பதிப்பித்துப் பழந்தமிழ் இலக்கியங்களை அழியாமல் காத்த பெருமைக்கு உரியவர். அன்றைய ஆங்கில அரசு இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டி 'மகா மகோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

'குடந்தை நகர்க் கலைக்கோவே! தமிழ் மொழியின் வாழ்வுள்ள காலம்வரை புலவர் நெஞ்சம் போற்றிய வண்ணம் இறப்பின்றித் திகழ் வாயே!' என்று மகாகவி பாரதியால் பாராட்டப்பெற்றவர் இவர்.

பெரும்புகழ் பெற்றிருந்த உ.வே. சாமிநாத ஐயர் வெள்ளகால் செல்வர் சுப்பிரமணிய முதலியார் அவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்.

முதலியார் அவர்களும் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களும் ஆயிரம் பிறைகண்ட அறிஞர் பெருமக்கள்; தமிழுக்குக் கிடைத்த அருமணிகள்; தமிழ்த் தாயின் தவப்புதல்வர்கள்; அரை நூற்றாண்டுக் காலம் நெருங்கிப் பழகியவர்கள். முதலியார் அவர்கள் 1890ஆம் ஆண்டு கும்பகோணம் அரசினர் கல்லூரியில் ஐயர் அவர்களுக்கு அறிமுகமாகும் அரிய வாய்ப்பினைப் பெற்றார்கள். அப்போது, உ.வே.சாமிநாத ஐயர் கும்பகோணம் கல்லூரியில் பணிபுரிந்து வந்தார்கள். அங்குப் பணியாற்றிக் கொண்டிருந்த தம் நண்பர் எஸ்.டி. கள்ளபிரான் பிள்ளையைக் காணச் செல்வது முதலியாரின் வழக்கம். அன்று தொடங்கிய உ.வே. சா - முதலியார் நட்பு வளர்பிறையென நாளும் வளர்ந்து வந்தது. தமது அலுவலை முன்னிட்டுக் கும்பகோணம் செல்லும் போதெல்லாம் முதலியார் அவர்கள் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைக் கண்டு அளவளாவுதல் வழக்கம்.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண தேசிகர் அவர் கள் முதலியாரின் தமிழ்ப் புலமையை அறிந்திருந்தார். ஆனால், அவரை நேரில் கண்டதில்லை சாமிநாத ஐயர் மூலமாக ஆதீனம், முதலியார் அவர்களைத் தமது மடத்தில் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார்கள். இந்தச் சந்திப்பால் முதலியார் ஆதீன கர்த்தரால் ஈர்க்கப் பெற்றார்கள். இருவரிடையே நெருங்கிய தொடர்பு உருவாயிற்று.

வெ.ப.சு அவர்கள் எண்பதாண்டுகள் நிறைவு பெறுவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னரே உ.வே.சா. அவர்கள் எண்பதாண்டு நிறைவு விழாக் கண்டு தமிழ் மக்களின் பாராட்டுகளைப் பெற்றார்கள். 1937ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற முதலியார் அவர் களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். இது முதலியார் அவர் களின் வாழ்க்கை வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்க தொரு நிகழ்ச்சியாகும்.

வெ.ப.சு முதலியார் அவர்களுடன் தாம் கொண்டிருந்த நட்பு பற்றித் தம்முடைய வாழ்க்கைச் சரிதமான 'என் சரித்திரம்' என்ற நூலில் உ.வே. சாமிநாத ஐயர் நினைவு கூர்வது இங்குக் குறிப்பிடத்தக்கது.

'அக்காலத்தில் ஸ்ரீமான் ராவ்சாகிப் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மிருக வைத்திய ஸூப்ரின் டெண்டெண்டாக இருந்தார். அவருடைய பழக்கம் எனக்கு உண்டாயிற்று. அவருடைய தமிழன்பும் கம்பராமாயணப் பற்றும் எங்களுடைய நட்பை வன்மை பெறச் செய்தன. கும்பகோணத்தின் அருகில் அவர் முகாம் போடும் போதெல்லாம் அவரைக் கண்டு பேசி சல்லாபம் செய்து வருவேன். தாம் இயற்றும் செய்யுட்களை எனக்குச் சொல்லிக் காட்டி வருவார். ஆங்கிலம் படித்துத் தக்க உத்தியோகத்தி லிருக்கும் ஒருவருக்குத் தமிழில் அவ்வளவு ஆழ்ந்த அன்பு இருந்தமை முதலில் எனக்கு வியப்பை உண்டாக்கியது.'

'நண்பர் ராவ்சாகிப் ஸ்ரீ.வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்களை நான் பல வருஷங்களாக அறிவேன். தமிழ்க் காப்பியங்களிலும் பிரபந்தங்களிலும் இவர்கள் சிறந்த பயிற்சி உள்ள வர்கள். தமிழில் இனிய வசன நூல்களும் அழகிய கவிதை நூல்க ளும் இயற்றும் ஆற்றல் உள்ளவர்கள். பழகுங்காலத்தில் இவர் களுடைய சம்பாஷணைகளால் எனக்கு உண்டாகும் இன்பம் ஒரு தனி இயல்புடையதாக இருக்கும்.' இவ்வாறு முதலியார் அவர்களின் கம்பராமாயணசாரம் (ஆரண்ய காண்டம்) நூலுக்கு உ.வே.சா. அவர்கள் வழங்கியுள்ள முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

வெ.ப.சு அவர்களின் அரிய நண்பர்களுள் குறிப்பிடத் தக்கவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இவர் தத்துவப் பேராசிரியர். ஆங்கி லேயர் ஆட்சிக்காலத்தில் திருநெல்வேலி இந்துக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணிபுரிந்தவர். அதனை முதனிலைக் கல்லூரியாக உயர்த்திய பெருமைக்கு உரியவர். 'மனோன்மணீயம்' என்னும் தமிழ் நாடக நூலை இயற்றி இறவாப் புகழ் பெற்றவர். திருநெல்வேலியில் அவர் பெயரில் 'மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,' தோன்றியுள்ளது. அந்த அளவுக்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஓங்கு புகழ் எய்தியவர். அறிவாற்றல் மிக்க பெரியவரான சுந்தரனார் அவர்களைத் திறனறிந்து முதலியார் அவர்கள் நட்புக் கொள்ள விரும் பினார்கள். அவரிடம் தம்மை அறிமுகம் செய்து வைக்கத் தம் நண்பர் பெருங்குளம் அ.மாதவையாவை நாடினார். முதலில் மாதவையா முதலியாரைப் பற்றிப் பேராசிரியருக்குக் கடிதம் எழுதினார். பின்னர்

இருவரும் குற்றாலத்தில் சந்தித்து மகிழ்ந்தனர். அப்போது பேராசிரியரைச் சுற்றிலும் அறிஞர்களும் அதிகாரிகளும் இருந்தனர். அவர்களுக்குப் பேராசிரியர், முதலியார் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். அதன்பிறகு பேராசிரியர் அவர்கள் வேண்டிக்கொள்ள முதலியார் அவர்கள் தாம் இயற்றிய 'நெல்லைச் சிலேடை வெண்பா'விலுள்ள பாடலொன்றைப் படித்து விளக்கம் அளித்தார்கள். இதைக் கேட்ட அனைவரும் முதலியார் அவர்களின் திறமையைப் பாராட்டினார்கள்.

வெ.ப.சு அவர்கள் தமது 'சுவர்க்க நீக்க' மொழிபெயர்ப்பு நூலுக்கு முகவுரை வாங்கும் நோக்கத்துடன் பேராசிரியர் அவர்களைக் காணச் சென்றிருந்தார். பேராசிரியர் அதற்கு இசைந்ததுடன் அந்த நூலை அங்குக் கூடியிருந்த அறிஞர் நடுவே படித்துக் காட்டுமாறு முதலியார் அவர்களைக் கேட்டுக் கொண்டார். எதிர்பாராத இந்த வேண்டுகோளை ஏற்ற முதலியார் அவர்கள் அரும்பாடுபட்டுத் தமது நூலைப் பலரிடமிருந்து பெற்று வந்து மறுநாளே படித்துக்காட்டினார்கள். பாடல்களை விளக்கிய முறை, முதலியாரவர்களுக்கு அறிஞர்களிடையே நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது இந்த நூலுக்குப் பேராசிரியர் முகவுரை எழுதுவதாக இசைந்ததோடு இந்நூலைப் பற்றிக் கிறித்தவக் கல்லூரி வெளியிடும் ஆண்டுமலரில் ஒரு திறனாய்வுக் கட்டுரை எழுதப்போவதாகவும் கூறியிருந்தார். ஆண்டொன்று கழிந்த பின்னரும் அதனைச் செய்ய முடியாமலேயே பேராசிரியர் சுந்தரனார் இயற்கை எய்திவிட்டார். ஆயினும், அவர் முதலியார் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒரு நற்சான்றாக அமைந்துள்ளது என முதலியார் அவர்களின் நண்பர் பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய நூலின் வாயிலாக அறிகிறோம்.*

---

* I owe Mr.V.P. Subramania Mudaliar an apology for not having been able to review his able translation of Milton's 'Paradise Lost' into Tamil verse of the Viruthain metre as I have been long promising that pleasure without having time to do it. I regard it a worthy porduct, worthy of Mudaliar's known scholarship and of the subject he has taken up for translation. The ideas of the great English Poet is well caught up and reflected in chaste Tamil verse. There can be no question that the endeavours made by Mr. Mudaliar to extend the scope of Tamil Literature deserve the highest encomium and every encouragement. (Extract from the letter of M.R.Ry.P.Sundaram Pillai Avl. M.A. M.R.A.S. FRHS)

வெ.ப.சு அவர்களைப் போலவே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் கம்பராமாயணப் பயிற்சி உடையவர். ஆனால் அக்காப்பியத்தைப் பற்றிய மாறுபட்ட கருத்துடையவர். தமது கருத்துகளுக்கு அறிஞர்களிடையே பெரிய எதிர்ப்பு இருக்கும் என்று அவர் உணர்ந்தே இருந்தார்.

அவர் தமக்கு, சமயக் காழ்ப்புணர்வோ எதிர்ப்புணர்வோ ஒரு சிறிதும் இல்லையென்று கூறியதுடன், இராமாயண உள்ளுறை பொருளைப்பற்றித் தாம் கூற வந்த கருத்துகள் வரலாற்று அடிப்படையில் அமைந்தவை என்றும் விளக்கினார். ஆயினும் அறிஞர் சிலர் பிள்ளையவர்களின் கருத்துகளைக் கடுமையாக எதிர்த்தனர். இதுபற்றிய விரிவான செய்திகள் 'Tamilian Antiquary'-இல் வெளி வந்துள்ளன.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் கருத்துகள் வெளிவராமல் நின்றுவிடவில்லை. அவருடைய கருத்துகளை முதலியார் அவர்கள் 'இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்' என்ற தமது நூலின் வாயிலாகத் தமிழ் மக்களிடையே பரவச் செய்தார்.

வெ.ப சு அவர்கள் தமது 'சுவர்க்க நீக்க முதற்காண்ட மொழி பெயர்ப்புக்கு' முகவுரை வாங்குவதற்காகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையை அணுகியும் அதனைப் பெற முடியாமற் போனதற்காகத் துவண்டுவிடவில்லை. தம்மைப் பற்றி அவர் கூறிய மதிப்புரைகளும் புகழுரைகளுமே போதும் என்ற மனநிறைவு கொண்டார்கள்.

பெருங்குளம் மாதவையா

பத்மாவதி சரித்திரம் என்னும் சமூக நாவலைப் படைத்துப் புகழ் சேர்த்துக் கொண்ட மாதவையாவும் முதலியார் அவர்களும் நீண்டகால இணைபிரியாத இலக்கிய நண்பர்கள். நாடு அடிமைப் பட்டுக் கிடந்த காலத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஊட்ட வல்ல நாவல்களை எழுதிப் புகழ்பெற்ற படைப்பாசிரியர் மாதவையா. தமிழொடு ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தவர். வெ.ப.சு முதலியார் அவர்கள் இப்பெரியவரின் நட்பைப்பெற அவருடைய தமையனார் A.Y. நாராயண ஐயர் உதவியாக இருந்தார். இவர் முன்பே முதலியார் அவர்களின் நண்பர். இவர் சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்தார். இவரைப் பார்க்க முதலியார் அவர்கள் போவ

துண்டு. ஒருமுறை முதலியாரவர்கள் அவரைக் காணச் சென்றபோது மாதவையாவும் தம் தமையனாரைச் சந்திக்க அங்கு வந்திருந்தார்.

அக்காலத்தில் 'விவேக சிந்தாமணி' என்னும் பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தது. அதில் முதலியார் அவர்களும் கட்டுரைகள் எழுதி வந்தார்கள். அதில் வருகின்ற கட்டுரைகளைப் பற்றிய கருத்தை நாராயண ஐயர், முதலியார் அவர்களிடம் கேட்டார். அதில் வரும் 'சாவித்திரி சரிதம்' தொடர் எனக்கு மகிழ்ச்சி தருவதாக உள்ளது என்று முதலியாரவர்கள் கூறியதும், 'ஐயா! அக்கதையினை எழுதி வருபவன் இவன்தான்! இவன் என் தம்பி மாதவையா' என்று சொன்னார். இரு வருக்குமிடையே அன்று தோன்றிய நட்பு இணை பிரியாத அளவுக்கு நிலைபெற்று விட்டது. எழுத்துத் துறையில் இவர்கள் இருவரும் ஒரு வருக்கொருவர் உறுதுணையாக இருந்து உதவி வந்தனர்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்கு முதலியார் அவர்களை அறி முகம் செய்து வைத்தவர் இவரே என்பதை முன்னரே பார்த்தோம்.

வெ.ப.சு. அவர்கள் இயற்றிய சுவர்க்க நீக்க முதற்காண்ட நூலைப் பதிப்பிக்கும் பணியிலும் முதலியார் அவர்களுக்கு மாதவையா பேருதவி புரிந்து வந்தார். ஆங்கில மொழிப் புலமையும் மாதவை யாவுக்கு இருந்தமையால் இந்த மொழிபெயர்ப்பு நூலைப் பார்க்கவும் வெளியிடும் பணிகளைச் செய்யவும் அவருக்கு எளிதாக இருந்தது.

வெ.ப.சு முதலியார் அவர்கள் பம்பாய் கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சென்றிருந்த வேளையில் இந்த நூலின் பதிப்புப் பணி களில் மாதவையா செய்த உதவி பெரியது. அந்த உதவியைப் போற்றும் வகையில் முதலியார் அவர்கள்,

இன்சுவர்க்க நீக்கத்துக்(கு) யான்பெற்ற தாயாக
மன்செவிலித் தாயானாய் மாதவா! — முன்சொலந்நூற்(கு)
யான்கொண்ட அன்புக்கிரட்டி பூண்டா தரிப்பாய்
மீன்கொண்ட நீர்ப்புவியின் மேல்

என்ற வெண்பாவை எழுதி மாதவையாவுக்கு அனுப்பி வைத்தார் கள்.

ஒருமுறை இருவரும் இலக்கியம்பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது முதலியார் அவர்கள் மில்டன், ஷேக்ஸ்பியர் ஆகிய மேனாட்ட றிஞர்கள் நூல்களில் காணப்படும் நயமான - சுவையான பகுதிகள் தமிழிலக்கியங்களுள் கம்பராமாயணத்தில்தான் காணப்படுகின்றன

என்றார்கள். அப்போது மாதவையா அக்கருத்துக்கு மாறாக மேலை இலக்கியங்களில் சில இடங்களில் அமைந்துள்ள சொற்பெருக்கு நிகழ்ச்சிகள் இராமாயணத்தில் இல்லையே என்றார். உடனே முதலியார் அவர்கள் கம்பராமாயணம் ஆரண்ய காண்டத்தில் 'கரன் வதைப் படல' த்தில் கரனின் தம்பி தூடணன் ஆற்றிய போர்க்களப் பேச்சைச் (தூடணன் செய்த ரணரங்கப் பிரசங்கம்) சான்றுகாட்டினார்.

ஆனால், இது அந்த மேலை நாட்டு இருபெரும் அறிஞர்கள் படைத்த இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சொற்பெருக்குக்கு **(Oration)** இணையானது என்று சொல்ல முடியாவிட்டாலும் மாதவையாவின் கேள்விக்கு உடனே பதில் சொல்லக்கூடிய இடமாக இருந்ததுடன் முதலியார் அவர்கள் இராமாயணத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த பயிற்சியையும், புலமையையும் இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டு கின்றது.

மாதவையா, தாம் முதலியார் அவர்கள் மீது கொண்டிருந்த அழியாத நட்பிற்கு அடையாளமாகத் தமது 'விஜயமார்த்தாண்டம்' என்னும் நூலை அவர்களுக்கு உரிமையாக்கிச் சிறப்பித்தார் செய்யுள் வடிவில் அமைந்த அந்த உரிமை உரையில் மாதவையா முதலியாரவர்களின் பெருமைகளைக் கூறிவிட்டு,

"ஆயவென் அன்பற் காக்கினன்
வாழ்ந்நாவல் உரிமை வாழியவே!"

என்று நிறைவு செய்துள்ளார்.

தமது வாழ்க்கையில் வெ.ப.சு. அவர்கள் பெற்ற நண்பர்களுள் மிகச் சிறந்தோரில் மாதவையாவும் ஒருவர்.

இருதாலய மருதப்பத் தேவர்

வெள்ளகாலுக்கு அண்மையில் உள்ளது ஊற்றுமலை. இங்கிருந்து அந்த வட்டாரத்தை ஜமீந்தார் இருதாலய மருதப்ப தேவர் ஆண்டு வந்தார். இவர் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் வள்ளல். ஊற்று மலை ஜமீந்தாருடன் வெள்ளகால் முதலியார் அவர்களுக்கு நெருங்கிய நட்பு உண்டு; உறவுமுறை கொண்டாடும் அளவுக்கு இருவரும் நண்பர்கள். இதனால் தளவாய் அரண்மனையில் மருதப்பருக்குத் தனிச் சலுகை உண்டு என்பார்கள். புலவர்கள் ஜமீந்தாரைக் காணச் செல்லும்போது வெள்ளகால் வழியாகச் செல்வது வழக்கம். அவர்களுடன் முதலியார்

அவர்களும் சேர்ந்து செல்வார். மருதப்பதேவர் மீது முதலியார் அவர்களும் கவிதை பாடிப் பெருமைப்படுத்துவார்கள். அவர்கள் பாடியது அன்பின் பெருக்காலன்றி அன்பளிப்புப் பெறுவதற்காக அன்று!

முத்துசாமிப்பிள்ளை

திருநெல்வேலியை அடுத்துள்ள இராசவல்லிபுரத்தைச் சேர்ந்த கார்காத்த வேளாளர் மரபினரான முத்துசாமிப்பிள்ளை அந்நாளில் பெருஞ்செல்வராய்த் திகழ்ந்தார். இவர் புலவர் போற்றும் புரவலராய் வாழ்ந்தார். முதலியார் அவர்கள் நெருங்கிப் பழகிய பெரியவர்களுள் இவரும் ஒருவர். பிள்ளை அவர்கள் செல்வ வளம் மிக்கவர். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை நன்கறிந்தவர். தமிழ் உணர்வு மிக்க பிள்ளையவர்கள் புலவர்களை ஆதரித்து வந்தார். இவர் திருநெல்வேலிக்கு வரும்போதெல்லாம் தெற்குப் புதுத்தெரு சவுக்கையில் தங்குவது வழக்கம். அப்போது புலவர்கள் கூடிக் கவிதைகள் பாடி அளவளாவுவார்கள். பிள்ளை அவர்களும் புலவர்களுக்குப் பரிசுகள் வழங்கி மகிழ்வார். தம்மிடம் நெருங்கிப் பழகிய முதலியார்மீது இப்பெரியவருக்கு அன்பு அதிகம். முதலியார் அவர்கள் சென்னை வேளாண்மைக் கல்லூரியில் படிக்கச் செல்லும்போது முத்துசாமிப் பிள்ளை தமது அன்பின் அடையாளமாக அவர்களுக்குத் தங்கத் தாலான ஆறு பொத்தான்களை அன்பளிப்பாக வழங்கி மகிழ்ந்தார்.

வெ.ப.சு அவர்களின் நண்பராய் நல்லாசிரியராய்த் திகழ்ந்த புலவர் அழகிய சொக்கநாதருக்கு வள்ளல் அன்பளிப்பு வழங்கியது இங்கு நினைக்கத் தக்கது.

புலவர் அழகிய சொக்கநாதரின் காந்திமதியம்மைப் பிள்ளைத் தமிழ் நூல் அரங்கேற்றம் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் அம்மன் சந்நிதி ஊஞ்சல் மண்டபத்தில் நடைபெற்ற வேளையில் அந்நூலின் கவிச்சுவையில் ஆழ்ந்த வள்ளல் அவர்கள் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் தம்முடைய வைரக் கடுக்கன்களைப் புலவருக்கு வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

மு.ரா. அருணாசலக் கவிராயர்

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வித்வானாக இருந்த மு.ரா. அருணாசலக்கவிராயரும் வெ.ப.சு அவர்களுடன் நெருங்கிப் பழகிய

நண்பர்களுள் குறிப்பிடத் தக்கவர். இவர் சேற்றூர் இராமசாமிக் கவிராயரின் புதல்வர்களுள் ஒருவர். இவர் சிவகாசி திருப்பதிப் பெருமான் மீது பல சிறுகாப்பியங்களைப் பாடியுள்ளார். சிவகாசிப் புராணம் என்ற நூலுடன் பல அந்தாதிகளையும், பிள்ளைத் தமிழ் நூல்களையும் பதிகங்களையும் பாடியுள்ளார். குறுக்குத்துறை சிலேடை வெண்பாவும் இவரால் இயற்றப் பெற்றதே. ஆறுமுக நாவலர் வரலாற்றை இவர் செய்யுள் வடிவில் பாடியுள்ளார். திருக்குறளைத் தெளிவான உரைநடையில் தந்துள்ளார்.

வெ.ப.சு அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது 'திருப்பரங்குன்றச் சிவகுரு அருளால் சகல சம்பத்தும் தழைக்கப்பெற்று மலர்தலை உலகில் நீ வாழி நீடூழி' எனக் கவிராயர் முதலியார் அவர்களை வாழ்த்தியுள்ளார்.

ரா.பி.சேதுப்பிள்ளை

திருநெல்வேலியை அடுத்த இராசவல்லிபுரத்தில் தோன்றிச் சட்டம் பயின்று வழக்குரைஞரானவர் ரா.பி.சேதுப்பிள்ளை. இவர், பின்னர் பைந்தமிழ் வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தமிழறிஞர். 'சொல்லின் செல்வர்' என்றும் 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' என்றும் தமிழர்களால் அன்புடன் போற்றப்பட்டவர். 1955ஆம் ஆண்டு 'சாகித்திய அகாதெமி' விருது பெற்ற 'தமிழ் இன்பம்' உள்ளிட்ட பல நூல்களை எழுதித் தமிழ்த் தொண்டு புரிந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல் கலைக்கழகத்திலும் தமிழ்ப்பேராசிரியராகச் சிறப்புறப் பணி யாற்றியவர்.

ஒருமுறை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் ஒருவராய் இருந்த வெ.ப.சு முதலியார் அவர்கள் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களையே அப் பதவிக்குத் தேர்வு செய்து பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரைத்தார் கள். அப்பொழுது அப்பதவிக்கு ரா.பி. சேதுப்பிள்ளை தேர்ந்தெடுக் கப்படா விட்டாலும் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து கால் நூற்றாண்டுக்காலம் அரும்பணியாற்றி னார். இவரது சீரிய பணியால் தமிழ்த்துறை விரிவும் உயர்வும் பெற்றது. பல்கலைக் கழகத்தில் பின்னாளில் சிறப்புறப்பணியாற்றிய ஒருவரை அவர் தகுதியறிந்து முன்னரே சுட்டிக் காட்டியவர் வெ.ப.சு.

அவர்கள். அவர்களைப் போலவே ரா.பி.சேதுப்பிள்ளையும் கம்ப ராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

தமிழகத்தில் கம்பராமாயணம் பரவுவதற்குப் பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்களின் பெருந்தொண்டும் ஒரு காரணம். அவர் திரு நெல்வேலியில் வழக்குரைஞராகப் பணியாற்றிய காலத்தில் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் நடத்திய 'வட்டத்தொட்டி' என்னும் இலக்கிய அமைப்பில் உறுப்பினராக இருந்தார். அக்காலம் தொடங்கி ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கும் முதலியார் அவர்களுக்கு மிடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது. தாம் எழுதிய 'கால்டுவெல் சரித்திரம்' நூலின் கையெழுத்துப் படிகளை ரா.பி. சேதுப்பிள்ளை வெ.ப.சு அவர் களுக்கு அனுப்பி வைத்து பிழைகளைத் திருத்தி உடனே அனுப்பி வைக்குமாறு 10.01.1936இல் கடிதம் எழுதினார். தம்முடைய முதுமைக்காலத்திலும் தளராது தமிழுக்குத் தொண்டு செய்து வந்த வெ.ப.சு அவர்கள் அவற்றைப் படித்துத் திருத்தமும் செய்து ஒரு வாரத்தில் 17 01.1936இல் பதில் கடிதம் அனுப்பினார்கள். 'கம்ப ராமாயணப் பாடல்களை, 'இன்கவித் திரட்டு' என்ற பெயரில் வெளி யிட்ட வெ ப.சு அவர்களைப் போலவே ரா.பி.சேதுப்பிள்ளையும் தமிழ் இலக்கியங்களின் சிறந்த பகுதிகளைத் திரட்டிக் 'கவிதைக் களஞ்சியம்' என்ற பெயரிலும் பாரதியாரின் கவிதைகளைப் 'பாரதி இன்கவித்திரட்டு' என்ற பெயரிலும் தொகுத்து வெளியிட்டார். 'செஞ் சொற் கவிக்கோவை'யும் இவர் தொகுத்த மற்றொரு நூலாகும். வெ.ப.சு அவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றிய ரா.பி.சேதுப் பிள்ளை முதலியாரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா விற்குப் பொருள் வழங்கியதுடன் விழாவில் நேரிலும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

பிற நண்பர்கள்

கச்சிக்கலம்பக ஆசிரியர் அரங்கநாத முதலியார், கவிராஜ நெல்லையப்ப பிள்ளை, குன்னூர் குமாரசாமி முதலியார், எட்டைய புரம் காசிவிசுவநாதபிள்ளை போன்ற புலவர் பெருமக்களும் ரசிகமணி டி.கே.சி., பி.ஸ்ரீ. ஆச்சார்யா, இராகவ ஐயங்கார் முதலி யோரும் வெ.ப.சு. அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அன்னைத் தமிழுக்கு அருந் தொண்டாற்றிய பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்த வெ.ப.சு முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழன்பர்கள் முடிவு செய்தனர். திவான்பகதூர் சர்.எஸ். குமாரசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழவில் திருநெல்வேலி நகரைச் சார்ந்த பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் தமிழன்பர்கள் பலரும் உறுப்பினர்களாக இருந்தனர். முதுபெரும் புலவர் வெ.ப.சு அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா 1.8.1937 ஞாயிற்றுக்கிழமை - திருநெல்வேலி சந்திப்பு, இந்துக் கலாசாலையில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்த் தாத்தா மகாமகோ பாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தலைமையில் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத் தின் சார்பில் தம்பிரான் கலந்து கொண்டு பொன்னாடை போர்த்திப் பண முடிப்பும் வழங்கினார்கள்.

திவான்பகதூர் ஆவுடையப்பபிள்ளை, ஏ.சி. பால்நாடார், ரசிகமணி டி.கே.சி., ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோருடன் நெல்லைவாழ் சான்றோர் பெருமக்கள் பெருமளவில் விழாவில் கலந்து கொண் டார்கள். சென்னை மாகாணப் பிரதம மந்திரி சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரியார் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். அவிநவ காளமேகம் அனந்தகிருஷ்ண ஐயங்கார் தாமே எழுதிய வாழ்த்துக் கவிதையை வாசித்தளித்தார். திருவாளர்கள் சாது.கணபதி பந்துலு, ஏ.சி. பால் நாடார், அ.சீனிவாசராகவன், ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோர் வெ.ப.சு அவர்களின் பெருமையையும் சாதனைகளை யும்பற்றி எடுத்துரைத்தார்கள்.

நூல்நிலையம்

வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் தமது வாழ்நாளில் அவ்வப் போது சேர்த்து வைத்த நூல்களையும் தாம் இயற்றிய நூல்களையும் பாதுகாத்துத் தமக்குப் பின்னும் அவை பயன்பட வேண்டுமென்று எண்ணினார். எனவே அவற்றை ஒரு நூல் நிலையமாக உருவாக்கி அதன் வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தையும் வகுத்தார். தாம் இயற்றிய நூல்களிலிருந்து கிடைக்கும் வருவாயை அதற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் முடிவு செய்து தம்முடைய புதல்வர்களிடம் அப்

பொறுப்பினைக் கொடுத்தார். அவருடைய மக்களும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவர் சேர்த்த நூல்களை எல்லாம் தொகுத்து 'வெ.ப.சுப்பிரமணிய முதலியார் நூல் நிலையம்' என்ற பெயருடன் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியின் ஆட்சி மன்றக் குழுவினிடம் ஒப்படைத்தனர் அவர்களும் இன்றுவரை வெ.ப சு அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வருகின்றனர்.

இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ள நூல்கள் வெறும் புத்தகக் குவியல்களாக இல்லாமல் காலம்காலமாக நின்று நிலவக்கூடிய பயனுள்ள நூல்களாக உள்ளன.

தொல்காப்பியம், மூலமும் உரையும் சேர்ந்த, பழைய பதிப்புகள், நன்னூல், சங்கரநமச்சிவாயர், மயிலை நாதர் போன்றவர்களின் உரைகள், உ.வே.சா பதிப்பித்த புறப்பொருள் வெண்பாமாலை, களவியற் காரிகை, மாறனலங்காரம் போன்ற அக, புறப்பொருள் இலக்கண நூல்கள் பல இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

இவற்றைப் போலவே சங்க இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவை நூற்பட்டியலில் அடங்கும். புராண இதிகாச நூல்கள், இலக்கிய வரலாறு, தமிழ் வரலாறு, புலவர் சரித்திரங்கள், நிறைவு விழா நினைவு மலர்கள் போன்ற நூல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

இன்று கிடைத்தற்கரிதாகவுள்ள கா.சு.பிள்ளையின் மணிமாலை-கோவை-12 கோவைகளும், செந்தமிழ் இதழின் தொகுதி களும் ஆய்வாளர்களுக்குப் பயன்தரக்கூடியவை.

சைவசமயம் சார்ந்த நூல்கள் மிகுதி. சமண, பௌத்த மதநூல்களும் உள்ளன கிறித்தவர்களின் சத்தியவேதம் (பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் - தமிழில்) இங்குக் காணலாம்.

பழைய உரையாசிரியர்களான வை.மு. கோபால கிருஷ்ண மாச்சாரியார், சடகோபராமானுசாச்சாரியார் போன்றோரின் உரையுடன் கூடிய கம்பராமாயண நூல்களையும் வெ.ப.சு அவர்கள் சேர்த்து வைத்துள்ளார். இவர்கள் இயற்றிய கம்பராமாயண சாரம் ஆறு காண்டங்களும் இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. வால்மீகி இராமாயணத் தமிழ் நூல்களும் இங்குள்ளன- ஒரு சில ஆங்கில நூல்களும் இடம் பெற்றுள்ளன குறிப்பாக, Poetical Works of John Milton Vol I, II, III ஆகிய மூன்றும், Paradise Lost

Book I, II ஆகிய இரண்டும், இந்நூலகம் பெற்றுள்ள சிறந்த நூல்களுள் சில.

மேலும் "A Descriptive Catalogue of Tamil Manuscripts in the Government Oriental Manuscript Library" என்ற அரிய நூலும் இங்குள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சிறந்த படைப்புகளுள் ஒன்றான Lexicon. ஆறு தொகுதிகளும், சதுரகராதி, சோதிடப்பேரகராதி நிகண்டுகள் போன்ற நூல்களும் இங்குக் கிடைக்கும். இவைபோன்ற பல நூல்களை வெ.ப சு நூல் நிலையம் பெற்றுள்ளது.

அறக்கட்டளை

வெ.ப.சு. அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா 1.8.1937ஆம் ஆண்டு ம.தி.தா. இந்துக்கல்லூரி அரங்கில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் தலைமையில் நடந்தது. இவ்விழாவுக்குப் பல தமிழறிஞர்களும், அன்பர்களும் நன்கொடை வழங்கிச் சிறப்பித்தனர். விழாச் செலவு போக எஞ்சிய தொகையை வங்கியில் சேமித்து வைத்தனர்.

இத்தொகையிலிருந்து வரும் வட்டித் தொகை ஒவ்வொரு ஆண்டும் தமிழில் முதல் மதிப்பெண் பெறுகின்ற மாணவர்க்குப் பரிசாக நன்கொடையாளர் நாளில் (Donor's Day) வழங்கப்பட்டு வருகின்றது.

ஆய்வு மையம்

பழம்பெரும் கல்லூரியான ம.தி.தா இந்துக்கல்லூரியில் 1983ஆம் ஆண்டு தமிழில் எம்.ஃபில் (ஆய்வியல் நிறைஞர்) பட்டப்படிப்பு தொடங்கத் திட்டமிடப்பட்டது. ஆய்வுப் படிப்பிற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முறைப்படி ஒப்புதல் அளித்தது. 1985-86-ஆம் ஆண்டில் தமிழில் பி எச்டி (முனைவர்) பட்டப்படிப்பிற்கு இக்கல்லூரி ஆய்வுமையமாகச் செயல்படவும் பல்கலைக்கழகத்தின் அனுமதி கிடைத்தது.

வெ.ப.சு அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் இந்த ஆய்வுமையத்திற்கு "வெ.ப.சு தமிழியல் ஆய்வு மையம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இம்மையத்தின் வாயிலாக இதுவரை

நூற்றுக்கும் மேலான ஆய்வாளர் எம்.ஃபில் பட்டமும் பலர் பி.எச்டி. பட்டமும் பெற்றுள்ளனர். இந்த மையத்தின் சார்பில் ஆண்டிற்கு இரு முறை ''பொதிகை ஆய்வுமலர்'' என்ற ஆய்விதழ் ஒன்று தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது

நினைவில் நிற்கும் வெ.ப.சு. அவர்கள்

பெருஞ்செல்வராகப் பிறந்து வளர்ந்து, ஒழுக்கநெறி பிறழாது வாழ்ந்து, ஆண்டுகள் எண்பதைக் கடந்து ஆயிரம் பிறைகளைக்கண்ட பின்னும் சீரிளமைத் திறனுடன் செந்தமிழுக்குத் தொண்டாற்றிய வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 12.10.1946இல் உலகை விட்டு நீங்கினாலும் தமிழர் உள்ளங்களிலே நீங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

2
இலக்கிய நூல்கள்

வெ.ப.சு. கற்ற கல்வியும் பெற்ற பட்டமும் ஆற்றிய பணியும் கால்நடை மருத்துவத் துறை சார்ந்தவை. ஆயினும் அவர் இளமைக் காலத்திலிருந்தே தமிழ் மற்றும் ஆங்கில மொழி இலக்கியங்களில் கொண்டிருந்த ஈடுபாடும், ஆர்வமும் பயிற்சியும் பிற்காலத்தில் அவரை ஒரு சிறந்த இலக்கிய நூலாசிரியராக வளரச் செய்தன. அதன் விளைவாகத் தமிழுக்குத் தரமான பல நூல்கள் கிடைத்தன. அவற்றை இப்பகுதியில் பார்ப்போம்.

1. கம்பராமாயணசாரம்

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.

என்று 'ஷெல்லிதாசன்' என்னும் புனைபெயரைத் தனக்குச் சூடிக் கொண்டவனும், பன்மொழிப் பயிற்சி உடையவனும், தேசிய நற்கவியுமான பாரதி இப்படிப் பாடியுள்ளான்.

கம்பரின் பெருமை

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த இளங்கோவுக்கும், உலகத்துக்குப் பொதுநெறி வகுத்துத் தந்த வள்ளுவருக்கும் முன்னால் கம்பனை முதலிடத்தில் வைத்துப் பாடி யிருக்கிறான் பாரதி. பாட்டரசன் கம்பனிடம் பாட்டுக்கொருபுலவன் பாரதி கொண்டிருந்த மதிப்பினை இது எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு கம்பன் புகழ் பாடுவோர் பலர். அவன் காப்பியத்தில் சுவை

கண்டு இன்புற்றோர் இன்னும் பலர். அவருள் ஒருவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள்;

இலக்கிய இன்பம்

இலக்கிய இன்பத்திற்கு இணையான இன்பம் வேறில்லை. நல்ல இலக்கியங்களை, நயமிக்க கவிதைகளை மீண்டும் மீண்டும் படித்து இன்புற்று மகிழ்வது-தாம் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கும் கூறி மகிழ்வது கற்றோர் தம் இயல்பாகும். ஒருவர் தமது வாழ்நாளில் விரும்பியவற்றையெல்லாம் கற்றுவிட முடியாது. ஆனாலும் இலக்கிய ஆர்வலர்கள் ஏதேனும் சிறந்த நூலினைக் கற்று மகிழவே பெரிதும் விரும்புவர். அத்தகைய நூல் ஒரு பெருங்காப்பியமாகவோ பேரிலக்கியமாகவோ இருந்தால் அதை முழுவதும் படித்து இன்புற அவர்களது வாழ்க்கைச் சூழல் இடம் தருவதில்லை. விரிவஞ்சி அந்தக் காப்பியம் வாரிவழங்கும் இலக்கிய இன்பத்தை அவர்களால் பெற முடியாமற் போய் விடுகின்றது. எனவே இலக்கியச் சுருக்கம் இன்றியமையாததாகிறது.

கம்பராமாயணத்தன் சிறப்பு

தமிழிலக்கியப் பரப்பில் கம்பராமாயணம் பன்னீராயிரம் விருத் தங்களைக் கொண்ட ஒரு பாக்கடல். இது தமிழின்-தமிழரின் தனிப் பெரும் செல்வம். இலக்கியச் சுவையில் ஈடு இணையற்றது. கற்றார் இதயத்தைக் களிக்கச் செய்வது.

கம்பராமாயண இன்கவித்திரட்டு

இப்பெருங்காப்பியத்தை முழுவதும் கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் சிலரேயாவர். அவருள் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் குறிப் பிடத் தகுந்தவர். இவர் கம்பராமாயணம் என்னும் ஆழ்கடலில் மூழ்கி இனிய கவிதை முத்துக்களை அள்ளியெடுத்தவர். கம்பராமாயணத் தில் தாம் படித்த - சுவைத்து மகிழ்ந்த கவிதைகளைத் தெரிவு செய்து பிறரும் இன்புறும் வண்ணம் அவற்றை முதலில் ‘கம்பராமாயண இன் கவித் திரட்டு’ என்னும் பெயரிலும் பின்னர் அதையே ‘கம்ப ராமாயணசாரம்’ என்னும் பெயரிலும் வழங்கியுள்ளார்கள்.

கம்பராமாயண ஈடுபாடு

இளமைக் காலத்திலிருந்தே இவருடைய தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் திருநெல்வேலி வித்துவான் அழகிய சொக்கநாதபிள்ளை என்பதை முன்பே கண்டோம். அவர்தாம் முதலியாரவர்களின் கம்பராமாயண ஈடுபாட்டிற்கும் காரணமானார். அயோத்தியா காண்டம் குகப் படலத்தில் அமைந்துள்ள 'சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற' என்ற பாடல் முதல் ஏழு பாடல்களை எடுத்துக் காட்டி அவற்றுள் அடங்கிக் கிடக்கும் உட்பொருளைக் காணுமாறு அவர் முதலியாரவர்களிடம் கூறினார்.

அழகிய சொக்கநாத பிள்ளை ஆழ்ந்த புலமை மிக்கவர். கவிதை களை இயற்றுவதிலும் இயற்றப்பட்ட கவிதைகளின் அருமை பெருமைகளையெல்லாம் விரித்துரைத்து விளங்க வைப்பதிலும் வல்லவர். எனவே அவர் எடுத்துக் காட்டிய ஏழு கவிதைகளிலும் சிறந்த கருத்துகள் அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வெ.ப.சு. அவர்கள் அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தும் புதிதாக ஒன்றும் புலப்படாத நிலையில் பிள்ளையவர்களிடமே அவற்றின் சிறப்பினைப்பற்றிக் கேட்டிருக்கிறார். அதற்கு அவர் அப் பாடல்கள் சிறந்தவை என்று பலரும் கூறத் தாமும் கேள்விப்படிருப் பதாகவும் ஆனால் சிறப்புகள் எதுவும் தமக்கும் தெரியவில்லை என்றும் சொல்லிவிட்டார்.

உட்பொருள் ஆராய்ச்சி

பெரும்புலவராலேயே புரிந்து கொள்ள முடியாத கருத்துகள் தமக்கு எவ்வாறு விளங்கப் போகின்றன என்ற எண்ணத்தில் முதலியார் அவர்கள் ஓய்ந்து விடவில்லை. அயோத்தியா காண்டத்தின் பல பதிப்புகளையும் படித்ததோடு புலவர் பலரிடமும் விளக்கம் கேட்டும் பயனில்லை. ஆனாலும் அவர் அத்துடன் விட்டு விடவில்லை.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

(திருக்குறள் 611)

என்ற உணர்வோடு துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தார். அவரது முயற்சி வீண்போகவில்லை. பாடல்களின் உட் பொருள் புலப்படத் தொடங்கியது.

செந்தமிழ் இதழில் இன்கவித் திரட்டு

இவ்வாறு கம்பராமாயணத்தில் பல இடங்களில் அரிய கருத்துகள் புதைந்து கிடக்கலாம். அவற்றையெல்லாம் கண்டறிந்து வெளிக் கொண்டுவர வேண்டும் என்ற உணர்வுதான் முதலில் கம்பராமா யணத்தில் இடம் பெற்றுள்ள இன்கவிகளைத் திரட்டத் தூண்டுகோலாக அமைந்தது. அத் தூண்டுதலே கம்பராமாயண இன்கவித்திரட்டும் உரையும் கதைத் தொடர்ச்சியும் மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டு வந்த 'செந்தமிழ்' இதழில் 1922 ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து வெளிவரவும் காரணமாயிற்று.

நீதிபதியின் பாராட்டுக் கடிதம்

'இன்கவித் திரட்டு' செந்தமிழ் இதழில் வெளியான வாரத்தில் முதலியார் அவர்களுக்கு அறிமுகமில்லாத ஒருவரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அக்காலத்தில் தூத்துக்குடியில் நீதிபதியாக இருந்த சி.வி.கிருஷ்ணசாமி ஐயரவர்கள் அதனை எழுதியிருந்தார்.

''நேற்றிரவு இவ்வூர் ஆனந்த நடராஜ கானசபையின் முதல் வருடக் கொண்டாட்டத்தில் நான் அவைத் தலைமை வகித்தேன். என் முடிவுரையில் கம்பராமாயணம் வெகு மேன்மையான காவியமாயிருந்தாலும் அது வெகு விரிவாய் இருப்பதனால் இக் காலத்தில் எல்லாத் தமிழபிமானிகளும் படித்து ஆனந்திக்கச் சாவகாச மில்லை என்றும் அந்தப் பெரிய காவியத்திலுள்ள இன்கவிகளை ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகாகவியின் கவிகளை 'ஷேக்ஸ்பியரின் எழிற் கவிகள்' (Beauties of Shakespeare) என்று தேர்ந்தெடுத்துப் பதிப்பித்தது போலப் பதிப்பிக்க வேண்டுமென்றும் இந்த சத்கருமத்தைச் செய்யும்படி ஈசன் அருள் புரிய வேண்டும் என்றும் நடராஜாவைப் பிரார்த்தித்தேன். இவ்வளவு சீக்கிரம் பிரார்த்தனை நிறைவேறுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் எத்தனித்த காரியம் மிகவும் மெச்சத்தக்கது. இனி ஒவ்வொரு மாதமும் 'செந்தமிழ்' பத்திரிகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப் பேன். சர்வேஸ்வரன் தங்களையும் தாங்கள் எடுத்துக்கொண்ட காரி யத்தையும் அனுக்கிரகிப்பார் என்று நம்புகிறேன். தங்களை எனக்குத் தெரியாத போதிலும் தங்களுடைய நன்முயற்சியினால் ஆனந்தப் பட்டு எழுதினேன்'' என்று 4-1-1923இல் அக்கடிதத்தை அனுப்பி யிருந்தார்.

கடிதத்தைப் படித்துப்பார்த்த முதலியார் அவர்களுக்கு வியப்பாக இருந்தது. தமக்கு அறிமுகம் ஆகாத ஒருவர், உயர் பதவியிலிருப் பவர் இவ்வாறு கடிதம் எழுதக் காரணமாக இருந்தது கம்பராமா யணத்தின் தாக்கம் என்பதை அறிந்து மகிழ்ந்தார்கள். அவர் எடுத்த பணிக்கு இந்நிகழ்ச்சி மேலும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. பால் கிரேவ் (Paul Grave) எழுதிய பொற்களஞ்சியம் (The Golden Treasury) என்ற நூல் எந்த அளவுக்கு ஆங்கில இலக்கியம் படிப் பவர்களுக்கு- குறிப்பாக மாணவர்களுக்கு ஒரு தங்கச் சுரங்கம் போல அமைந்ததோ, டாட் வில்லியம் (Dodd Willian) எழுதிய ஷேக்ஸ் பியரின் எழிற்காட்சிகள் (Beauties of Shakespeare) என்ற நூல் எந்த அளவுக்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படித்து மகிழ ஆர் வங்கொண்டோருக்குத் துணையாக அமைந்ததோ அவற்றைப் போல முதலியார் அவர்களின் 'கம்பராமாயண சாரமும்' தமிழிலக்கிய ஆர் வலர்களுக்குக் குறிப்பாகக் கம்பராமாயணச் சுவைஞர்களுக்கு நல்விருந்தாக அமைந்துள்ளது.

கம்பராமாயண சார நூல் வெளியீடு

1922 ஆம் ஆண்டுமுதல் செந்தமிழ் இதழில் தொடர்ந்து வெளி வந்த கம்பராமாயண இன்கவித்திரட்டு 1936 ஆம் ஆண்டு கம்ப ராமாயண சாரம் என்னும் பெயரில் நூல்வடிவம் பெற்றது.

முதலியார் அவர்களின் 'கம்பராமாயண இன்கவித் திரட்டே புத்தாடை புனைந்து வரும் நங்கையெனக் "கம்பராமாயண சார" மாக வெளிவந்தது.

வெளியீட்டு நோக்கம்

"கம்பராமாயணத்தை விரிவஞ்சி முழுதும் படிக்காத கற்றோரும் மற்றோரும் அதன் இனிமையான பகுதிகள் முழுவதையும் கற்றறிந்து ஆனந்தித்துப் பயனடையும்படி கருதினேன். அக்கருத்து நிறை வேறுமாறு சேற்றூர் சமஸ்தான வித்துவான் மு.ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள், திருநெல்வேலி ஹிந்து கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும் நமது சக்கரவர்த்தி இளவரசராக இருந்தபோது நேராக அளித்த 'கில்லத்துப்' பரிசு பெற்றவராகவும் இருந்த காலஞ் சென்ற மே.சொ. சுப்பிரமணியக் கவிராயர் ஆகிய இவர்கள் உதவி

யுடன் ஆராய்ந்து என் சிற்றறிவுக்குப் பலவகையிலும் சிறந்தனவாகத் தோன்றிய பகுதிகளைத் தெரிந்தெடுத்து வெளியிடலானேன். இதன் அளவு 'நைடதம்', 'பிரபுலிங்க லீலை' போன்ற காவியங்களின் அளவுக்கு அதிகமாய் இராது. குறுகிய குறளையே 'நானூறு குறள்' 'நூறு குறள்' எனக் குறுக்கி வெளியிடும் இக்காலத்தில் கம்பராமாயணத்தைச் சுருக்கிக் 'கம்பராமாயணசாரம்' என வெளியிடல் மிகையாகாது'' என்று கம்பராமாயண சார வெளியீட்டு நோக்கத்தை முதலியார் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

பெருங்காப்பியத்திலிருந்து இனிய கவிகள் என்று தமக்குத் தோன்றியவற்றைத் தாமே தெரிந்தெடுத்து விடாமல் தம்மிற்சிறந்த கவிராயர்களின் உதவியுடனும் ஆசிரியர் திரட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத் தகுந்தது. மேலும் அவர், 'யான் தெரிந்தெடுத்துத் திரட்டிய கவிகள் இனியவை என்று கொள்ள வேண்டுமேயன்றி மற்றக் கவிகள் இனியவை அல்லன எனக் கருதலாகாது' என்றும் தெளிவு படுத்தி யுள்ளார்.

ஆசிரியரின் தன்னடக்கம்

''இவற்றிலே சேர்ந்திருக்கின்ற இன்கவிகளைக் காட்டிலும் விடப் பட்ட இன்கவிகள் அதிகம் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் வையா புரிப்பிள்ளைக்கும் எனக்கும் பொதுவான கருத்து'' என்று பி.ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் 'நானறிந்த தமிழ் மணிகள்' என்ற நூலில் கூறி யுள்ளார். ஆனால் முதலியார் அவர்கள் ''கம்பராமாயண சாரத்திலே'' சேர்த்தற்குரிய சில கவிகளின் நயம் எனக்குப் புலப்படாமையால், அவை சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம்; அவ்வாறே சேர்த்தற் குரிய நயம் இல்லாதவை சில எனது பகுத்தறிவுக் குறைவால் சேர்க்கப்பட்டிருக்கலாம்'' என்று கூறியிருப்பது அவரது தன்னடக் கத்தையும் பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மிதியி யம்புவ தியாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே!

என்னும் கவிச் சக்கரவர்த்தியின் அவையடக்கப்பாடலின் தாக்கம் முதலியார் அவர்களிடத்தில் வெளிப்படுகிறது.

நூல் அமைப்பு

பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் முடிய ஆறு காண்டங்களிலும் அடங்கிய கவிகளிலிருந்து 864 பாடல்களை முதலியாரவர்கள் தேர்ந் தெடுத்திருக்கிறார்கள். ஏழாவது - உத்தரகாண்டம் பற்றிக் கருத்து வேறுபாடு இருப்பதால் கம்பராமாயணசாரம் முற்றிற்று என்று முடித்து விட்டார்கள். தொடர்ந்து ஆறுகாண்டங்களும் வெளிவந்துள்ளன.

அதன்பிறகு, 'திருப்பனந்தாள் மடத்துத் தலைவரவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 'கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு ஏற்படுத்தியதில் உத்தரகாண்டமும் சேர்க் கப்பட்டுள்ளது. அந்தப் பரிசுக்காகப் படிப்பவர்களுக்கு உதவியாக முதலியார் 'கம்பராமாயண சாரம் - உத்தரகாண்டம்' என்ற தலைப் பில் நூலை வெளியிட்டுள்ளார்கள்

முந்தைய ஆறு காண்டங்களில் அமைந்துள்ளது போலப் பாடல் களும் அவற்றின் கீழே கொண்டு கூட்டு முறையும், பொருளும் விளக்க உரையும், என்பன போன்ற அமைப்பு முறை இல்லாமல் உத்தரகாண்டத்தின் கதைத் தொடர்ச்சி மட்டும் 'செந்தமிழ்' இதழில் வெளியாகி உள்ளது.

உரைத் திறன்

உரையாசிரியர்கள், ஒரு செய்யுளுக்குப் பதவுரை, பொழிப்புரை மட்டும் கூறுவதோடு நின்று விடாமல் பாடலைத் துருவி ஆய்ந்து தோய்ந்து அதன் உட்பொருள்களையும் சிறப்புகளையும் கண்டறிந்து எடுத்துக் கூறும்போதுதான் அவர்களின் திறமை வெளிப்படுகிறது.

ஒரு நூல் இயற்றப்பட்ட காலம், காலச்சூழல், உணர்வுகள், மரபுகள், படைப்பாசிரியரின் உள்ளக் கிடக்கை, போன்றவற்றை எல்லாம் கண்டறிந்து வெளிக் கொணரும்போது உரையாசிரியர் திறனாய்வாளராகவும் திகழ்கிறார். அத்தகைய திறமையை முதலியார் அவர்களின் உரைகளிலும் காண முடிகிறது.

'கம்பராமாயண சாரம்' என்ற நூலில் அவர்கள் திரட்டி அமைத் திருக்கின்ற பாடல்களுக்கு எழுதியிருக்கும் உரை, அறிஞர் பெருமக் களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது மரபு வழியிலே எழுதப் பட்டிருப்பினும் எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அவ்வுரை அமைந்துள்ளமையைக் காணலாம்.

உரை அமைப்பு முறை

முதலில் பாடலுக்குரிய தலைப்பும் அதன் பின் பாடலும் இடம் பெற்றிருக்கும். பாட்டுகள் சீர் பிரிக்கப்பட்டிருக்கும் அடுத்து அமைந் திருப்பது, **கொண்டுகூட்டு**, இது பொருள் கொள்ளும் முறை எட்டனுள் ஒன்று

"கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது
கொண்டு கூட்டே' என்கிறது நன்னூரல்

(418)

பாட்டின் பல பகுதிகளும் பொருளுக்குப் பொருத்தமாக முன் பின்னாகக் கூட்டப்படும் கொண்டு கூட்டுக்குப் பின் **பொருள்** என்னும் பகுதி, இங்கு இடம் பெற்றுள்ளது. பாட்டின் கருத்து விளங்குவதற்கு முக்கியமான பாட்டுப் பகுதிகளுக்கு மட்டும் உரை எழுதப்பட்டிருக் கும். அதைத் தொடர்ந்து வருவது **குறிப்பு**. இப்பகுதியில் அருஞ் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவைகளின் விளக்கமும் இலக்கணக் குறிப்புகளும் அவற்றை அடுத்து விஷேச உரைகளும் இறுதியில் பாட பேதங்களும் இடம் பெற்றிருக்கும். குறிப்புக்குப் பின் அமை வது **கதைத் தொடர்ச்சி**. இப்பகுதியில் பாட்டுகளில் இடம்பெறாத கதைகளும் இந்நூலில் விடப்பட்டுள்ள இன்கவிகளின் சாரமும் அடங் கியிருக்கும். இவ்வாறு **தலைப்பு, பாட்டு, கொண்டு கூட்டு, பொருள், குறிப்பு, கதைத் தொடர்ச்சி** என்ற ஆறு பகுப்புகளைக் கொண்டு உரை சிறப்பாக அமைந்துள்ளது.

நூலின் சிறப்புகள்

அக்காலத்தில்(1920) சென்னை மாகாணத்திலேயே முதன் முதலாகத் 'தாகூர் சட்ட விரிவுரையாளர்'(Tagore Law Lecturer) என்ற புகழுக்குரிய தகுதியைப் பெற்றவரும், தமிழ்ப் பேரறிஞருமான கா.சுப்பிரமணிய பிள்ளை 'கம்பராமாயண நயங்களைத் தெரிந்துரைப் பதில் மிகவல்லவர்' என்று முதலியாரவர்களைப் பாராட்டியுள்ளார். அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. ஏனெனில் வித்துவான் அழகிய சொக்கநாத பிள்ளை யாலும் வேறு தழிழறிஞர்கள் பலராலும் கண்டறிய முடியாத கம்பராமாயணப் பாடல்களில் புதைந்து கிடக்கும் உட்பொருள்களைப் புலப்படுத்தியிருப்தே சான்றாகும். அவற்றுள் ஒன்றிரண்டை இங்குக் காண்போம்.

அயோத்தியா காண்டப் பாடல்கள்

'சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ரரரென்று குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யாண்பிறத்த லாற்றுறந்த பெரியா ளென்றான்'

(குகப்படலம் 131)

என்ற அயோத்தியா காண்டம் குகப்படலத்தில் அமைந்த இப் பாடலும் இதனைத் தொடர்ந்த ஆறுபாடல்களும் முதலியார் அவர் களின் உட்பொருள் காணும் திறமைக்குச் சான்றாக அமைந்தவை.

காட்டுக்குச் சென்ற இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் செல்லப் பரதன் தன் அன்னையரும் மற்றவரும் சூழ வருகின்றான். கங்கைக் கரையில் முதலில் பரதனும் குகனும் சந்திக்கின்றனர். பின்னர் குகன் கேட்க, பரதன் தன் அன்னையரை அவனுக்கு அறிமுகம் செய்யும் இடம் இது.

கூப்பிய கையுடன் தொழுது நின்ற நிலையில் கோசலையைப் பார்த்து, 'இவர்யார்?' என்று குகன் வினவுகின்றான். அவ்வாறு அவன் வினவிய கேள்வி, அதற்குப் பரதன் கூறிய பதில் ஆகியவற்றை முதலியார் அவர்கள் எடுத்துக் கூறும் முறையில் அவரது உரை காணும் திறன் வெளிப்படுகிறது.

'கண்டு தொழச் சமயம் நோக்கிக் காத்துக்கொண்டு அரசர்கள் தங்கி யிருக்கப் பெற்ற முற்றத்தையுடைய தசரதச் சக்கரவர்த்தியின் முதல் மனைவி, மூன்று உலகங்களையும் பெற்ற பிரம்மதேவனைப் பெற்ற ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைப் பெற்றதனால் அடைந்த செல்வத்தை நான் ஒரு பாவி பிறந்ததனால் இழந்த பெருந்தகை என்பது பரதன் கூறும் பதில். இது இயல்பான பொருள்.

அரசரும் தேவரும் தொழுதுகொண்டிருக்கும் ஒருவரைக் கை நீட்டிச் சுட்டிக்காட்டி இவர் யார்? என்று கேட்டல் தகாத முறை என்பதால் குகன் தொழுத கையுடன் கேட்டதாகக் கம்பர் கூறினார் என்று முதலியார் அவர்கள் விளக்கம் தந்துள்ளார்.

மேலும் கோசலா தேவியைச் சுற்றத்தார் ஏன் தொழுகின்றனர்? தேவர்கள் ஏன் தொழுகின்றனர்? என்பவற்றைக் குகன் கேளாமல் கேட்ட கேள்வியாகக்கொண்டு முதலியார் அவர்கள் அதற்குரிய விடை கூறுகிறார்கள். 'தசரதனது பட்டத்தரசியாதலால் சுற்றத்தார் தொழுகின்றார்கள். திருமாலின் அவதாரமான இராமனைப் பெற்றவளாதலால் தேவர்கள் வந்தனை செய்கிறார்கள் என்று கம்பர் தெரிவிக்க விரும்பினார்' என்பது முதலியார் அவர்களின் சிறப்புரை.

மேலும் பரதன், தான் பிறவாமல் இருந்திருந்தால் கைகேயி வரம் கேட்டிருக்க மாட்டாள். இராமன் காட்டுக்குப் போயிருக்க மாட்டான். தசரதன் இறந்திருக்க மாட்டார்' என்று விரிவுரை கூறியுள்ளார்.

குகனைக் கோசலைக்குப் பரதன் அறிமுகப் படுத்தும் 'நைவீரலீர் மைந்தரினித் துயரால்' எனத் தொடங்கும் பாடல் உரையிலும் முதலியார் அவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

குகன் அப்போது அழுத கண்ணோடும் தொழுத கையோடும் நிற்கின்றான். அவனுக்கும் தம் மக்களுக்கும் கோசலை ஆறுதல் கூறுவதாக அமைந்தது இப்பாடல்,

"...........
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடுங் கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றாள்."

(133)

இவனோடு சேர்ந்து நீங்கள் ஐந்து சகோதரர்களும் மன ஒற்றுமையால் ஒருவரே போன்று விசாலமான பூமியை நெடுங்காலம் அரசாள்வீராக! என்று ஆசீர்வதித்தாள் என்ற இயல்பான உரையைக் கூறிவிட்டுப் பின் அப்பாடலின் நயத்தினை விளக்குகிறார்.

'குகன், இராமனின் துணைவன் என்று தெரிந்த பிறகு கோசலை அவன் ஓர் அந்நியனாவது பற்றி இமைப் பொழுதும் ஒரு சிறிதும் திகைக்காமல் அவனைப் பெற்று நெடுங்காலம் வளர்த்த தாயின் தன்மையுடையவளாகித் 'தான் சக்கரவர்த்தினி - அவன் கேவலம் வேடர் தலைவன்' என்ற உயர்வு தாழ்வு ஓர் அணுவும் தோன்றாதொழியத் தாய்மை பாராட்டி அவன் அழுததற்கு ஆறுதலும் தொழுததற்கு வாழ்த்துதலும் செய்த சாதுரிய நிருவாகம் 'அரசறிற்

பிறந்து பின் அரசரில் வளர்ந்து அரசிற் புகுந்த பேரரசியான அத் தேவியினது உயர்ந்த பிறப்பு வளர்ப்பு முதலிய மேம்பாடுகளை உணர்த்துதல் ஊன்றி நோக்கி உவத்தற்குரியது' என்று கூறும் முதலி யாரவர்களின் சிறப்புரை சிந்தித்து மகிழத்தக்கது.

குகப்படலப் பாடல் சிறப்பு

கங்கைக் கரையில் குகனும் பரதனும் முதன் முதலில் சந்திக்கின்ற காட்சியைக் கம்பர் மிக நுட்பமான செய்யுளில் அமைத்துக் காட்டி யிருக்கிறார்.

உரையாசிரியர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கு அந்தக் காட்சி ஒரு சிறந்த இடம். இராமனைக் காணத் தன் அன்னையர் சுற்றம் மற்றும் மக்கள் சூழ வருகின்ற பரதனைக் குகன் முதலில் ஐயுற்றாலும் பின் தெளிந்து அவனை வரவேற்க வருகிறான். இருவரும் எதிர் எதிரே வருகின்ற காட்சியைக் கம்பர்,

வந்தெதிரே தொழுதானை வணங்கினான்; மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்;
தந்தையினுங் களிகூரத் தழுவினான்; தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

(122)

குகன் வந்து எதிரே கைகூப்பித் தொழுது பரதனைக் காலில் விழுந்து வணங்கினான். பிரம்மதேவனும் அடிபணியும் பெருமை யுடைய பரதனும் குகன் காலில் விழுந்தான். சிந்தையுள்ளும் சென்னி மீதும் வீற்றிருக்கும்படி மேம்பட்ட பெரும்புகழ் படைத்தவனாகிய குகன் தந்தையைவிட அதிகமான களிப்புண்டாகப் பரதனைத் தழு வினான் - இது முதலியார் அவர்கள் தரும் உரை. மேலும், குகன் பரதனைத் தழுவினான் என்பதற்கு அடுத்து வரும் 'தழுவின புளிஞர் வேடன்....'(123) என்ற பாடலைச் சான்று காட்டித் தமது உரைக்கு முதலியார் அவர்கள் அரண் அமைத்துக் கொள்கிறார்கள்.

வேந்தர் குலத்தினனான பரதன், வேடர் குலத்தவனான குகனை அடிபணிதல் தக்கதே என உய்த்துணர வைப்பதற்காகவே கம்பர், பிராமணர் தலைவனாயிருத்தலன்றித் தேவர் தேவரான மூவருள்ளேயே ஒருவனாயுள்ள 'மலர் இருந்த அந்தணனும் தலை வணங்கும் அவனும்' என்று பரதனை விசேடித்தார் என விளக்கம் தருகிறார் ஒரு சில மாறுபட்ட கருத்துகளையும் உரையாசிரியர் சிலர்

கூறியுள்ளனர். அவற்றை 'முந்திய உரைகளிற் பரதன், குகன் காலில் விழுந்தான், என்று கூறப்படவில்லை. அவர்கள் தங்கள் உரைகளுக்கு ஏற்ப அடுத்த பாடலில் தொடங்கும் 'தழுவின புளிஞர்' என்பதற்கு வழக்கமான செம்பொருளைவிட்டுத் 'தழுவப்பட்ட' என்று இடர்ப் பட்டு உரை கூறினர் என்பது முதலியார் அவர்களின் மறுப்பாகும்.

குகன் காலில் பரதன் விழுந்து வணங்கியதை உறுதி செய்ய முதலியார் அவர்கள் பெரியபுராண நிகழ்ச்சியொன்றைச் சான்று காட்டுகிறார்கள். மூத்த வேட்டுவக் குகன் காலில் இளைய கோப்பர தன் வீழ்ந்தது வேளாண் குலத்து முதிய அப்பர் மூர்த்தி காலில் விப்பிர குலத்துப் பிள்ளைப் பருவச் சம்பந்த மூர்த்தி வீழ்ந்தது போல(பெரிய புராணம்- திருநாவுக்கரசு நாயனார் புராணம் 397 ஆம் பாட்டைப் பார்க்க) தக்க செயலேயாமென்க என முடிக்கிறார்கள்.

முதலியார் அவர்களின் கருத்தினையொட்டி உரையாசிரியர் வை.மு.கோ. அவர்களும் பரதனைக் குகன் வணங்க அந்தப் பரதனும் குகனை வணங்கினான். குகன் மிக மகிழ்ச்சியோடு பரதனைத் தழு வினான் என்பதாகும். தாழ்ந்த சாதியாயினும் இராம பக்தியுடைய வனாதலால் அது வணங்கும்படி குகனுக்கு மேன்மையை விளைத்த தென்றார்.

வெ.ப.சு உரைகூறும் முறையும் உரைநடை அழகும் படிப்பவர் களுக்கு இன்பம் பயப்பனவாய் அமைந்துள்ளன.

தாம் தேர்ந்தெடுத்த கவிகளின் பொருள் கண்டு திறனாய்ந்து தெளிந்து புதை பொருள்களைப் புலப்படுத்தி நயங்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்ற முதலியாரவர்களின் ஆழ்ந்தகன்ற அறிவாற்றலை அறிஞர்கள் பலரும் பாராட்டியுள்ளனர்.

சுந்தர காண்டச் சுவைமிகு கவிதைகள்

அசோக வனத்தில் சிறையிருந்த சீதையை அனுமன் தேடிக் கண்டு கொண்டான். இராமன் சொன்ன அடையாளச் செய்திகளை அவன் சீதைக்குக் கூறிய பின் இராமன் கொடுத்தனுப்பிய கணையாழியை அனுமன் அவளிடம் கொடுக்கிறான். மோதிரத்தை வாங்கிய சீதை பெற்ற மகிழ்ச்சியைக் கம்பர், 'இறந்தனர் பிறந்தபயனெய்தினர் கொல்' (உரு-படலம்-93) என்று தொடங்கும் பாடல் முதல் ஆறு பாடல் களில் வியப்பும் நயப்பும் மிகுந்து விளையுமாறு வருணிக்கிறார். இப்

பாடல்களில் அமைந்துள்ள உவகைச்சுவை போலத் தமிழ் நூல்களில் வேறு எங்கும் இல்லை என்றும் பிறமொழி நூல்களுள்ளும் இருக் குமோ என்பது ஐயப்பாடு என்றும் முதலியார் அவர்கள் தமது கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வளவு பெருமகிழ்ச்சி கொண்ட சீதை முதலில் அனுமனுக்கு நன்றி கூறுகிறாள்:

'மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் றூதாய்ச்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென்னா லெளிய
துண்டே
அம்மையா யப்பனாய் வத்தனே யருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானு நல்கினை யிசையோ டென்றாள்

(உருக்-படலம்: 100)

இவ்வாறு நன்றி கூறிவிட்டுச் சீதை அனுமனை வாழ்த்தும்போது

'பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ள லேயான் மறுவிலா மனத்தே னென்னில்
ஊழியோர் பகலா யோதும் யாண்டெலா முலக மேழும்
ஏழும்வீ வுற்ற ஞான்று மின்றென விருத்தி யென்றாள்'

(உருக் - படலம் 101)

அனுமனைச் சீதை வாழ்த்திய 'இன்றென இருத்தி' என்னும் ஓர் அடியின் ஒரு பாதியாக உரைக்கக் கூடியதை,

'ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்றாள்

என இரண்டடியாக வளர்த்து நீட்டிக் கூறியது ஆயுளை நீட்டிக்கச் செய்தது போன்றிருத்தல் நோக்கத் தக்கது என்ற நுட்பத்தை எடுத்துக் காட்டுகிறார்.

நோய் நொடிகளுடன் கூடி நீண்ட காலம் வாழும்போது ஒரு நாள் ஒருயுகம் போல நீள இருப்பதால் அவை நீங்கப் பெற்று கேடுகள் அனைத்தும் விலகவும் இப்போது அனுமனிடத்திலுள்ள நலங்க ளெல்லாம் நிலைக்கவும் 'இன்றென இருத்தி' என்று வாழ்த்தி யருளினாளாம். கம்பர் திறமையாகப் பொதிந்து வைத்திருக்கும் இப் பொருளை முதலியார் அவர்கள் விரித்து எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

'இன்றென இருத்தி' என்பது சொல்லால் வாமனனையும் பொருளால் திரிவிக்ரமனையும் போன்றது என்று உவமை வாயிலாக வும் உரைவிளக்கம் தருகிறார். முதலியார் அவர்களின் இத்தகைய உரைத்திறனைக் 'கம்பராமாயண சாரம்' முழுவதிலும் கண்டு இன்புறலாம்.

பாராட்டுரைகள்

கம்பராமாயணச் செய்யுள்கள் சிலவற்றில் அடங்கிக்கிடக்கும் உட் பொருளைக் காண முதலியார் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளை வாகத் தோன்றி உரையுடன் கூடிய 'கம்பராமாயண சாரம்' தமிழறிஞர் பெருமக்களின் பாராட்டுகளைப் பெற்றுக் கற்போர் உள்ளங்களில் களி பேருவகை அளித்துக்கொண்டிருக்கிறது.

'பத்மாவதி சரித்திரம்' ஆசிரியரான அ. மாதவையா நடத்தி வந்த 'பஞ்சாமிர்தம்' பத்திரிகையில் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் 'கம்பராமாயண இன்கவித்திரட்டு' என்ற தலைப்பில் தமக்குச் சுவை யுள்ளவை எனத் தோன்றிய பாடல்களைப் பொறுக்கியெடுத்து விளக்கக் குறிப்புகளுடன் வெளியிட்டு வந்தார், எனது கம்பராமாயண ஆர்வத்துக்கு அடிப்படை அந்த 'இன்கவித் திரட்டே' என்றும் எனக்கு வாழ்க்கையில் சோர்வு உண்டானால் மேற்படி புத்தகங்களை(கம்ப ராமாயண சாரம்) எடுத்துச் சில கவிதைகளைப் படிக்கிறேன்' என்றும் எழுத்துலகில் மன்னராகத் திகழ்ந்த **கல்கி** கூறியுள்ளார்.

'சித்தர்கள், மலைகளிலும் காடுகளிலும் மலைக்குகைகளிலும் மனக்குகையிலும் சாவாமல் இருக்க மருந்தைத் தேடினார்கள் வெள்ளகால் முதலியாரோ அந்த மூவாச் சாவா மருந்தைத் தமிழிலேயே, முக்கியமாகக் கம்பன் காவியத்திலேயே கண்டு பிடித்தார்' என்று இராமாயணப் பெருங்காப்பியத்தில் மூழ்கித் திளைத்த **பி.ஸ்ரீ.ஆச்சார்யா** அவர்கள் பாராட்டுகிறார்கள்.

ஒரு மூல நூலின் உயர்வும் சிறப்பும் உரையாசிரியர்களால் அமை யும். கம்பராமாயணக் காப்பிய உரையாசிரியர்களுள் சிறந்தவராகக் கருதப்படுபவர் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார். அவர், 'ராவ் சாஹிப் வெ ப சுப்பிரமணிய முதலியார் அவர்களின் கம்பராமாயண சாரமும் இப்பதிப்பிற்கு உதவிற்று' என்று அவரது அயோத்தியா காண்டப் பதிப்பில் (1949) கூறியிருக்கிறார்

'கம்பனது ஆளுகைக்குட்பட்ட உலகில் இதுவரை நுழைந்து பாராதவர் கண்டு மகிழவும் அவ்வுலகைப் பார்த்திருக்கும் பொன்னான வாய்ப்பினைப் பெற்றவர்கள் மேலும் புதியபுதிய இன்பங்களைப் பெற்று மகிழவும் இந்நூல்(கம்பராமாயண சாரம்) உதவும்' என்ற கருத்தினை **விபுலானந்த அடிகள்** எழுதுகிறார்கள்.*

பலகாலம் தேர்ந்துதேர்ந்து இன்புற்று வெளியிடப்படுவதாகலின் இப்புத்தகம் (கம்பராமாயண சாரம்) முதலியாரவர்களுடைய பலவகை ஆற்றல்களையும் ஆராய்ச்சி முறைகளையும் தெரிவிக்கின்றது.

'இதனைத் தமிழ் நாட்டார் படித்து இன்புற்றுப் பார்ப்பார்களாயின் முதலியார் அவர்களுடைய பேருழைப்பின் சிறப்பு நன்றாகப் புலப் படும் என்பது திண்ணம்' என்று **தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்** அவர்கள் பாராட்டி வாழ்த்தியுள்ளார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியரான **ஸ்ரீ.நாராயண ஐயங்கார்**, 'கம்பராமாயண இன்கவித் திரட்டைப் பற்றி எனக்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதனை நான் தங்க ளுக்குத் தெரிவித்தால் முகமன் என்று எண்ணக் கூடுமோ என்று ஐய முடையவனாகி இதுகாறுமெழுதாதிருந்தேன். பல பிரதிகளை ஒப்பு நோக்கி நன்கு பரிசோதித்தெழுதப் பெறுதலால் பல சுத்தமான பாடங் களும் பொருள் நயங்களும் நன்கு புலப்படுத்தப்படுகின்றன.

தொடர் மொழிகளுக்கு இடையிடையே இசை யெச்சத்தானும், பிற குறிப்புக்களானும் விரித்துக் காட்ட வேண்டிய சொற்களை இரு பிறைக் குறிகளுக்கிடையே அமைத்தெழுதியிருப்பதை உற்று நோக் குந் தோறும் உள்ளம் களிப்புறுகின்றது. காவியச்சுவை நுகர விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் உரையைக் கண்டு களியாதிரார்.

இக்காலத்துச் சிலர் போலத் தத்தம் கொள்கைகளை நூலிடை நுழைக்க விரும்பாது கவி கருதிய கருத்தெதுவோ அதனையே புலப் படுத்திச் செல்லும் தங்கள் பொது நோக்குடைமையும் புலமைத்

* In conclusion one can confidently say that this book will open the portals of the wide expanse "that deep-browed Kamban ruled as his demesne" to those who have not yet entered into those vast realms and to the fortunate few who have entered herein the book will serve as a guide to lead them to spots of fresh delight.

- Swami Vipulananda

திறமையும் பாராட்டத்தக்கன. இத்தகைய புத்துரையை முற்றுவித்துப் புத்தக ரூபமாகப் பதித்துதவினால் அது தமிழ் செய்த தவப் பயனென்றெண்ணப்படும்' என்பது அவரது பாராட்டுரை.

பத்திரிகை ஆசிரியரும் அந்நாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு **டி.எஸ்.சொக்கலிங்கம் பிள்ளை** தமது பாராட்டுரையில்,

"கம்பரின் பாட்டை அப்படியே கொடுத்துவிட்டு அடுத்த படியாகச் சந்தி பிரித்து, கொண்டு கூட்டு என்னும் தலைப்பில் - வசனத்தில் அதை எழுதியிருக்கிறார். பின்னால் வியாக்கியானத்தோடு கூடிய விரிவான பொருள் கொடுத்திருக்கிறார் வேறுபல அறிஞர்கள் கொடுத்திருக்கும் பொருள்களையும் பிறபாட்டுகளிலிருந்து மேற்கோளையும் இங்கே சேர்த்திருக்கின்றார். முடிவாக அரும்பத விளக்கமும் கொடுக்கிறார். எனவே இவ்வளவு சுலபமாகக் கம்பரின் கவிநயத்தை முழுவதும் அனுபவிக்கக் கூடிய விதத்தில் அவர் எழுதியிருப்பதால் புலமை எதுவுமில்லாமல் சாதாரணமாய் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்குக்கூடக் கம்பராமாயணத்தைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும் விதத்தில் இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்(தினிமணி 13-05-1937)

2. சுவர்க்க நீக்கம் - முதற்காண்டம்

ஆங்கில இலக்கிய உலகில் மங்காப் புகழுடன் இன்றும் நின்று நிலவுவது ஜான் மில்டன் இயற்றிய 'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் பெருங்காப்பியம். இது கிறிஸ்தவ மக்களின் வேத சாத்திரத்தை உள்ளடக்கியது. அவ்வேதத்தின் பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டுமே சொற்சுவை பொருட்சுவையோடு காப்பிய இலக்கணங்கள் எல்லாம் அமையப் பெற்றுப் புகழொடு விளங்குவனவாகும்.

பன்னிரண்டு காண்டங்களைக் கொண்ட 'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் இப்பெருங்காப்பியத்தின் முதலிரண்டு காண்டங்களிலேதான் காப்பிய இலக்கணங்கள் எல்லாம் பொருந்தியுள்ளன என்ற சிறப்பு மட்டுமல்லாமல் உலகிலுள்ள பல மொழிகளிலும் எழுதப்பட்ட இலக்கியங்கள் எல்லாவற்றிலும் இது மேலானது என்பதும் அறிஞர்கள் பலரின் கருத்து என்பதை வெ ப சு. அவர்கள் முதலில் எடுத்துக்காட்டுகிறார்கள்.

உலகிலுள்ள வேறுசில மொழிகளிலும் இது மொழிபெயர்க்கப் பட்டிருப்பது இக்காப்பியத்தின் சிறப்பிற்கு மேலும் ஒரு காரணமா கும். முதலில் லத்தீன் மொழியிலும் பின்பு கிரேக்கம், பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மணி, ஸ்பானியம், போர்ச்சுகீசியம், ருஷ்யம், சுவேதேனியம் போன்ற சில மொழிகளில் 'பாரடைஸ் லாஸ்ட்' மொழிபெயர்க்கப்பட்டிருப்பதையும் தமிழிலும் வேதக் கண்ணு ஐயர் என்பவரின் "ஆதிநந்தவனப் பிரளயம்" என்னும் நாடகம், யோவான் சாமுவேல் ஐயரின் "முதற்காண்ட வசனம்," தாமஸ் வேத நாயக நாடாரின் அம்மானை வடிவிலுள்ள "பூங்காவனப் பிரளயம்" ஆகிய ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வெளியாகி இருப்பதை யும் எடுத்துக்கூறி வெ.ப.சு. அவர்கள் அப்பெருங்காப்பியத்தின் சிறப்பினைப் புலப்படுத்தியுள்ளார்கள். இவ்வளவு பெருமைக்குரிய பெருங்காப்பியத்தைத் தாமும் மொழிபெயர்க்க வேண்டும் என்று முத லியார் அவர்களின் உள்ளத்தில் எழுந்த ஆர்வத்தின் விளைவுதான் 'சுவர்க்க நீக்க முதற்காண்டம்' என்னும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்.

மொழிபெயர்ப்பின் தொன்மை

தொன்று தொட்டுத் தமிழிலக்கிய வரிசையில் மொழி பெயர்ப்பு நூல்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன என்பதை,

'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே'

(தொல்-பொருள்-மரபியல் 99)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறிய முடிகின்றது. 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று பாரதி கூறியதற்கேற்ப இன்று தமிழில் எல்லாவகை இலக்கியங் களும் அறிவியல் நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

மொழிபெயர்ப்பு-மேனாட்டார் கருத்து

கவிதை நூல்களை உரைநடையிலும் உரை நடை நூல்களைக் கவிதை நடையிலும் மொழிபெயர்ப்பதுண்டு.ஆனால் மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குப் பெயர்ப்பது மட்டுமன்று கவிதையினைக் கவிதையில் மொழிபெயர்ப் பதாகும் என்கிறார். மேனாட்டறிஞர் சர்.ஜான்டெல்ஹாம்(Art of

Translation) மேலும் லார்ட்வுட் ஹவுஸ் என்பார் ஒரு கவிதையைக் கவிஞன்தான் மொழிபெயர்க்க வேண்டும் என்று கூறிகிறார்.

இக்கருத்து சுவர்க்க நீக்க முதற்காண்ட நூலுக்குப் பொருந்தும். செய்யுள் வடிவில் அமைந்த மூல நூலை வெ.ப.சு. அவர்கள் செய்யுளிலேயே மொழிபெயர்த்துள்ளார். மேலும் அவர் யாப்பறி புலவர்; மரபு வழிக் கவிஞர்; இருமொழிப் புலமை மிக்கவர். எனவே "பாரடைஸ் லாஸ்ட்" என்னும் பெருங்காப்பியத்தை மொழிபெயர்ப் பதற்கான தகுதிகள் யாவும் அவரிடம் அமைந்திருந்தன.

தமிழ்க் காப்பியங்களில் விருத்த யாப்பு

தமிழ்க் காப்பியங்களில் விருத்தயாப்பு சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதை சீவகசிந்தாமணிப் பெருங்காப்பியத்திலும் அதன் பிறகு கம்பராமாயணத்திலும் காணலாம். கம்பருக்கு இவ்வகை யாப்பு கை வந்த கலை. 'விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்று புகழப்படுபவர் அவர். பெருங்காப்பியங்களுக்கு இப்பெருங்கவிஞர் கள் பயன்படுத்தியுள்ள விருத்தப்பாவை முதலியார் அவர்கள் தமது, இந்த மொழிபெயர்ப்புக்குப் பயன் படுத்தியிருக்கிறார். இதனை வெ.ப.சு. அவர்களே தமது ஆங்கில முன்னுரையில் குறிப்பிட்டிருக் கிறார்.[1]

'இந்நூல் காந்தம், இராமாயணம், பாரதம் போன்ற பெருங்காப்பிய மாயிருத்தலால் அவைகள் எழுதப்பட்டுள்ள விருத்தப் பாவே தகுதி யுடைதென்று அந்தப் பாவிலேயே இதை மொழி பெயர்க்கலானேன்' என்றும் மூல நூல் விஷயத்துக்கேற்ப அதிகெம்பீரமான உன்னத நடை யில் எழுதப்பட்டிருத்தலால் அதற்கிணங்க இம்மொழிபெயர்ப்பும்.... உயர்நடைக் கவிஞர்களை முன் மாதிரியாகக் கொண்டு ..உயர் நடையில் எழுதப்பட்டிருக்கிறது என்றும் தமிழ் யாப்பமைதியும் நடை யமைதியும் இடம் கொடுத்த அளவு மூலத்தின் கருத்துகளைக் கூட்டு வதையோ குறைப்பதையோ மாற்றுவதையோ தவிர்த்து அவற்றின் யதார்த்த நிலையை அப்படியே வெளியிட்டிருக்கிறேன் என்றும் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள்.[2]

---

[1] "The main portion of this work is a translation of Book I of Paradise Lost in Tamil 'Viruttam' the metre in which 'Kamba Ramayanam' and most of the other great Tamil Epic Poems are written"

[2] முகவுரை

கதையின் சாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சொந்தக் கற்பனை அலங்காரம் முதலியவற்றோடு கலந்து வெளியிடுவதே தகுதி யுடையது என்ற தமிழ்ப் பண்டிதர் சிலரின் கொள்கையை முதலியார் ஏற்றுக்கொள்ளவில்லை.

நூல் அமைப்பு முறை

மொழிபெயர்ப்பில் தாம் பின்பற்றிய வழிமுறைகளைத் தெளிவாகக் கூறியபின் நூல் அமைப்பு முறையைப்பற்றிய விளக்கங் களைத் தந்துள்ளார்கள்.

செய்யுள் வடிவில் அமைந்துள்ள மொழிபெயர்ப்புப் பகுதி நடுவில் இடம் பெற்றுள்ளது. இப்பகுதிக்கு முன் 'மில்டனார் சரித்திரம்' 'சுவர்க்க நீக்கக் கதை' ஆகிய இரண்டும் அமைந்துள்ளன. மொழிபெயர்ப்புப் பகுதிக்குப் பின் 'சுவர்க்க நீக்க முதற்காண்ட வசனம்' 'சுவர்க்க நீக்க வியாக்கியானம்' ஆகிய இரண்டும் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொடர்ந்து அரும்பத விளக்கம் பரிசோதனைப் பத்திரம் ஆகிய பகுதிகள் அமைந்துள்ளன. நூலைக் கற்பவர் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இத்தகைய முறையை ஆசிரியர் கையாண்டிருக்கிறார். மொழி பெயர்ப்புப் பகுதி 241 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூல் 1895 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

கதைச்சுருக்கமும் பெயர்க்காரணமும்

சகல மனுஷ ஜாதியாருக்கும் மூலபிதாமாதாக்களென்னும் ஆதாம் ஏவாளாகிய ஆதிமக்கள் ஏதேன் தேசத்தில் பல வளங்களும் மலிந்து மனோகரமாய் விளங்கிய ஒரு சிங்கார வனமே சுவர்க்கமாக, அச்சு வர்க்கத்தில் இனிது வாழ்ந்த காலத்திலே, கடவுள் தின்னக்கூடாதென்று விலக்கியிருந்த விலக்கு மரக்கனியைச் சாத்தானது வஞ்சச் சோதனை யிலகப்பட்டு மயங்கித்தின்று தேவகற்பனையைக் கடந்து பாவஞ் செய்ததனால் நித்தியத்துவம் நீங்கி மரணத்துக்கும் சகல துன்பங் களுக்கும் (அவர்களும், அவர்கள் மூலமாகச் சந்ததியாராகிய எல்லா மனிதர்களும்) உள்ளாகி அச்சுவர்க்கத்தினின்று நீக்கப்பட்ட விஷயத்தைக் கூறுவதனால் 'சுவர்க்க நீக்கம்' எனப் பெயரிடப்பட்டது' என்று வெ.ப.சு. அவர்கள் சுவர்க்க நீக்கக் கதைச் சுருக்கத்தையும் பெயர்க் காரணத்தையும் கூறியிருக்கிறார்கள்.

'பாரடைஸ் லாஸ்ட்' என்ற ஆங்கிலச் சொற்களை 'சுவர்க்க இழப்பு' என மொழிபெயர்க்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். மனிதர்கள் சுவர்க்கத்திலிருந்து நீக்கப்பட்டார்கள் என்ற கருத்துக்கு 'நீக்கம்' என்ற சொல்தான் பொருந்தும். எனவே 'சுவர்க்க நீக்கம்' என்ற வெ.ப.சு அவர்களின் மொழிபெயர்ப்புதான் சிறந்தது எனலாம். மரபு முறைக்கு ஏற்ப முதலில் மொழி பெயர்ப்புப் பாயிரம் அமைந்துள்ளது. அதன், முதல் மூன்று பாடல்கள் படைப்பாசிரியரின் புகழ் பாடுகின்றன.

ஏன்ற ஒன்றுக்கொன் றிடைநெடுங் காலங்கள் இறந்த
மூன்று காலத்துத் தோன்றினர் மூன்றுமா கவிஞர்
ஏன்ற நற்கிரீ சித்தலி இங்கிலாந் தென்னும்
ஆன்ற தேயங்கட் கணியென விளங்கினர் அனையார்' 1
முன்னர்த் தோன்றியோர் உயர்அர்த்த கவுரவ முதிர்ச்சி
தன்னில் யாரினும் மேலவன் தகுசெய்யுள் நடையின்
உன்ன தத்தினில் அத்தகை யோன்நடு உற்றோன்
பின்னு தித்தவன் இரண்டினும் எவரினும் பெரியோன் 2
இயம்பும் முன்னையோர் இருவரைத் தந்திட்ட இயற்கை
தியங்கி அன்னதின் மிக்கது செய்யவல் லாதே
தயங்கு அம்முனோர் இருவர்கள் தம்மையும் இயைத்து
வயங்க லுற்றமுன் றாமவனை வகுத்தது மாதோ! 3

மேற்சுட்டிய பாடல்களில் ஹோமர் என்ற பெருங்கவிஞரின் அர்த்த கவுரவத்தின் முதிர்ச்சியையும் வெர்ஜில் என்னும் கவிஞரின் செய்யுள் நடையின் உன்னதத்தையும் இவ்விருவரின் ஆற்றலையும் ஒருசேரப் பெற்ற மில்டனது கருத்து, நடை ஆகியவை பொருந்திய காப்பிய நயத்தையும் வெ.ப.சு அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.இவை டிரைடன் இயற்றிய பாடல்களின் மொழிபெயர்ப்பாகும்.

டிரைடன் இயற்றிய அப்பாடல் மில்டனின் உருவப் படத்தின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது என்பர்.*

---

* "Three poets in three different ages born
Greece, Italy and England did adorn
The First in loftiness of thought surpassed;
The next in majesty; in both the last
The force of nature, could no further go;
To make a third, she join'd the former two"
-Dryden John, Lines under Portrait of Milton

பிறமொழியில் இயற்றப்பட்ட ஒரு பெருங்காப்பியத்தைத் தமது தாய்மொழியில் பெயர்த்தெழுதும் முயற்சி பெரிதாயினும் 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்ற ஊக்க உணர்வோடு வெ.ப.சு. அவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

'கானமுய லெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

(குறள் 772)

என்பார் வள்ளுவர்-அவர் வகுத்த வழியைப் பின்பற்றி வெ.ப.சு. அவர்கள்,

நரியை எய்தகோல் உருவினும் நாண்தகும் கரிகொல்
அரியை எய்தது பிழைப்பினும் இழுக்கன்றென் றான்றோர்
கரைவ துன்னிஎற் கெளியன கழறுதல் தவிர்த்துப்
பெரிய இன்னகாப் பியமொழி பெயர்த்திடல் பெட்டேன்

(பாயிரம் - 9)

என்று தமது முயற்சியின் அருமையினை அழகுபடக் கூறுகிறார்கள்.

காப்பியத் தொடக்கம்

தமிழில் பெருங்காப்பியங்கள் முதலில் வாழ்த்து, வணக்கம் கூறிப் பின் வருபொருள் உரைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளன. 'திங்களைப்போற்றுதும்' என்று சிலம்பு இயற்கை வழிபாட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. 'மூவா முதலா' எனத் தொடங்கித் தேவாதி தேவன் சேவடிக்கு வாழ்த்துச் சொல்கிறது சிந்தாமணி. 'உலகம் யாவை யும் தாமுளவாக்கலும்' என்று கம்பர் வழிபாட்டுப் பாடலுடன் தமது பெருங்காப்பியத்தைத் தொடங்குகிறார். தமிழ்ப் பெருங் காப்பியங்களின் மரபு இவ்வாறு அமைந்துள்ளது. ஆனால் மில்டன் காப்பியத்தின் பாடுபொருளை முதலில் கூறியபின் தமது வழிபடு தெய்வத்தினை வணங்கித் தாம் எடுத்த முயற்சி இனிது நிறைவேற வேண்டிக் கொள்ளும் மரபினை மேற்கொண்டுள்ளார். அதற்கேற்பத் தமது காப்பியத்தை OF MAN's first disobedience' என்று தொடங்குகின்றார்.

மூலநூலின் இந்தக் கருத்தினையொட்டி 'மானுடன் முனாட் பரன் பணி கடந்ததும்' (சுவர்.பா.1) என்று வெ.ப.சு. அவர்கள் மொழி பெயர்ப்பைத் தொடங்குகிறார்கள். இதைத் தொடர்ந்து மில்டன்

காப்பியத்தை அடியொற்றித் தமது நூலை மொத்தம் 241 விருத்தப்பாக்களில் பாடி முடித்துள்ளார்.

வாசகர்கள் தம்முடைய நூலின் செய்யுட்களை எளிதாகப் புரிந்து கொள்ள வசதியாக 'சுவர்க்க நீக்க வசனம்' என்ற பகுதி உதவியாக அமைந்துள்ளது. கதைத் தொடர்பு விட்டுப்போகாத முறையில் செய்யுளில் அமைந்த செய்திகள் வசனப் பகுதியிலும் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பின் சிறப்பு

இனி, மொழிபெயர்ப்பில் அமைந்துள்ள சில சிறந்த பகுதிகளைக் காண்போம்.

உவமை, கவிஞனின் புலமையை அறிய உதவும் அளவுகோல். உவமையைப் பயன்படுத்துவதில் மில்டன் புகழ்வாய்ந்தவன் என்பது யாவரும் அறிந்ததே. உவமையால் பெயர் பெற்ற மேனாட்டுக் காப்பியக் கவிஞருள் ஹோமருக்கு முதல் இடம். அவரை அடுத்து மில்டன் இடம் பெறுகிறார். 'Homeric Simile' என்றும் 'Miltonic Simile' என்றும் அவ்விருவருடைய உவமைகளும் புகழப்படுகின்றன. மில்டனின் சிறந்த உவமைகளுள் ஒன்றனைக் காணலாம்.

His legions, angel forms who by entranced
Thick as autumnal leaves that strew the brooks
In Vallombrosa, where the Etrurian shades
High over - arched embower; or scattered sedge
Afloat, when with fierce winds Orion armed
Hath vexed the Red Sea coast whose waves o'er-threw
Busiris and his Memphian chivalry,
While with perfidious hatered they pursued
The sojourners of Goshen, who beheld
From the safe shore their floating carcasses
And broken charriot wheels; so thick bestrown,
Abject and lost lay these covering the flood
Under amazement of their hideous change.
He called so loud, that the hollow deep
Of Hell resounded ....

(301-315)

தீக்கடலில் மிதந்து கொண்டிருந்த தேவதூதர்களின் நிலைமை இங்கே உவமிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியை வெ.ப.சு. அவர்கள்:

கான்அடர் விடுக்கத் துயரிய வளைந்த கப்பினம் பின்னிக்
காவணஞ்செய் - தானமாம் வாலம் புரோசத்தின் நதிகள்தம்
மிசையிலை யுதிர்பருவம், ஆனகாலத்துச் செறிசரு கென்ன
அவர் குழீஇக் கிடந்தனர்; அன்றி - ஈனமோ சஞ்சேர் பகை
மையிற் பார்வோன் இவுளிமா வீரர்களோடுமே

(பா.112)

அன்னிய தேச வாசராக் கோசேன் அமர்வுற்ற இசர
வேலர்கள்-பின்னுறத் தொடர்கால், இவர், கரை யேறப்பெற்
றனர், அவர் பிணத்திரளும்-சின்ன பின்னஞ்சேர் தேருருட்
டிரளும் சிதறின மிதந்திடக் காணத் தன்னலை களினால்
அவரை ஆழ்த் திட்ட தகைய செங் கடலினைமாதோ

(பா.113)

அடர்விசை வளியால், பகைகொள் ஓரியன் தான்அவ
மரச்செய் யுங்கால் அந்தக் கடல்மிசைச் சிதறிக்கிடக்கும்பா
சியையும் கடுத்தனர்; வீழ்வழிவெய்தி உடல்பயங்கரவி
காரம்ஏய்ந் தமையின் உறுமலைப்பொடும் அழற்கடல்மேல்
மிடைவுறீஇப் பொதிந்து கிடந்தனர்; அவரை விளித்தனன்
பிலம் எதிரொலிக்க''

(பா.114)

என்று மொழிபெயர்த்துள்ளார்.

தீக்கடலில் வீழ்ந்து கிடக்கும் எண்ணற்ற தேவ தூதர்களுக்கு இந்த நீண்ட காப்பிய உவமையை மில்டன் பயன்படுத்தி இருப்பதை ஆய்வாளர்கள் சிறப்பித்துக் கூறுவர். வெ.ப.சு. அவர்கள் மூன்று பாடல்களில் இதனை மொழி பெயர்த்ததுடன் வசனப் பகுதியிலும் விளக்கமாகக் கூறியுள்ளார். செய்யுட் பயிற்சி இல்லாதவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் முறையில் அந்த வசனப் பகுதி அமைந்துள்ளது.

மொழிபெயர்ப்பாளர்கள் - ஒப்பீடு

சுவர்க்க நீக்க மொழிபெயர்ப்பைப் பிற மொழிபெயர்ப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது முதலியார் அவர்களின் மொழிபெயர்புத் திறமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவருக்கு முன்பே

சாமுவேல் யோவான், - தாமஸ் வேதநாயகம் ஆகிய இருவரும் மில்டனின் 'பாரடைஸ் லாஸ்ட்' நூலை மொழிபெயர்த்துள்ளார்கள் என்பதைக் கண்டோம். இங்கு ஒரு சில பகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தமது காப்பியத்தின் தொடக்கத்தில் இறை வழிபாட்டுப் பகுதியில் பின்வருமாறு வேண்டிக்கொண்டு 'கடவுள் கற்பனையைக் கடக்கும் படி செய்த காரணத்தைச் சொல்வாயாக' என்பது மில்டன் தேவ ஆவியிடம் கேட்கும் வேண்டுகோளாகும். இப்பகுதியின் ஆங்கிலச் செய்யுள் வரிகள் வருமாறு;

.... say what cause
Moved our grand parents in that happy state

(P.L. lines 28-29)

இங்குள்ள '**Grand parents**' என்னும் பகுதியில் சொற்கள் எவ்வாறு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை ஒப்பிட்டுப் பார்ப்போம். இதனைச் சாமுவேல் யோவான் 'ஆதிநம் தாய் தந்தைகள்' (பரதீசு உத்தியான நாசம்) என்றும் தாமஸ் 'ஆதிநம் தந்தையர்கள்' என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.*

இங்கு தந்தைகள், தந்தையர்கள் என்று கூறுவது தமிழ்ப்பண் பாட்டிற்குப் பொருந்தாது. 'கள்' விகுதி பன்மையைக் குறிக்கும். எனவே, பிழையாகி விடுகிறது. இவ்விரு சொற்களையும் வெ.ப.சு. அவர்கள் கவனமாக 'எமது ஆதிப் பெற்றோர்கள்' என்று மொழி பெயர்த்துத் தவறுக்கு இடமில்லாமல் செய்திருக்கிறார்கள் என்று ஆய்வாளர் எடுத்துக் காட்டுகிறார்.

சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் அவர்கள் செய்த தவறு களுக்காகப் பாதாளத்தில் தள்ளப்படுகிறார்கள் அழிவடைந்துள்ள தேவமகன் 'மனோ சக்திகளால் நம்மை ஒத்துப் பலத்தினால் நமக்கு அதிகனாகிய அவனிடமிருந்து நாம் எவ்வளவு தூரத்தில் இருக் கிறோமோ அவ்வளவும் நல்லதே' என்று கூறிவிட்டுச் சாத்தான் தனது முந்திய இருப்பிடமான சுவர்கத்திடம் விடைபெறுகிறான். தனது புதிய வாழ்விடமான நரகத்தை வாழ்த்துகிறான் அதை மூலநூல்

---

* ஜான் மில்டனின் சுவர்க்க நீக்கத் தமிழ்மொழிபெயர்ப்புகள் ஒரு மதிப்பீடு' - து இராச ராசேசுவரி, எம் ஃபில், ஆய்வேடு 1987)

........Farewell, happy fields,
where joy forever dwells! Hail horrors hail

(P.L. 249,250)

இவ்வாறு கூறுகின்றது:

இதைச் சாமுவேல் யோவான்,

[1] *'சந்தோஷம் என்றும் குடிகொண் டிருக்கும்வானுலகத்தின்*
செல்வப் பூங்கா வனங்களே!உங்களுக்கு வந்தனம் செய்கி
றேன்; பாதாளலோகமே உனக்கும்உன் பயங்கரக் காட்சிக
ளுக்கும்வந்தனம் செய்கிறேன்

(பரதீசு உத்தியான நாசம்)

என்றும், சாமுவேல் தாமஸ்

[2] *'வந்தனம் ஆனந்த மண்டலங்காள் வந்தனம்*
சந்ததமும் மகிழுறையும் சதாநந்தமே வந்தனம்
வாழ்க பயங்கரங்களே! வாழ்க நீ பயங்கரமே!

(பூங்காவனப் பிரளயம்)

என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

இவ்விருவரின் மொழிபெயர்ப்புகளிலும் மூலநூலின் கருத்துகள் சரியாக அமைந்துள்ளன. ஆனால், Farewell, Hail என்ற ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் இடம்பெறவில்லை. தமிழிலுள்ள அச் சொற்களை இங்கு அவர்கள் பயன் படுத்தியிருக்கலாம்.

வெ.ப.சு. அவர்கள்

"தருக விடைநீர் களிப்பென்றும் தங்கும் ஆனந்தத்
தலங்காள்! வருக! வருக! பயங்கரங்கள்! வருக
தாழ்ந்த பில உலகமே!"

(சுவர்க். பா. 98)

என்னும் செய்யுளிலும்,

---

1. ஜான்மில்டனின் சுவர்க்க நீக்க தமிழ் மொழிபெயாப்புகள்-ஒரு மதிப்பீடு-எம.ஃபில, ஆய்வேடு, ப 48.

2 மேற்படி, பக் 49

*'நித்தியானந்தத் தலங்களே! நீங்கள் எனக்கு விடை கொடுப்பீர்
களாக!*

பயங்கரங்களே! வருவீர்களாக!
பாதாளமே! நீயும் வருவாயாக!

(சுவர்க்க - வசனம் ப.139)

என்று வசனத்திலும் மிக எளிமையாகவும் மூலக் கருத்தினைத் தழுவியும் எழுதியுள்ளார்கள்.

Farewell என்பதை இருவரும் 'வந்தனம்' என்றும் Hail என்பதைச் சாமுவேல் யோவான் வந்தனம் என்றும், சாமுவேல் தாமஸ் 'வாழ்க' என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

இருவேறு ஆங்கிலச் சொற்களுக்கும் இணையான 'விடைதருக' 'வருக' என்ற இருவேறு தமிழ்ச் சொற்களை வெ.ப.சு. அவர்கள் தந்துள்ளார்கள். ஏனைய இருவரைக் காட்டிலும் வெ.பு.சு. அவர்களிடம் அமைந்த மொழிபெயர்ப்பாற்றல் இங்கு வெளிப்படுவதை ஆய்வாளர் தம் ஆய்வில் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

ஒப்பீட்டாளார் கருத்து

வெ.ப சு. அவர்களின் மொழிபெயர்ப்பை அவருக்கு முந்திய மொழிபெயர்ப்பாளர்களுடன் ஒப்பிட்டு இராசராசேசுவரி கண்ட ஆய்வு முடிவினை இங்கே தருவது பொருத்தமாகும்.

மொழிபெயர்ப்பில் மூலக்கருத்தமைதி அமைந்துள்ள தன்மையை நோக்கும்பொழுது தருமொழி (Source Language) மூலபாடத்தின் கருத்துகளைச் சிதைக்காமல் கூட்டுதலும் குறைத்தலும் இன்றி மூல பாடக் கருத்தைப் பெறுமொழிக்குக் கொண்டு வருவதில் வெ.ப.சு. அவர்கள் பெரும்பான்மை வெற்றி பெற்றிருக்கிறார்.

வெ.ப.சு. அவர்களின் மொழிபெயர்ப்பில் ஆய்வுக்கு மேற்கொள்ளப் பெற்ற உரைநடைப்பகுதியில் மூலக் கருத்தமையும் பொருட்டு அடைப்புக் குறியினுள் செய்திகளைத் தெளிவாக்குகின்றார் இந்த மொழிபெயர்ப்பு பெரும்பாலும் மூலக்கருத்தமைதி பெற்றுள்ளதாக அமைகிறது. இலக்கியக் கூறுகளுக்குக் குறை நேராமல் அமைத்திருப்பது குறிப்பிடத் தக்கது

மொழி பெயர்ப்பில் நடை இன்றிமையாதது நடைவாயிலாக மொழிபெயர்ப்பின் படிப்பினிமை (Readablity) அளவிடப் படுகிறது

வெ.ப.சு. அவர்களின் நடை எளிமையாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளது. பெறுமொழியறிவு (Tamil Knowledge) ஓரளவு குறைவாக உள்ளவர்களும் படித்து உணரும் அளவுக்கு இவருடைய நடை அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். விளக்கப் பகுதிகளை அவர்கள் அமைக்கும் பாங்கும் குறிப்பிடத்தக்கது.

இலக்கியக் கூறுகளை மொழிபெயர்ப்பதில் அமைந்துள்ள திறனும் பண்பாட்டுக் கூறுகளைப் பகர்ந்துள்ள பாங்கும் மொழிநடையின் எளிமை, தெளிவு, இனிமை ஆகியனவும் இவர் மொழிபெயர்ப்பை முதல் நிலையில் வைக்கத் தகுதியுள்ளதாகச் செய்கின்றன.*

மொழிபெயர்ப்பில் மூலநூலின் கருத்துகள் சிறிதும் குறையாமல் வெ.ப சு. அவர்கள் கொண்டு வந்துள்ள பாங்கினையும் யாவரும் புரிந்துகொள்ளும் முறையில் இனிமையாகவும் எளிமையாகவும் எழுதும் அவரது நடை அழகையும் சுட்டிக்காட்டி மொழி பெயர்ப்பில் வெ.ப.சு. அவர்களின் முதல் நிலையை ஆய்வாளர் தமது ஆய்வின் முடிவில் நிறுவியுள்ளது அவர்களின் இருமொழிப் புலமைக்குத் தகுந்த சான்றாகும்.

அவரது மொழிபெயர்ப்பாற்றலுக்கு மேலும் ஓரிரு பகுதிகளைக் காணலாம்.

'பாரடைஸ் லாஸ்ட்டில்', சாத்தான் நரகத்தை வரவேற்றுக் கூறும் செய்யுள் பகுதியின் முழுமையையும் ஆராய்ந்தால் வெ.ப.சு அவர்களின் மொழி பெயர்ப்பாற்றல் நன்கு ஒளிர்வதை உணரலாம்.

Farewell! happy fields,
Where joy forever dwells, Hail horrors hail infernal world, and thou, profoundest Hell receive thy new possesor: one who brings a mind not to be changed by place or time

(P.L. 249-253)

---

* ஜான் மில்டன் சுவர்க்க நீக்கத் தமிழ் மொழிபெயர்ப்புகள்- ஒரு மதிப்பீடு - து.இராசராசேசுவரி, எம ஃபில் ஆய்வேடு, 1987.

'தருக விடைநீர் களிப்பென்றும் தங்கும் ஆனந்தத் தலங்காள்
வருக வருக பயங்கரங்காள்! வருக தாழ்ந்த பில உலகே!
அரிய ஆழ் நரகே! காலத்தால் இடத்தால் மாறிடுதல்
மருவா மனத்தேன் நின்புதுக் காவலனேன் வரவேற்றிடுவாயே!
(பா.98)

என்பது வெ. ப.சு.வின் மொழிபெயர்ப்பு.

" The mind is its own place and in itself
can make a Heaven of Hell, a hell of Heaven'
(P.L. 254-255)

என்ற இவ்வரிகள்

'மனமே தனக்கு வாழிடமாம் மனம் தன்னுள்ளே பவர்க்கத்தைத்
துனுவான் சுவர்க்க மதுவாக்கச் சுவர்க்கம் பவர்க்கம் ஆக்க வல்லும்'
(பா-99)

என மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

What matter where, if I be still the same
And what I should be, all but less than he
Whom thunder hath made greater? Here atleast
We shall be free; the Almighty hath not built
Here for his envy, will not drive us hence;
Here we may reign secure and in my choice
To reign is worth ambition, though in Hell;
Better to reign in Hell than serve in Heaven
(P.L. ll 256-263)

என்ற இப்பகுதியை

தனிவான் உருமின் எனின் உயர்ந்தோன் தனக்குத் தாழ்
வாம்; தாழ்வொழிய
எனவாற்றாலும் குறையில்லா திருக்கும் முறையே உளன்
எனில்'
(பா-99)

முன்னம் இருந்த படியென்றும் முற்றும் உளனேல் யாங்
கணியான்-மன்னி யிடினும் அதனாலென்? மற்றிங் கெனி
னும் சுவாதீனம் - துன்னி வாழ்வதும். இங்கணியாம் துய்க்க
நோக்கி அழுக்கறுக்கும் - அன்ன பொருள்ஒன் றும்படைத்
தான் அல்லன் எல்லாம் வல்லானே!

(பா-100)

இங்கு நின்று நமைத்துரத்தான்; யாம்ஓர் கவற்சியிலா
தாட்சி- இங்கு புரியலாம்; நரகின் எனினும் இறைமை நயத்
தகும்; ஃ-திங்கென் கருத்தால்; வானிடைத் தொண்டியற்று
குடியா வாழ்தலினும் - இங்கு நிரயத் திறையவனா ஏய்தல்
இனிய தினியதரோ

(பா-101)

என வெ. ப. சு மொழியர்த்துள்ளார்

வசனவழி விளக்கம்

இங்ஙனம் ஆங்கில மூலநூலின் மொழிபெயர்ப்பைப் பாடலில் தரும் வெ.ப.சு அவர்கள், வசன் வாயிலாகவும் இப்பாடலுக்கு அழகிய விளக்கம் தந்துள்ளார்.

'சாத்தானும் அவனைச் சார்ந்தவர்களும் நரகத்தில் தள்ளப்பட்டனர். ஆனாலும் சாத்தான் மனம் தளரவில்லை. சுவர்க்கத்திடம் விடை பெற்று விட்டு நரகத்தை வரவேற்கிறான். சுவர்க்கத்தில் அரசனாக இருப்பவன் மனோசக்திகளால் தங்களை ஒத்தவன் என்றும் பலத்தினால் பெரியவனாயிருக்கும் அவனிடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறோமோ அவ்வளவு நல்லது. என்கிறான். பின்னர்த் தமது வாழ்விடத்துடன் பேசுகிறான்.'

என்பது வசனப் பகுதியாகும்.

வசனப்பகுதியின் சிறப்பு

இனி, வெ.ப.சு அவர்களின் வசனப்பகுதியைப் பார்ப்போம். 'ஏ, அரிய ஆழமுடைய நரகே! கால தேச பேதத்தால் மாறுதல் அடை யாத மனத்தை உடையேனாகிய உன்னுடைய புதிய அரசனை வர வேற்றுக் கொள்வாயாக. மனமானது. (மற்றொன்றையும் தனக்குச் சாரி

டமாக வேண்டாது) தனக்குத் தானே இடமாயிருக்கிறது. சுகம் அனுபவிக்கும் சுபாவமுடையதாயிருந்தால் நரக மத்தியிலும் சுகம் அடைவதாயும் துக்கம் அனுபவிக்கும் சுபாவமுடையதாயிருந்தால் சுவர்க்க மத்தியிலும் துக்கம் அடைவதாயும் இருப்பதால்) தனக் குள்ளே நரகத்தைச் சுவர்க்கமாக்கவும் சுவர்க்கத்தை நரகமாக்கவும் வல்லது. இடி ஒன்றினால் அதிகனாகிய அவனுக்குச் சற்றுத் தாழ்ந்தி ருக்கும் தாழ்வொழிய வேறெந்த வகையிலும் குறையின்றி நான் இருக்கவேண்டியபடியே முன்னிருந்தது போலவே எப்போதும் இருக் கின்றனன் என்னில் நான் எங்கிருந்தாலும் என்ன? இங்காயினும் நாம் ஸ்வாதீனமாக வாழ்வோம். இங்கு நாம் அனுபவிக்கப் பார்த்துத் தான் பொறாமை கொள்ளும்படியான பொருளொன்றையும் எல்லாம் வல்லான் படைத்து வைக்கவில்லை. ஆதலால் அவன் இங்கிருந்தும் நம்மைத் துரத்தமாட்டான். இங்கு நாம் கவலையில்லாமல் அரசாட்சி செய்யலாம். நரகத்திலாயினும் இராசாங்கம் ஆசைப்படத் தக்கதென் பது என் அபிப்பிராயம். பரமண்டலத்தில் தொண்டு செய்வதிலும் நரகத்தில் அரசாளுதல் நல்லதே! (பக் 139-140)

இவ்வாறு மூலநூற் பாடல்களுடன் மொழிபெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்வளவு பொருத்தமாகக் கருத்துகளெல்லாம் ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்குக் கொண்டு வரப்பட்டி ருக்கின்றன என்பது நன்கு விளங்கும்.

வெ.ப.சு அவர்கள் அறிஞர் பெருமக்களுடைய பாராட்டுரை களைப் பெறுகிற முறையில் மேலை இலக்கியச் செல்வங்களைத் தமிழுக்குக் கொண்டுவந்து தந்து நமது மொழியை வளப்படுத்தி யுள்ளார்கள் என்பதை அறிஞர்கள் நன்கு அறிவர்.

இன, மொழி, மத வேறுபாடுகளையெல்லாம் கடந்து ஓர் இலக்கியத்தை இலக்கிய நோக்கிலேயே ஆழமாகக் கற்றறிந்து அதன் அருமை பெருமைகளை நடுநிலையில் நின்று பாராட்டும் பண்பாளர் ஆங்கில அறிஞர் டாக்டர் ஜி யு. போப். திருவாசகத்தை முழுதுணர்ந்து மொழிபெயர்த்த அப்பெருமகனார் 'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் பெருங்காப்பியத்தை மொழிபெயர்த்த வெ.ப சு அவர்களின் திறமான புலமையைப் பாராட்டியிருப்பது சுவர்க்க நீக்கம் என்னும் நூலின் பெருமையை மேலும் ஓங்கச் செய்துள்ளது. மேலும், வால்கர், முத்து ஐயர் போன்ற அறிஞர்களின் பாராட்டுரைகளும் குறிப்பிட தகுந்தவை.

பாராட்டுரைகள்

It is a strange thing that the great English Christian Epic should be reproduced, in this end of the century, in Tamil, for the use principally of non-Christians, and that the translator himself should be a non-christian. One of the readers of the book in India has called it a Christian Puranam and this in fact it is...

It is not possible to give here any extracts which will prove the fitness of the translator for his arduous task, but we feel bound to say after an exceedingly minute and careful study of the lines that the ***translator has succeeded to a very great-indeed a surprising degree in making fluent and intersting Tamil verse out of the stately poetry of the great puriton.***

We may say in conclusion that the writer's prose Tamil style remarkably good, and that quatrains 28-60 are exceedingly spirited.

Certainly Tamil scholars are awakening, and we trust that more and more they will be able to execute translation, publish editions of their ouwn classics and do original work which may benifit generations to come

- Dr. G.U. Pope

The explanations of Milton's poems are wonderfully accurate and show that you have expended great pains over them. Of the correctness of your poetry also, there is no doubt. Those who know Milton's Paradice Lost will be able to see for themselves how faithful your rendering is.

-Extract from the letter of Rev. T. Walker M.A. 29.12.1896

"Many portions of the work are characterised by a choise diction, diginity of style and sweetness of rhythm The author has also taken care to avoid verbosity and the use of unnecessary allusions and has beautifully brought out all the ideas of Milton, however difficult of the rendering of them may be to the admiration of the learned'

-Extract from the opinion of S.Muthu Iyer in Vivekachudanami.

3. அகலிகை வெண்பா

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்

(குறள்-54)

உயிரினும் மேலாகக் கருதப்படுகிற கற்பொழுக்கத்தைக் கருவாகக் கொண்டு தொன்றுதொட்டு இன்றுவரை இயற்றப்பட்டு வருகின்ற இலக்கியங்கள் பல. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் தமது காப்பியத்துக்கு அமைத்துக் கொண்ட மூன்று அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று கற்பு நெறி.

'அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்'

(சிலம்பு)

என்ற முப்பெருங் கொள்கைகளைத் தமது காப்பியத்தில் வலியுறுத்தி யுள்ள இளங்கோவடிகள், கற்புடைப் பெண்ணைத் தேவர்களும் வணங்குவர் என்னும் உயர்ந்த நிலையில் காப்பியத் தலைவி கண்ணகியைப் படைத்துள்ளார்.

இத்தகைய பெருமைக்குரிய கற்பொழுக்கத்துக்கு இலக்காக அமைந்தவள் அகலிகை. புராணத்தில் அவள் வழிபாட்டுக்குரிய பஞ்ச கன்னியருள் ஒருத்தியாகவும் கூறப்படுகிறாள் பன்னெடுங் கால மாகவே அகலிகையைப் பற்றிய பல குறிப்புகளும் கதைகளும் வழங்கி வருகின்றன. அறிஞர்கள் அகலிகையின் கற்புநெறி பற்றிப் பல்வேறு கோணங்களில் அணுகி ஆராய்ந்து வருகின்றனர்.

தொன்மை நூல்களில் அகலிகை கதை

வேதங்களிலும் சதபத பிராமணங்களிலும் புராண இதிகாசங் களிலும் அகலிகையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சதபத பிராமணம் இந்திரனை 'அகலிகை காதலன்' என்று குறிப்பிடுகின்றது இவற்றையெல்லாம் திரட்டித் தமது முதற்காப்பியமாகிய வடமொழி இராமாயணத்தில் வான்மீகியார் அகலிகை பற்றிய ஒரு கிளைக் கதையை உருவாக்கியுள்ளார்.

வான்மீகியாரின் அகலிகை கதை

விசுவாமித்திர் முனிவர் இராம இலக்குவரை அழைத்துக் கொண்டு மிதிலையில் ஜனகர் செய்யும் யாகத்தைப் பார்க்கும்பொருட்டுச் செல்கின்றார் அவர்கள் இடைவழியில் காட்டில் அழகிழந்து கிடக்கும் ஆசிரமம் ஒன்றைப் பார்க்கின்றனர். இராமன் அதன் வரலாற்றை

விசுவாமித்திரரிடம் கேட்க முனிவர் அகலிகை வரலாற்றை அவனுக்குக் கூறுகிறார்.

''இது கௌதம மகாமுனிவருடைய ஆசிரமம். நீண்டகாலம் அவரும் அவர் மனைவி அகலிகையும் இங்கே இருந்து வந்தனர். இடையூறின்றி அவர்கள் தவமும் கழிந்தது. ஒருநாள் இந்திரன் சமயம் பார்த்து ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கௌதமருடைய உருவத்தையும் முனிவேஷத்தையும் தரித்துக் கொண்டு ஆசிரமத்தினுள் புகுந்தான்.

அகலிகையின் உலகப் பிரசித்தமான அழகை நினைந்து அவளை யடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத் தனமாக வந்த தேவராஜன் அகல்யா தேவியைப் பார்த்து 'அழகியே' எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம் என்று முனிவர் குரலில் சொன்னான்.

ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் இல்லை. இந்திரன் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும், தேவராஜனே தன்னைத் தேடிவந்தான் என்று தன் அழகைப் பற்றிக் கர்வப்பட்டு மனநிலை இழந்துவிட்டாள். தேவராஜனின் விருப்பத்துக்கு உடன்பட்டாள்.

பிறகு, 'தேவராஜனே! சீக்கிரம் புறப்பட்டுப்போ பெரும் அபாயத்தினின்று எப்படியாவது உன்னைக் காப்பாற்றிக்கொள்' என்று எச்சரித்தாள். அவனும் நன்றி கூறிப் புறப்பட்டுப் போனான்.

வெளியில் சென்றிருந்த கௌதமர் ஸ்நான ஜபங்கள் முடித்துக் கொண்டு ஆசிரமத்திற்கு வந்து கொண்டிருந்தார். அதுவரை மிகத் தைரியமாக இருந்த இந்திரன் அவரைக் கண்டதும் மிக நடுங்கினான். முகம்வாடி அவர் எதிரில் வணங்கி நின்றான் 'மூடனே! என் வேஷத்தைத் தரித்துக் கொண்டு ஆசிரமத்திற்குள் புகுந்து தகாததைச் செய்தாய். நீ நபுன்சகனாய்ப் போவாய்' என்று கோபம் மேலிட்டுச் சொன்னார்

சினங்கொண்ட முனிவர் இவ்வாறு சொன்ன அக்கணமே இந்திரன் தன் ஆண்மையை இழந்தான். தேவர்கள் பரிதபித்தார்கள்

முனிவர் தம் மனைவிக்குப் பிராயச்சித்தம் விதித்தார். ''அகலிகையே! நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக ஏதொரு

ஆகாரமுமின்றிச் சாம்பல்மேல் படுத்து யார் கண்ணுக்கும் தென்படாமல் வசிப்பாயாக! பலகாலம் கழித்து இவ்விடம் தசரதன் மகன் ஒருநாள் வருவான் அந்த வீரன் இந்த ஆசிரமத்தில் கால் வைக்கும்போது உன் பாவம் நீங்கும்... மறுபடியும் என்னுடன் வாழ்வாய்''* என்று விசுவாமித்திரர் வாயிலாக அகலிகை வரலாற்றை வான்மீகியார் தமது காப்பியத்தில் கூறியுள்ளார் இதை மூலமாகக் கொண்டுதான் இன்றுவரை அகலிகை கதை வெவ்வேறு மாற்றங் களுடன் கூறப்பட்டு வருகின்றது.

பரிபாடலில் வரும் குறிப்பு

சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் அகலிகையைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

இந்திரன் பூசை இவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன், சினனுறக் கல்லுரு
ஒன்றியபடி இதென்றுரை செய்வோரும்...

என்பது அக்கதைக் குறிப்பு. இதுவே தமிழில் அகலிகை பற்றி நமக்குக் கிடைக்கும் முதற்செய்தி.

திருப்பரங்குன்றத்தில் அமைந்த ஓவியக்கூடத்திற்குச் சென்று மக்கள் அங்குள்ள ஓவியங்களைக் கண்டு களித்த வண்ணம் உள்ளனர். ஒருவர்க்கொருவர் அங்குள்ள ஓவியங்களைக் காட்டி விளக்கம் சொல்லிக்கொண்டு வரும்போது 'இது பூனை உருப்பெற்ற இந்திரனது உருவம்; இவள் அகலிகை; இவன் கவுதமன். இவன் கோபித்ததால் அகலிகை கல்லுருவமானாள்.' என்று பேசிக்கொண் டனர். பரிபாடலில் அகலிகை குறித்து இன்னொரு குறிப்பும் காணப்படுகின்றது. ஒன்பதாம் பாட்டில் புலவர் குன்றம்பூதனார் முருகனின் மனைவியான தேவசேனையை ''ஐயிரு நூற்று மெய்ந் நயனத்தவன் மகள்'' என்று குறிப்பிடுகின்றார். கவுதமர் கொடுத்த சாபத்தால் இந்திரன் ஆயிரம் கண்ணுடையவன் ஆனான் என்பது இதன்மூலம் தெரிய வருகிறது

இந்திரன் பூனை உருவம் எடுத்தது, முனிவர் இந்திரனை ஆயிரங் கண்ணுடையவனாகவும், அகலிகையைக் கல்லாகவும் சபித்தது ஆகிய செய்திகள் வால்மீகி இராமாயணத்தில் இல்லை; பரிபாடலில் இடம்

* சக்கரவர்த்தித் திருமகன் (சம்பா வெளியீடு) சென்னை 1957-பக்கம் 33,34

பெற்றுள்ளன. எனவே அவை வேறு நூல்களிலிருந்து எடுக்கப் பட்டிருக்கலாம்.

கம்பர் காட்டும் அகலிகை

கம்பரின் அகலிகை கதை வால்மீகியினின்று மாறுபட்டுப் பரி பாடலில் கூறப்பட்டுள்ள குறிப்புகளோடு ஒத்துச் செல்கிறது. அகலிகை சாபத்திலும் கம்பர் வால்மீகியிலிருந்து வேறுபடுகிறார்.

கம்பரின் அகலிகை ''நெஞ்சினாற் பிழைப்பிலாதாள்'' என்று விசுவாமித்திரர் வாயிலாகக் கூறப்படுகிறாள். மேலும் இராமன் அகலிகையைக் கவுதமரிடம் ஒப்படைப்பதைக் கூறும்போது 'குணங் களால் உயர்ந்த வள்ளல் (இராமன்) கவுதமரை வணங்கி ''மாசறு கற்பின் மிக்க அணங்கினை அவன் கை ஈந்து'' விசுவா மித்திரருடன் புறப்பட்டுச் சென்றான் என்று கம்பர் குறிப்பிடுகின்றார். நெஞ்சினில் பிழைப்பிலாதவளாகவும், மாசறு கற்பின் மிக்கவளாகவும் கம்பர் அக லிகையை வேறுபடுத்திக் காட்டுவது வான்மீகியிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

அகலிகை-இலக்கியச் செய்தி

கம்பனுக்குப் பிறகு அஷ்டப் பிரபந்தம், திருவானைக்கா புராணம் போன்ற சிற்றிலக்கியத் தொகுதிகளில் அகலிகையைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. முதன்முதலில் அகலிகை கதைக்குச் சிற்றிலக்கிய வடிவம் கொடுத்தவர் வெ.ப.சு அவர்கள். அவரது அகலிகை வெண்பாவைத் தொடர்ந்து இந்த நூற்றாண்டில் பல நூல்கள் பல வடிவங்களில் வெளியாகியுள்ளன.

அகலிகை வெண்பா

'வெண்பாவிற் புகழேந்தி'க்குப் பிறகு சிறந்த முறையில் வெண்பா யாப்பினால் ஆக்கப்பட்ட சிற்றிலக்கியம் 'அகலிகை வெண்பா'. வெ.ப.சு அவர்கள் அகலிகை பற்றிய சிறுகாப்பியம் படைக்க வேண்டும் என்று எண்ணவில்லை. கேவலம் பொழுது போக்காகவும் கற்புடையாளொருத்தி கற்பழிய நேர்ந்தசமயத்தில் பொறுத்தற்கரிய மனவருத்தம் அடையும் அதிபரிதாபமான கட்டத்தை வருணிக்கவும் கருதியே தம்முடைய 'அகலிகை வெண்பா' நூலில் அமைந்த ''காதல்

செய்தென் காலனே...'' என்று தொடங்கும் 76ஆம் பாடல் முதல் ''மழைபெய்து தற்புரக்கும் வான்...'' எனத்தொடங்கும் 83ஆம் பாடல் முடியவுள்ள எட்டுப் பாடல்களை இயற்றியதாகச் சொல்கிறார். அதன் பிறகே அகலிகை கதையை ஒரு சிறு நூலாக ஆக்கி மேற்குறிப்பிட்ட எட்டுப் பாடல்களையும் அக்கதையில் இடைப்பெய்து இணைக்கலாம் என்று எண்ணியதாகவும் அவர் இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

நூலின் கருத்து

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

(குறள்: 25)

என்ற குறள் கருத்துக்கேற்ப மனத்தை அடக்கி நன்னெறியில் நின்றார் அடையும் பெருமையையும் அடக்காமல் தீ நெறியிற் சென்றார் அடையும் சிறுமையையும் விளக்குவதற்குச் சிறந்த உதாரணமாகத் தெரிந்தெடுத்துக் குறிப்பிட்டதாக ஆன்றோர் கூறும் கதையை இந்நூல் கூறுகிறது என்று நூலின் கதைக்கருத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

பெயர்க்காரணம்

நன்னெறியிற் சென்றார் அடையும் பெருமைக்கும், தீநெறி சென்றார் அடையும் சிறுமைக்கும் அகலிகை காரணமாக இருந்ததால் இதனை 'அகலிகை கதை' எனல் பொருந்தும், இது வெண்பாவினால் இயற்றப்பட்டதால் 'அகலிகை வெண்பா' எனப் பெயர் பெற்றது,' என்று நூலின் பெயர்க்காரணத்தையும் ஆசிரியர் இந்நூலின் முதற் பதிப்பின் முன்னுரையில் கூறியுள்ளார்.

முதற்பதிப்பில், அகலிகை கற்பிழந்தவளாகக் கூறப்பட்ட செய்தியைப் படித்த வெ ப.சு அவர்களின் நண்பர்களுள் சிலர் அப் பகுதியை மாற்றுவது நலம் என்று சொன்னதாகவும் அவருள் திருநெல்வேலி 'மகா-ள-ள-ஸ்ரீ பி எம்.கைலாசம் பிள்ளையவர்கள் அவ்வாறு மாற்றுவதை வற்புறுத்தியதாகவும் அவர்கள் கூறிய கருத்து களுக்கு மதிப்பளித்து இரண்டாம் பதிப்பில் மாற்றம் செய்திருப் பதாகவும் வெ.ப.சு அவர்கள் சொல்லியுள்ளார்கள்

மூன்றாம் பதிப்பைப் பற்றி ஆசிரியர் 'செந்தமிழ்' தொகுதி 27இல்(1929) ஒரு குறிப்பைத் தந்துள்ளார்கள். மூன்றாம் பதிப்புக்கு உபயோகமாகச் செய்திருக்கிற 'திருத்தங்களும் புதுப்பாட்டுகளும்' என்ற தலைப்பின் கீழ். "இவை மூன்றாம் பதிப்பு வெளியாகா விட்டாலும் பயன்படாது போகாதபடி இங்கே வெளியிடப்படு கின்றன. இரண்டாம் பதிப்பு புத்தக முடையவர்கள் திருத்தங்களைச் செய்ய வேண்டிய இடங்களில் செய்து கொள்ளலும் புதுப்பாட்டு களைச் சேர்க்க வேண்டிய இடங்களிற் சேர்த்துக் கொள்ளலும் செய்யலாம்" என்று திருத்தங்களையும் புதுப்பாட்டுகளையும் கொடுத்துள்ளார்.

அரங்கேற்றம்

அகலிகை வெண்பாவின் முதற்பதிப்பு 5 4.1914இல் இராமநாதபுரம் இராசராசேசுவர சேதுபதியின் தலைமையில் நடை பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 13ஆம் ஆண்டு நிறைவு விழாவின்போது அறிஞர் நடுவே அரங்கேற்றப்பட்டது. பின்னர் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1920 ஆம் ஆண்டிலும், மேலும் சில திருத்தங்களுடன் மூன்றாம் பதிப்பு 1938ஆம் ஆண்டிலும் வெளி வந்தன. மூன்று பதிப்புகளும் ஆசிரியரின் முன்னுரையைப் பெற்றுள்ளன.

நூல் அமைப்பு

சிறு காப்பியமான 'அகலிகை வெண்பா' நளவெண்பாவின் அமைப்பைப்போல காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. காப்பிய மரபு வழியில் முதலில் கடவுள் வாழ்த்தும் இதனையடுத்து அவை யடக்கமும் கூறப்பட்டுள்ளன. இவை நீங்கலாக 293 வெண்பாக் களால் இயற்றப்பட்டுள்ள இந்நூல் இந்திரகாண்டம், அகலிகை காண்டம், கௌதமகாண்டம் ஆகிய மூன்று உட்பிரிவுத் தலைப் புகளைக் கொண்டுள்ளது முந்திய நூல்களில் இந்திரன், அகலிகை, கௌதமர் ஆகியோர் காப்பியமாந்தராக ஆக்கப்படவில்லை. அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்டபின் இராமன் கால்பட்டு மீண்டும் அவள் பெண்ணுருக் கொள்வதைக் கூறுவதற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட இடை நிகழ்ச்சியில் அம்மூவரும் இடம் பெறு கின்றனர். ஆனால், அகலிகை வெண்பாவில் இம்மூவரும் சிறு காப்பிய மாந்தராக ஆக்கப்பட்டுள்ளனர்

ஒவ்வொரு காண்டத்திலும் வெ.ப.சு அவர்கள் தமது கற்பனைத் திறனால் முந்திய நூல்களில் கூறப்படாத சில காட்சிகளை அமைக் கின்றார்.

இந்திரகாண்டம்

இந்திரன் தனது சபாமண்டபத்தில் கொலுவிருக்கிறான். எல்லாச் சிறப்புகளுடனும் கொலுவிருக்கும்போது முந்திய நிகழ்ச்சி நினைவுக்கு வந்து அவனது நெஞ்சைப் பிளக்கத் தொடங்கிற்று.

பிற்காலத்தில் தமிழ் இலக்கியத்திறனாய்வாளர் கூறுவதுபோல பின்னோக்கு உத்தியாக (flash back) அகலிகை பாற்கடல் கடையப் பட்டபோது அமுதுடன் தோன்றியது, அவளை இந்திரனும் கௌதமனும் காலித்தது, இவ்விருவரில் ஒருவர் அவளை அடைய சபதம் (போட்டி) கூறியது, ஆகிய நிகழ்ச்சிகள் இந்திரன் நெஞ்சில் தோன்றின மேலும், முதல் சபதத்தில் அவன் தோற்றதால் அவனே வேண்டிக்கொள்ள பிரம்மதேவன் இரண்டாம் முறையும் வேறு ஒரு சபதத்தைக் (போட்டியை) கூற அதிலும் இந்திரன் தோற்றான். கௌதமர் நாரதரின் உதவியால் வெற்றி பெற்றார். இருமுறையும் தோல்வியுற்றுத் தான் ஏமாற்ற மடைந்ததை எண்ணியெண்ணி இந்திரன் துன்புற்றான். கௌதமர் அகலிகையை மனைவியாகப் பெற்றுத் தமது இடம் வந்து விட்டார். இந்த நினைவு இந்திரனை மிகவும் வாட்டிற்று. காமஉணர்வு மீதுரப்பெற்று இந்திரன் கௌதமரின் ஆசிரமத்திற்கு வந்தான். அயலார் பொருளை விரும்பும் திருடனும் அயலார் மனைவியை விரும்பும் சோரரும் கொலை செய்யும் கொடியரும் கொல்லும் மிருகங்களும் அல்லாமல் வேறு யாரும் விழித்திராத அந்த இரவு நேரத்தில் தக்க சமயத்தை எதிர்பார்த்து அவன் அங்குப் பதுங்கி இருந்தான். இத்துடன் இந்திரகாண்டம் முடி கிறது. (1-109)

அகலிகை காண்டச் செய்திகள்

கௌதமரை ஆசிரமத்தை விட்டு வெளியேற்ற இந்திரன் சேவலைப் போல் குரல் கொடுத்தான். பொழுது விடிந்தது என்று எண்ணிய முனிவர் வெளியேறினார் உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்போது முனிவர் வேடங்கொண்டு இந்திரன் உள்ளே நுழைந்தான் அவனைத் தன் கணவன்தான் என்று

நினைத்தாள் அகலிகை; அவனை வணங்கினாள்; வரவேற்றாள். இந்திரன் அவள் கையைப் பற்றினான். அவன் கைபட்டவுடன் உற்றுணர்வால் அவன் தன் கணவன் அல்லன் என்பதை அகலிகை உடனே புரிந்து கொண்டாள். நிலைமையை அறிந்து உள்ளம் துடித்தாள். உயிரை விட்டுவிடத் துணிந்தாள். இந்திரன் அவளை நெருங்கினான் அகலிகை இடம் கொடுக்கவில்லை. இருவருக்கு மிடையே நன்மை தீமைகளைப் பற்றியும் ஒழுக்க நெறி பற்றியும் நீண்ட சொல்லாடல் நடைபெற்றபின் அவன் அவளைப் பற்றினான்; அவள் துடிதுடித்தாள்; மயங்கிக் கீழே வீழ்ந்தாள். இத்துடன் அகலிகை காண்டத்தை முடிக்கிறார் ஆசிரியர். (110-225)

கௌதம காண்டம்

நூலின் நிறைவாகக் கௌதமகாண்டம் அமைகிறது. இந்திரன் செய்த வஞ்சனையால் விடிந்து விட்டது என்று எண்ணி விடியு முன்னே வெளியேறிக் கங்கைக் கரைக்குச் சென்ற முனிவர் விடிய வில்லை என்பதைப் புரிந்து கொண்டார். ஏதோ வஞ்சனை நடந் துள்ளதை உணர்ந்து நீராடாமலே விரைந்து தமது ஆசிரமத்திற்குத் திரும்பினார்.

அமுதைத் திருடித் தின்றுவிட்ட நாயைப் போல இந்திரன் வெளியேறும் அந்த வேளையில் 'சிங்கம்' போலக் கௌதமர் வந்து விட்டார். சினங்கொண்டு சீறி இந்திரனுக்குச் சாபம் கொடுத்தார். கண்டவர் இகழ்ந்து சிரிக்கும்படி அவன் இச்சித்த உறுப்பே அவன் உடல் முழுதும் அமையச் சபித்தார்.

அதுவரை, மயங்கிக் கிடந்த அகலிகையை முனிவர் மூர்ச்சை தெளிவித்தார். அவளைக் 'கல்லாக' எனச் சாபம் கொடுத்தார். நடந்ததை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாவதைவிட உணர்வே இல்லாத கல்லாகி விடுவது நன்றெனெ நினைத்தாள் அகலிகை. அவளது உள்ள உணர்வுகளை முனிவர் புரிந்து கொண்டார். சாப விமோசனமும் உடனே கொடுத்துவிடுகின்றார். இராமன் வில்லோடு தோன்றிடுவான். "அன்னோன்தாள் தோய்ந்திட நீ தொல்லுருவம் ஏன்றிடுவாய்" என்றும் மீண்டும் எனக்கு மனைவியாவாய் என்றும் சாபவிமோசனம் கொடுத்தார் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று இந்திரனுக்குத் தாம் கொடுத்த சாபத்தை மாற்றினார் அவன் இச்சித்த உறுப்பு அவன் உடல் முழுதும் அவன் கண்ணுக்கு மட்டுமே தெரியும்

என்றும் ஆயினும் அவன் உருவம் மற்ற எல்லோர்க்கும் அழகாகக் காட்சியளிக்கும் என்றும் அவன் தேவருலகம் சென்று முன்போல் ஆட்சி செய்யலாம் என்றும் இந்திரனுக்குச் சாபவிமோசனம் தந்தார். இறுதியாக, விசுவாமித்திரருடன் இராம இலக்குவர் அங்கு வந்தனர் முனிவர் சொன்ன வண்ணம் இராமன் கல்லின் மீது காலெடுத்து வைத்தான். அகலிகை தனது தொல்லுருவம் பெற்றாள். அவளைக் கௌதமரிடம் சேர்த்துவிட்டு மூவரும் தங்களது பயணத்தைத் தொடர்ந்தனர்.

கௌதமரும் அகலிகையும் ஒருமனப்பட்டு மீண்டும் இல்லற வாழ்க்கையை ஏற்றுக்கொண்டனர் என்று கூறித் தமது நூலை வெ.ப.சு அவர்கள் இன்பியல் காப்பியமாக நிறைவு செய்திருக்கிறார்கள்.

இந்திர காண்டத்தில் அகலிகை

இந்திர காண்டத்தில் அகலிகையை அடைய இந்திரனது உள்ளத்தில் எழுந்த காம உணர்வும் அவன் அதை அடக்க முடியாத நிலையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும், அவன் அடைந்த தோல்வியால் அவனது உள்ளத்தில் எழுந்த தாழ்வு மனப் பான்மையையும் (inferiority complex) ஒரு காரணமாக்கிக் காட்டு கிறார் ஆசிரியர்.

ஐதெனிறை மாட்சியான் ஆள்குடியுள் ஓர்எளிய
வைதிகன் அம்மாதர் மணிதன்னை - நொய்துவௌவிச்
செம்மாந்து வாழச் சிறிய வறியனைப் போல்
விம்மாந்து தாழ்கின்றேன் மிக்கு

(பா.78)

என்றும் தன் நிலை தாழ்ந்ததையும்,

ஆற்றல்மிகு காமத்தீ அன்றியான் கோதமற்குத்
தோற்றஅவ மானத்தீச் சுட்டிடுவெப் - பாற்றரிதே

என்று தனக்குற்ற அவமானத்தையும் எண்ணியெண்ணித் துன்புறு கிறான். இவ்விரு உணர்வுகளும் எவ்வாறாயினும் அகலிகையை அடைய அவனைத் தூண்டின. இந்திரன் நெறி தவறியதற்குக் காரண மாக அமைந்தது அகலிகையின் அழகு. ஒன்பது பாடல்களில் அவளது அழகு வருணிக்கப்படுகிறது.

இந்திரனது காம உணர்வைத் தூண்ட இயற்கையும் காரணமாக அமைந்திருத்தலால் ஆசிரியர் வனக்காட்சி வருணனையையும் அமைத்துக் கொண்டுள்ளார்.

அகலிகை காண்டம் - முக்கியத்துவம்

இச்சிறு காப்பியத்தில் இரண்டாவதாக இடம்பெற்ற அகலிகை காண்டம் ஏனைய இருகாண்டங்களிலும் அளவில் பெரியது; 117 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு முன்னும் பின்னும் அமைந்த கதைகள் அகலிகை காரணமாக எழுதப்பட்டிருப்பதால் அவளது படைப்புக்கு முக்கியத்துவமும் தரப்படுகிறது. இங்கு அகலிகை காண்டம் அளவில் கூடுதலாக அமைந்ததற்கு அகலிகைக் கும் இந்திரனுக்கும் இடையே நிகழும் சொல்லாடலும் ஒரு காரணம். 89 பாடல்களில் இருவருக்கும் நடைபெறும் சொல்லாடல் இடம் பெற் றுள்ளது. கம்பராமாயண யுத்த காண்டத்தில் இராவணனுக்கும் சீதைக்கும் இடையே நடைபெறும் நாடகப்பாங்கிலமைந்த உரையா டலைப் போன்றே அகலிகை - இந்திரன் உரையாடல் அமைகிறது. இவ்வுரையாடலின் சில பகுதிகள் ஷேக்ஸ்பியரின் கருத்துக்களைத் தழுவிச் செல்கின்றன.

லுக்கிறீஸ் கற்பழிப்பு

வெ.ப.சு அவர்கள் இருமொழிப்புலமை மிக்கவர். மேனாட்டு ஷேக்ஸ்பியர் மகாகவி எழதிய "லுக்கிறீஸ் கற்பழிப்பு" (The Rape of Lucrece - 1594) என்னும் நெடும்பாடலில் அமைந்துள்ள சாதுரி யமான கருத்துகளைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் ஏற்ற பெற்றி உபயோகப்படுத்தியுள்ளேன்" என்று அவரே கூறியிருக்கிறார். எனவே ஷேக்ஸ்பியரின் தாக்கமும் ஒரு காரணமாகலாம்.

லுக்கிறீஸ் பேரழகு வாய்ந்தவள். கொலாட்டின் (Collatin) என்பவனின் மனைவி அவர்கள் நாட்டு மன்னன் தார்க்குவின் (Tarquin) லுக்கிறீஸின் பேரழகைக் கேள்விப்பட்டான். அவளை அடையச் சூழ்ச்சி செய்து ஓர் இரவில் அவள் உறங்கும் அறைக்குச் சென்று அவளை நெருங்கினான். லுக்கிறீஸ் துணுக்குற்று எழுந்தாள். இரு வருக்கும் இடையே நீண்ட உரையாடல் நடைபெறுகிறது. இது நாடகப் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது. இறுதியில் லுக்கிறீஸ் வலிந்து கற்பழிக்கப்படுகிறாள் ஷேக்ஸ்பியர் உவமை வாயிலாக அந்த நிகழ்ச் சியைக் கூறியுள்ளார்

"The wolf hath seized his prey, the poor lamb cries ....

(II-677)

முதலியார் அவர்களும் அகலிகையின் நிலையை இதே உவமையில் வெளிப்படுத்தியுள்ளார்.

செம்மான் தனைப்பற்றித் தின்னப் புகுந்தபுலி
அம்மான் பதறியுணர் வற்றுறினும் - சும்மா
தினாது விடாவாறே தேவர்கோன் அந்தோ
தனாது கருத்தை முடித்தான்

(பா. 224)

மேலும் லுக்கிறீஸ் கூற்றாக ஆங்கில மகாக்கவி அமைத்துக் கொண்ட

For one Sweet grape, who will the Vine destroy?

(ll 215)

என்னும் இந்த உவமையை,

தருவினைச்சார் வுற்றுத் தழைக்கும் கொடியை
ஒருகனிக்கே கொய்தொழித்தல் ஒக்கும்

(பா. 142)

என்று தமிழாக்கியுள்ளார்.

டார்க்குவின் லுக்கிறீஸைத் தன் வயப்படுத்தும் நோக்கத்தில் பேசிவரும்போது, அவளிடம்,

"But if thou yield I rest thy secret friend
the fault unknown is as a thought unacted

(ll 526-27)

என இவ்வாறு கூறுகிறான்.

இந்திரன் அகலிகையிடம் இவ்வாறே கூறுவதாக அமைத்துக் கொள்கிறார் வெ.ப.சு.

இன்னேநீ சம்மதித்தால், யாரறிவார்? உன்கொழுநன்,
உன்மீது சந்தேகம் ஒன்றுமுறான் மின்னே,
தெரியா நவையெல்லாம், செயயா நவைபோல்,
உரையார் எவரும்; உணர்.

(பா. 205)

என்பது அகலிகை வெண்பாப் பாட்டு.

இவ்வாறு ஷேக்ஸ்பியரின் கருத்துகளை மட்டுமல்லாது அவருடைய தொடர்களையும் மொழிபெயர்த்துத் தமதாக்கிக் கொண்டுள்ளார் முதலியார் அவர்கள்.

அகலிகை பாத்திரம் கையாளப்பட்டுள்ள முறை

வான்மீகியின் அகலிகை ஐயத்திற்கிடமின்றித் தன்னெஞ்சறியக் குற்றம் புரிந்து கற்பை இழந்தவள் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. கம்பர் காட்டும் முறை

கம்பர் வடமொழி இராமாயணத்தைத் தமிழ்ப் பெருங்காப்பியமாக ஆக்கும்போது சமுதாய உணர்வுகளுக்கும் காலச் சூழலுக்கும் ஏற்ப அகலிகையைக் குற்றமற்றவளாக மாற்றுகிறார். ஆனாலும் அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு அவரது அகலிகையும் இடமளிக்கும் நிலையில் படைக்கப்படுகிறாள்.

இந்திரன், கௌதமர் ஆசிரமத்தினுள் புகுந்தபின் நடந்த நிகழ்ச்சியைக் கம்பர் காட்டும் முறையைக் காண்போம்.

மையலால் அறிவு நீங்கி மாமுனிக்கு அற்றம் செய்து
பொய்யிலா உள்ளத்தான் தன் உருவமே கொண்டு புக்கான்
புக்கு அவளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்கஉண்டு இருத்தலோடும் உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்
தக்கது அன்று என்ன ஓராள்; தாழ்ந்தனள்; இருப்பத்தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்'.

என்பது பாடல் இதற்கு உரையாசிரியர் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்,

''புக்கு அவ்வகலிகையுடனே காமவின்பமாகிய புதிய வாசனையுடைய மதுவினது தெளிவைச் சமமாகத் தான் அனுபவித்துக் கொண்டிருக்கையில் (தன்னைப் புணர்ந்தவன் தன் கணவன் அல்லன்) இந்திரன் என்று அகலிகை அறிந்தாள். அறிந்த பின்னும் இந்தச் செயல் தனக்குத் தகுதியானது அன்று என்று ஆலோசித்து அதனை விலக்காதவளாய் அக்கொடுஞ் செயலுக்குத் தான் கீழ்ப் படிந்திருக்க, குற்றமில்லாத மூன்று திருக்கண்களையுடைய பரமசிவனையொத்த பெருவல்லமையுடைய அக்கௌதம முனிவனும்

விரைவாக வந்தான்'' என்று உரை எழுதியுள்ளார்.

இப்பொருளின் பொருத்தமின்மையை ரா இராகவையங்காரும் சோமசுந்தர பாரதியாரும் விளக்கிக் காட்டியுள்ளனர்.

உணர்தல் பொறியான் வரும் புலனுணர்ச்சி
ஓர்தல் ஆராய்ந்து துணியும் அறிவு
இவ்வேறு பாடுகள் நன்குபுலப் படுத்திப்
புணர்ந்தவன் புதுமணச் செயலால்
அவன் அயன்மையைப் புலனுணர்ந்த
அகலிகை அவ்வுணர் வூட்டும் கழுவாய்
காணொணாத்தன் கற்பிழவின் இன்னல்
அவள் உள்ளத்திலூன்றி உளைவித்து
உரனழிக்க யாதும் ஓர்ந்தறிய
ஒல்லாத அகமழிக்கும் அல்லல் மிகையால்
அவச நிலையெய்திச் சாய்ந்து வீழந்தாள்

என்பது சோமசுந்தர பாரதியார் தரும் விளக்கம். அகலிகை உடலால் மாசுற்றாள்; மனத்துக்கண் மாசற்றவள் என்பதே இங்குக் கூறப்பட்ட கருத்து. 'அகலிகை வெண்பா' நூலிலும் இக்கருத்தொற்றுமையைக் காணலாம்.

வெ.ப.சு அவர்கள் செய்த மாற்றம்

எவ்வளவுதான் மூலநூற்கருத்தை மாற்ற முயன்று சொற்களுக்கு உரை கூறினாலும் மூலபாடத்தில் பெருமாற்றங்கள் செய்தால்தான் அடிப்படைக்கருத்துகளில் பெருமாற்றம் செய்ய முடியும். அந்த முறை யில் வெ.ப.சு அவர்கள் புதிய கருத்துகளைப் புகுத்தி அகலிகை வெண்பா நூலை இயற்றியுள்ளார்.

இந்திரன் அகலிகையிடம் பல்வேறு போலி நியாயங்களைக் கூறியும் அவளிடம் கெஞ்சியும் மிஞ்சியும் பேசியும் பயனளிக்காத நிலையில் ''மாதரது இன்பத்தைப் பெறுதற்குரிய மார்க்கம் பலவந்தமே யன்றி வேறில்லை'' என்ற முடிவுக்கு வந்தான். உடல்வலிமையால் அவனை எதிர்த்து அகலிகையால் போராட முடியவில்லை

தன் முயற்சியெலாம் வீணாக உயிர் நீங்கிய நிலையைப் போன்று நினைவிழந்தாள், மூர்ச்சித்து விழுந்தாள் அவளுடைய நிலைமையை

யாரே சொல்லவல்லார். செயத்தக்கது. இது, செயத்தகாதது இது என்று "யுத்தமுற்றாரும் காதலுற்றாரும்" எண்ணுவதில்லை. தம் எண்ணம் ஈடேறுவதற்கு எதையும் செய்யலாம் என்பதுதான் அவர்கள் முடிவு. அந்த முடிவுக்கே இந்திரன் வந்தான். மூர்ச்சித்து உணர்வற்றுக் கிடந்த அகலிகையிடம் தன் கருத்தை முடித்தான். இது வெ.ப.சு. அவர்கள் படைத்த அகலிகையின் அவல முடிவு.

கற்பு நிலை

எவ்வளவுதான் முயன்றும் அறிஞர்களும் கவிஞர்களும் அகலிகையின் உள்ளக்கற்பைக் காப்பாற்ற முடிந்ததேயன்றி உடற்கற்பைக் காப்பாற்ற முடியவில்லை. அகலிகை 'நெஞ்சினாற் பிழைப்பிலாதாள்' என்பதே முடிவாகிறது.

வெ.ப.சு அவர்களும் இந்த முடிவுக்கே வந்துள்ளார்கள். கதை முடிவு எவ்வாறாயினும் தமிழுக்குச் சிறந்ததொரு சிற்றிலக்கியம் வெ ப.சு அவர்களின் முயற்சியால் கிடைத்துள்ளது.

காலந்தோறும் படைப்பாசிரியர்களின் கற்பனைத் திறனுக்கேற்ப அகலிகை கதை புதிய புதிய மாற்றங்களைப் பெற்று வருகிறது.

மரபுவழிக்கவிஞரான வெ.ப.சு அவர்கள் தமது பாடல்களில் உவமையணி போன்ற அணிகளையும் பழமொழிகளையும் ஏற்ற இடங்களிலெல்லாம் அமைத்துக் கவிதை இயற்றுவது வழக்கம். இந்நூலிலும் இத்தகைய சிறப்புகளமைந்த பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

கதை நிகழ்ச்சியில் கற்பனை

தேவர்கள் அமிர்தம் பெறுவதற்காகக் கடலைக் (திருப்பாற்கடலை) கடைந்தபோது உண்ணமுதோடு அப்பெண்ணமுதும் தோன்றினாள். அப்பொழுதே இந்திரனும் கௌதமனும் அவளைக் காதலித்தனர். இருவரில் யார் அவளை அடைவது என்பதை முடிவு செய்யப் பிரம்மதேவர் ஒரு போட்டி வைத்தார்.

இருவரும் கடலுள் மூழ்கியிருக்கவும் அவருள் யார் பின்னெழுவாரோ அவரே அகலிகையை அடைவார் என்பது முதல் போட்டி. முனிவர் பின்னெழுந்தார்; போட்டியில் வென்றார்.

இந்திரன் எவ்வாறேனும் அவளை அடைய விரும்பியதால் முதலில் முனிவர் வென்றதற்கான காரணத்தைக் கூறி இன்னொரு போட்டிக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரம்மனை வேண்டினான்.

இந்திரனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பிரம்மன், முன்னும் பின்னும் தலையுடைய பசு ஒன்றை யார் முதலில் பார்த்து வருகின்றார்களோ அவருக்கு அகலிகை மனைவியாவாள் என்னும் போட்டியை அறிவித்தார். (பா.15)

நாரதரின் உதவியால் இந்தப் போட்டியிலும் முனிவர் வென்றார்; அகலிகையை அடைந்தார் (பா.43)

இக்கதை வெ.ப.சு அவர்களின் கற்பனையில் உருவாகியது. முந்திய மூல இலக்கியங்களில் இல்லாத நிகழ்ச்சியை அவர் தமது கற்பனையில் இங்குப் புகுத்தியுள்ளார்.

இலக்கியத் தன்மை - அணிகள்

இலக்கண நூலார் வகுத்த அணிகள் பல. அவற்றுள் தற்குறிப்பேற்றவணி, உவமையணி ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

இந்திரன் அகலிகையை அடையத் தனியாகக் கௌதமர் ஆசிரமம் அமைந்த வனத்திற்கு வருகிறான். அப்போது காற்றினால் மரக்கிளைகள் அவன்முன் தாழ்ந்து ஆடின. இயல்பாக நடைபெறும் இந்நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பை ஏற்றி, மழையைப் பெய்வித்துத் தம்மைக் காக்கும் மேகவாகனனான இந்திரனே தங்கள் பக்கத்தில் வந்து நிற்கிறானே என்ற மகிழ்ச்சியால் மரங்கள் தங்கள் கிளைகளைத் தாழ்த்தி அவன் காலடியில் வணங்கின என்று குறிப்பிடுகின்றார்

மழைபெய்து தற்புரக்கும் வான்முகில் ஊர்வேந்தன்
உழையெய்த லுற்றானென் றோகை - தழையஅவற்
போற்றித் தலைவணங்கல் போலும் வனம்அவன்முன்
காற்றிற் தலைவணங்கு கை

(பா-83)

என்பது பாடல்.

வெ.ப.சு அவர்கள் கையாண்டுள்ள சிறந்த உவமைகளுள் ஒன்றனைக் காண்போம்.

பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை

(தண்டி -31)

என்று உவமையணிக்கு இலக்கணம் கூறுகிறது தடண்டியலங்காரம்.

அகலிகையின் அழகில் மயங்கிய இந்திரன் அவளது முக அழகை நினைக்கும்போது முழுமதி அவன் மனக்கண்ணில் தோன்றுகிறது. இரண்டையும் இணைத்துப் பார்த்து மகிழ்கிறான்.

மதிமானும் மாதின் வதனம்; மதியுள்
வதிமானை நேரும் மழைக்கண் - மதிமேவு
தெள்ள முதொப்பாகும் திருவாய்மொழி மதியின்
உள்ளொளிர்முத் தாம்பல் லொழுங்கு.

(பா. 52)

என்பது உவமை நயம் அமைந்த பாடல்.

இவ்வாறு அணிநயங்கள் அமைந்த பாடல்கள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை மட்டுமன்றிப் பழமொழிகளையும் குறட் கருத்துகளையும் அறவுரைகளையும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் நூலில் அமைத்துத் தமது திறனைக் கவிஞர் புலப்படுத்தியுள்ளார்.

பாராட்டுரைகள்

வெ.ப.சு அவர்களின் இலக்கியப் படைப்புகளுள் மிகச் சிறந்ததாக அகலிகை வெண்பாவைக் கூறலாம். இந்நூலைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்த தமிழறிஞர்களின் பாராட்டுகளே இதற்குச் சான்றாக அமைந் துள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்குச் சுட்டுவது தகும்.

"அகலிகை வெண்பாவில் காணும் வெண்பாக்களைப் படித்துப் பார்த்தேன். அவை சொல் வளமும் பொருள் வளமும் அமைந்து நன்றாக இருக்கின்றன. இந்நூலிற்காணும் செய்யுட்கள் விரைவிற் பொருள்படுவதாக இருந்தும் ஒவ்வொரு செய்யுளும் இரண்டு முறைக்குக் குறையாமல் படிக்கும்படி செய்கிறது. நூல்முழுவதையும் மெல்லப் படித்துப் பூர்த்தி செய்தேன். 'ரஸபுஞ்சகமாக' இருக்கிறது தமிழ் பாஷையை நன்றாகக் கற்றவர்கள் இதுவரை எதிர்பாராத ஓர்

ஆனந்தத்தை இதனால் அடைவார்கள்என்று நிச்சயிக்கிறேன்''என டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் பாராட்டியுள்ளார்.

''இவ்வினிய நூல் பன்னெறியானும் கற்றார்க்குப் பெரு விருந்தாதல் ஒருதலை. ஸ்ரீமான் இராஜராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்கள் நல்லவைக் கண்ணே இந்நூலை இவ்வாசிரியர் அரங் கேற்றிய காலத்து அந்நல்லவையினை அணி செய்த தமிழ் மக்க ளெல்லாம் இதன் அருமை பெருமைகளை மிகவும் பாராட்டியதை நான் அறிந்துள்ளேன் பல்வகை அழகுடன் சிறந்து விளங்கும் இந் நூலினைத் தமிழ்க்கனியாக உதவியர் ஸ்ரீமான் முதலியாரவர்கள்'' என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர். ரா.ராகவையங்கார் அவர்களின் பாராட்டு

"The special characteristic of the theme is that it is full of human interest and affords a wide scope for one conflict of deep rooted feelings in human nature. Thus it is a theme which can never fail to inspire interest in us so long as human nature is constituted as it is. The author besides choosing a proper subject for his poem has taken pains to delineate in detail the various phases of thought that may surge in the minds of an ideal woman placed in a most trying situation under the sudden clutches of one who set the realisation of his passion above his life and honour. The one point that should excite the admiration of every reader is fidelity to consisitency which the author has made a point of keeping up throughout the poem. Ahalikai is accordingly to Hindu notions one of ideal Indian women for chastity and it is therefore hightly essential that her chastity should not least be stained by the betrayal, of any moral weakness on her part. The idea that she fell into a trance at the thought of her escape from the grip of Indra, next to impossible shows at her best. Thus Akalikai inspite of the incident stands an untamished model for chastity. For presenting the stroy in this fashion, the critical world is much obliged to the author...

-K. Subramania Pillai M.A., M.L. Justice - 22.04.1921

''வெண்பாவிற் புகழேந்தி படைப்பு தான் பல நூற்றாண்டுகளாகத் தமிழர் கண்ட கவியின்பமாக, கவித்துவ உணர்ச்சியாக இருந்து வந்தது. தமிழ்ச் செம்மல் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் 'அகலிகை வெண்பா' என்றோர் அரிய நூலை எழுதி வெளியிட்ட

போது தமிழர் காலங்காலமாகக் கொண்டிருந்த கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முதலியாரவர்களின் புலமை எத்தகைய ஆழமும் அகலமும் உயரமும் கொண்டதென்பதை அகலிகை வெண்பா பறை சாற்றியது. பண்டைய நூல்களில் கூறப் பெற்ற ஒரு கதையைத் தமிழ்ப் பண்பிற்கு ஏற்ற வகையில் மாற்றி யமைத்து அகலிகையின் தூய தன்மையை நிலைநாட்டிப் புதிய சிந் தனையைப் புதியதொரு பார்வையாலும் புகழுமொரு கவித்துவத் தாலும் ஏற்றமும் மாற்றமும் பெறவைத்த வெள்ளகால் முதலியார் தமிழுலகில் புதியதோர் ஒளியாக விளக்கம் பெற்றார்'' என்பது குன்றக்குடி. பெரிய பெருமாளின் பாராட்டுரையாகும். (தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்).

பன்னெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய கதைக் கருவையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக் கொண்டு, தமது கவிதை ஆற்றலாலும் கற்பனைத் திறனாலும் இருமொழிப் புலமையாலும் சிறந்ததொரு சிற்றிலக்கியத்தை ஆக்கித் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கிறார் வெ.ப.சு. முதலியார் அவர்கள்.

4. நெல்லைச் சிலேடை வெண்பா

ஒலிக்குறிப்பால் ஒரேவடிவாக நின்று சொற்றொடர் பலபொருள் தரும் வகையில் அமைக்கப்படுதல் சிலேடை அணி எனப்படும்.

ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெறிதர வருவது சிலேடை யாகும்

(தண்டி.76)

சிலேடை என்பது சிலேஷா என்ற வடமொழிச் சொல்லின் திரிபு என்பர்.

சிலேடை வெண்பா - ஒருவிளக்கம்

புதியனவாகத் தோன்றிய பிரபந்த வகைகளுள் சிலேடை வெண் பாவும் ஒன்று. இவ்வகைப் பிரபந்தங்கள் சிலேடை அமைதியாலும் வெண்பா யாப்பாலும் இப்பெயர் பெற்றன. இவை 'மாலை' என்னும் பிரபந்த வகையுள் அடங்கும். அன்றி 'ஊர்வெண்பா' என்னும் வகை யிலும் அடக்கிக் கூறலாம் என்று டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் 'திருக்குற்றாலச் சிலேடை வெண்பா' என்னும் நூலின் முகவுரையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

சொல்லணியில் முக்கியமானவை யமகம், திரிபு, மடக்கு என்பன. இவற்றுள் செய்யுள் அடிகளில் ஓரடியின் முதற்சீரில் வந்த எழுத்து களில் முதல் எழுத்துத் தவிர மற்ற எழுத்துகள் மற்ற அடிகளின் முதற் சீர்களில் பொருள் வேறுபாட்டோடு தொடர்ந்து வருவது திரிபு அணி யாகும். முதல் எழுத்தும் ஒன்றாக இருந்தால் அது மடக்கணி. அதாவது வந்த சொல்லே மீண்டும் வருவது.

இலக்கண நூலார் கூறும் இவையெல்லாம் பொருந்தி நூறு நேரிசை வெண்பாக்களால் அமைவது சிலேடை வெண்பா. 'நெல்லைச் சிலேடை வெண்பா' இவ்விலக்கணங்கள் எல்லாம் ஒருங்கே அமைந்த பிரபந்தமாகும்.

வெ.ப.சு அவர்கள் இயற்றிய 'நெல்லைச் சிலேடை வெண்பா' நூறு நேரிசை வெண்பாக்களைக் கொண்டுள்ளது. இதனை,

நாரியர்சீர் தேர்ந்துமண நாடுநர்க்கு மிந்நூற்கு
நேரிசைவெண் பாவைதுறு நெல்லை

(பா.69)

எனவரும் சிலேடை வெண்பாவினாலேயே நூலாசிரியர் நயம்பட எடுத்துக்கூறியுள்ளார்.

1. நேர் இசைவு - (சம்மதத்தை) எண் - (ணுகின்ற) பாவை -மாதை, துறும் - மனைவியாகப் பொருந்தும் என்ற ஒரு பொருளும்,

2. இந்நூற்கு - இந்த நெல்லை வெண்பாவுக்கு, நேரிசை வெண்பா - நேரிசை வெண்பா, ஐது - அழகாக உறும் - பொருந்தும். என்ற இன்னொரு பொருளும் தோன்ற அமைத்திருப்பது ஆசிரியரின் திறமையைப் புலப்படுத்துகிறது.

வெண்பா இயற்றுவது எளிதன்று. புலியோடு பழகுவதைப் போன்றது. மேலும் சிலேடை அமையப்பாடுவது வெண்பா யாப்பில் மிகுந்த பயிற்சி உடையார்க்கே இயலும். வெ.ப.சு அவர்கள் வெண்பா, விருத்தம் ஆகிய யாப்புகளில் செய்யுள் இயற்றும் திறமை மிக்கவர் 'அகலிகை வெண்பா,' 'கோம்பி விருத்தம்' எனத் தம்முடைய நூல்களுக்கு யாப்பின் அடிப்படையிலேயே ஆசிரியர் பெயரிட் டுள்ளார். இவை, வெ.ப.சு அவர்கள் யாப்பறி புலவர், மரபுவழிக் கவிஞர் என்பதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

நூல் அரங்கேற்றம்

'நெல்லைச் சிலேடை வெண்பா' கற்பனை வளமும் கருத்துச் செறிவும் உடையது. நெல்லையின் சிறப்பும் இங்கமைந்துள்ள நெல்லையப்பர் திருக்கோயிலின் நிகழ்ச்சிகளும் புராணச் செய்திகளும் நெல்லைத் தலபுராணக் குறிப்புகளும் இன்ன பிறவும் இந் நூலில் இலக்கியச் செறிவுடன் அமைந்துள்ளன. ஆசிரியர் இதனை நெல்லையப்பர் திருமுன்பு (சந்நிதி) அரங்கேற்றியுள்ளார். இச் செய்தியை இவருடைய நண்பர் கவிராச. நெல்லையப்பபிள்ளை பாடிய பாடல்களினால் அறியலாம்.

ஆயிரத் தறுபத் தாறெனும் ஆண்டி
ட்ணுகுறும் விகிர்தியாம் வருடம்
ஏய்தரும் மகர மாமதி மருவு
மெட்டுடனே கமார் தேதி
வாய்தரு புந்தி வாரநற் பகற்று
வாதசியுந் திங்க நணாளும்
தோய்தரு கும்ப லக்கின முஞ்சேர்
சுபதினம் பத்திமை தோன்ற

....

அவ்வேய்வனத் தார்சந் நிதியி
லினிதுஅரங் கேற்றினன் மாதோ!

என்று பழைய மரபிற்கேற்ப இந்நூல் அரங்கேறிய ஆண்டு, மாதம், நாள், நட்சத்திரம், கிழமை ஆகியவற்றை கவிராஜ் நெல்லையப்ப பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார்.

நூல் அரங்கேறியது கொல்லம் ஆண்டு 1066 (1890) ஆகும். விகிர்த வருடம் தைமாதம் ஒன்பதாம் நாள் புதன்கிழமை என்பது கவிராயருடைய செய்யுள் தரும் செய்தி.

நூலாசிரியரே உரையாசிரியர்

இந்நூலுக்கு ஆசிரியரே உரையும் எழுதியுள்ளார்கள். ''நூலாசிரியர் உரை எழுதிவிட்டால் கட்டிமுடித்த கட்டடம்போல் உரைவளர்ச்சி நின்றுவிடும். காலந்தோறும் தோன்றும் புதிய கருத்துகளுக்கு இடமில்லாமற் போய்விடும்'' என்று சிலர் கூறும் கருத்துக்கு வெ.ப.சு அவர்கள் விளக்கம் தந்துள்ளார்கள்.

''இந்நூல் செய்த யானே இதற்குக் குறிப்புரையும் எழுதியது மரபோ எனச் சந்தேகிப்பாருளரேல் அவர்கள் ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்திற் கூறிய 'நூல் செய்தவன் அந்நூற்குரையெழுது வது முறையே' என்னும் உரைச் சூத்திரத்தைப் பார்க்க. இக்காலத்தும் மகா-ள-ள ஸ்ரீ சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய மனோன்மணீய நாடக நூலுக்குத் தாமே குறிப்புரை எழுதியிருப்பதையும் பார்க்க'' என்பது அவர் தரும் விளக்கமாகும்.

இவ்வாறு வெ.ப.சு அவர்கள் ஒரு சிறந்த சிலேடை வெண்பா நூலை அதற்குரிய குறிப்புரையுடன் படைத்துத் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்திருக்கிறார். சிறப்புக்குரிய அவர்களது 'நெல்லைச் சிலேடை வெண்பா' நூலில் அமைந்துள்ள ஒன்றிரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

கோலமனை கொண்கனைக் கொண்கனில்லை
முன்னிலையி
னீலவண னேர்வையெனு நெல்லையே - நாலிரண்டாத்
தொக்கவிருந் தோடிரண்டார் தூமுகவொவ் வொன்றனினு
மிக்கவிருந் தோடிரண்டார் வீடு

இதன் பொருள்

கோலம் - அழகான

மனை - மனையாள் (மனைவி)

கொண்கனை - தன் கணவனை (பார்த்து)

முன்னிலையில் - அவனை முன்னிலைப்படுத்தி

நீலவண - நீலவண்ணனாகிய (திருமாலை)

நேர்வை - நீ ஒப்பாவாய்

எனும் - என்று (கூறும்)

நெல்லையே - திருநெல்வேலியே!

''அழகான மனைவி தன் கணவனை முன்னிலைப் படுத்தி 'நீ நீல வண்ணனாகிய திருமாலைப் போன்றிருக்கிறாய்' என்று கூறும் நெல்லையே!'' என்று முதலிரண்டடிகளில் திருநெல்வேலியை (நெல்லையை) பற்றிக் கூறுவது ஒன்று.

(அதற்கு) அக்கொண்கன் - அக்கணவன்

இல்லை - தன் இல்லாளை (மனைவியைப் பார்த்து)

முன் இலையில் - முதன் முதலாக இலையில் உணவு படைக்குமுன்

நீலவணம் நேர்வை - நீ உப்பை வைப்பாயாக

என்று கூறுகிறான். இது ஒன்று. இவ்விரண்டடிகளிலும் சிலேடை அமைந்துள்ளது.

இனிப் பின்னிரண்டு அடிகளைப் பார்ப்போம்.

....நாலிரண்டாத்
"தொக்கவிருந் தோடிரண்டார் தூமுகவொவ் வொன்றினும்
மிக்கவிருந் தோடிரண்டார் வீடு"

நாலிரண்டாத் தொக்க - எட்டாகத் தொகுத்த

இருந்தோள் திரண்டார் - பெருந்தோள்கள் திரண்டிருப்பவரும்

தூமுகம் ஒவ்வொன்றனினும் - (தூய்மையான) களங்கமற்ற ஒவ்வொரு முகத்திலும்

மிக்குஅவிரும் தோடு இரண்டார் - மிக்க ஒளிவீசும் இரண்டு தோடுகளை உடையவரான (சிவபெருமான்)

வீடு - எழுந்தருளி இருக்குமிடம் (நெல்லையே)

எட்டுப் பெருந்தோள்கள் திரண்டிருப்பவரும் களங்கமற்ற ஒவ்வொரு முகத்திலும் மிகுதியாக ஒளிவீசும் இரண்டு தோடுகளை உடையவரு மான சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம் நெல்லையே!

தேறுசைவ ருங்கணவர்த் தீர்ந்தோறும் வெண்ணிலவி
னீறுபுனைந் திடூஉ நெல்லையே! - மாற
னடிச்சுவடு வேய்ந்தா ரடியார் சிரமே
வடிச்சுவடு வேய்ந்தா ரகம்

இதன் பொருள்

வெண்ணிலவினீறு - வெண்மையான ஒளியை உடைய விபூதியை(திருநீறை)

புனைந்திடும் - அலங்கரித்துக் கொள்ளும் சைவரையும்

கணவர்த்தீர்ந்தோரும் - கணவனைப் பிரிந்திருக்கும் பெண்களையும்

வெண்ணிலவின் - வெள்ளிய சந்திரனது ஒளி

நீறுபுறைநந்திடும் - நீறி வருத்தும்

வெண்ணிலவின் ஒளிபோன்ற திருநீறைச் சைவர்கள் பூசிக் கொள்வர். கணவனைப் பிரிந்திருப்போர் வெண்ணிலவின் ஒளியால் *நீறுவர் (நைந்திடுவர்)* என்று சிலேடையாக முதல் இரண்டடிகள் அமைந்துள்ளன.

இதன் பின்னிரண்டடிகள்,

- *மாறனடிச்சுவடு* வேய்ந்தா ரடியார் சிரமே

வடிச்சுவடு வேய்ந்தா ரகம்.

மாறன் அடிச்சுவடு ஏய்ந்தார் - பாண்டியன் பிரம்பினால் அடிக்க அந்த அடித் தழும்பைத் தாங்கினார்; அடியார் சிரமேல் அடிச்சுவடு வேய்ந்தார் - அடியார் தலைமேல் தம் அடிச்சுவட்டை அணிந்தார் என்று திரிபு வகையால் கூறப்பட்டது.

"பாட்டைப் படிக்க வேண்டும். அதில் திரிபு இருக்கிறது என்று எடுத்துக்காட்டியவுடன் அப்படியா? என்று வியந்து மகிழவேண்டும். அப்படிச் சொற்கள் அமையும்படி பாடுவதுதான் நல்ல திரிபாகும்" என்று சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் கூறுவாராம். இந் நூலில் அமைந்துள்ள எல்லாப் பாடல்களிலும் புலவர்போற்றும் அத்தகைய சிறப்புகள் அமைந்துள்ளன.

நூல் தரும் செய்திகள்

நெல்லைத் திருக்கோயிலின் மூலவர்க்கு வேணுவனத்தர் (பா.48) என்றும் செந்நெல்லுக்கு வேலியிட்ட வித்தகன் (பா.47) என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. நெல்லையில் ஓடும் ஆற்றுக்குத் *தாமிரவருணி என்று பெயர்.* இவ்வாற்றுநீர் தாமிர (செம்பு) சத்துள்ள நீர் என்பதை "....பொருநைப் புனலு, நேர்செம்பியனண்ணு நெல்லையே..." (பா. 45, 1-2) என்ற செய்யுள் வாயிலாக எடுத்துக் காட்டுகிறார்கள். பொருநை என்பது இதன் இலக்கியப் பெயர். எப்போதும் நீர் வற்றாது ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றினை, 'நீடாக மங்கடக்கு நெல்லையே' (பா.17) என்று சிலேடையில் வைத்துப் பாடி யுள்ளார். நீர்த்தாகம் அங்கு அடக்கும் பொருநை என்பது ஒரு பொருள். இதனை "ஆகமம்போல் அழியாத் தன்மையுடையது" என்றும் சிறப்பிப்பார்.

காலம் காலமாகத் தமிழரிடையே நிலவி வரும் விருந்தோம்பற் பண்பை ஒரு பாடலில் எடுத்துக் காட்டுகிறார். "....விருந்தங் காவணச் சாருறலு நேர்ந்தழைக்கப் பெற்றிடூஉ நெல்லையே. " என்பது பாடல் வரிகள் (பா.96).

விருந்து அங்கு ஆவணச் சார் உறலும் நேர்ந்து அழைக்கப்படும் - விருந்தினர் அங்குத் தெருப்பக்கம் வருதலும் (விருந்து ஏற்போரால்) எதிர் கொண்டு அழைக்கப்படும் (நெல்லை) என்று உரையும் தந் துள்ளார். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் நெல்லை வாழ் மக்களின் விருந்தோம்பற் பண்பினை ஆசிரியர் இவ்வாறு வெளிப் படுத்தியுள்ளார்.

வெ.ப.சு அவர்கள் இயற்றிய நெல்லைச் சிலேடை வெண்பாவின் சிறப்பியல்புகளை இந்நூலில் அமைந்துள்ள நூறு வெண்பாக்களிலும் காண முடியும். ஆசிரியரின் சிலேடை பாடும் திறமை அவர்களுடைய தனிப்பாடல்களிலும் அமைந்துள்ளது.

பாராட்டுரைகள்

"அருண்மணங் கமழும் பொருளின் சுவையும்
மறைதரு சொற்சுவை அமைவும்
மருவுற விசைத்த சிலேடையின் வியப்பும்
வாய்த்தநற் கற்பனை வனப்பும்
தருபத மதுரங் கொழித்திடு பொலிவுஞ்
சார்திரி புயமகத் தகவுந்
தெருட்டரும் யாரும் புகழ்தர நெல்லைச்
சிலேடை வெண்பாத்தமிழ் செப்பி"

என்று கவிராஜ நெல்லையப்ப பிள்ளை பாராட்டி இருக்கின்றார்.

சீர்கொண்ட சொற்சுவை பொருட்சுவை சிலேடைச்
செழுஞ்சுவை முதிர்ச்சி செறியுந்
திரிபுயம கங்கற்ப னைச்சுவைகண் முதலிய
சிறப்புறூஉ நெல்லை வெண்பா
வேர்கொண்ட வெள்ளகால் வள்ளல்சுப் பிரமணிய
விறைவனாங் கவிஞ ரேறிங்கு

கியற்றினா னதுகண்டு புகழேந்தி யன்றியி
தியம்புவா ரில்லை யென்னப்
பேர்கொண்ட பாவக ருரைத்தசொன் முழுதும்
பிழைத்ததிஃ தென்ன பெற்றி
பேசுவீ ரென்பார்க்கு மேலோர் மொழிந்தசொற்
பிழைபடுத லில்லை யென்னும்
பார்கொண்ட விவனுமுயர் கல்வியாற் கேள்வியாற்
பரவுபுக ழேந்தி யான
பண்பினாற் பாடினா னென்றுரைப் பாமறிஞர்
பலருமொப் பும்ப டிக்கே

இவ்வாறு வெ.ப.சு. அவர்களைப் புகழேந்திப் புலவேராடு ஒப்பிட்டுப் பாராட்டியள்ளார் மு.ரா. அருணாசலக் கவிராயர். மேலும்,

''இத்தகைய சிறு பிரபந்தங்கள் பாடுபவரது கவித்திறமையை நன்றாகக் காட்ட வல்லன ஆங்கில விற்பன்னரான முதலியாரவர் களியற்றிய இந்நூல் மிகச் செவ்விதின் அமைந்து விளங்குதலைக் கண்டு வியக்கின்றோம். இவைகளையெல்லாம் விரிப்பதிலும் சுருங்கச் சொல்லுமிடத்து முதலியாரவர்களைச் சிறந்த தமிழ்க்கவி என்றே முடிக்கலாம்'' என்பது 'செந்தமிழ்' இதழாசிரியரின் பாராட்டுரையாகும்

திரிபும் சிலேடையும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால் சிறிது ஊன்றிநோக்கில் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன். மனத்து எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காண்டல் அரிதாம். நெல்லை என்னும் சொல்லை ஆசாக வைத்து நூறு சிலேடை கூறுதல் மிகக் கொண்டாடற் பாற்று. செய்யுள் இயற்றும் வன்மையுடையார் இதன் திறங்கண்டு பிரமிப்பது திண்ணம். இது மு.ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள் அளித்த பாராட்டுரை.

வெ.ப.சு. அவர்கள், ''பதினாறு வயசுப் பிராயமாய் இருக்கும் போதே தமிழிலுள்ள சிலேடை, திரிபு, யமகம் என்ற தமிழ்க் கற் பாறைகளை உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த வர்க்கத்துச் சித்திரக் கவிகள் எவ்வளவு வைரம் பாய்ந்திருந்தாலும் முதலியார் அவர்கள் கைக்கு வந்தால் தாமாகப் பிதிர்ந்து போய்விடும். தமிழ் பாஷை இடம் கொடுக்கக்கூடிய சிலேடை வின்னியாசங்களை எல்லாம் ஒருவாறு அளந்து விட்டார்கள். அதனால் நெல்லைச்

சிலேடை வெண்பாவை (நூறு செய்யுள்) எளிதில் செய்துவிட முடிந்தது. அது அந்தக் காலத்து (50 வருஷங்களுக்கு முந்திய காலத் துப்)புலவர்களுக்கும் கவிராயர்களுக்கும் பெரும் வியப்பாகவே இருந்தது. சிலேடை, யமகங்களிலுள்ள விசித்திரங்களை அனுபவித்துப் பழகியவர்களுக்குத்தான் "நெல்லைச் சிலேடை வெண்பாவின் திறம் தெரியவரும்" என்று ரசிகமணி டி.கே. சிதம் பரநாத முதலியார் அவர்கள் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

5. கோம்பி விருத்தம்

கோம்பி என்பது பச்சோந்தி. கோம்பியைப் பாடுபொருளாகக் கொண்டு விருத்தப்பாவால் இயற்றப்பட்ட காரணத்தால் இந்நூல் கோம்பி விருத்தம் எனப் பெயர் பெற்றது.

சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கத்தேவர் நரிவிருத்தம் என்ற ஒரு சிறு நூலை இயற்றியுள்ளார். அது நரியைப் பாடுபொருளாகக் கொண்டு ஆசிரியரின் கருதுதுக்களைக் கூறுவதால் நரிவிருத்தம் எனப் பெயர் பெற்றது. அதைப்போலத் தமது நூலுக்குப் பெயர் அமைத் துக் கொண்ட காரணத்தை வெ.ப.சு அவர்கள் நூலின் முகவுரையில் கூறியுள்ளார்கள்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

(குறள், 523)

என்ற வள்ளுவனாரின் கருத்துக்கு ஒரு விளக்கமாக இந்நூல் இயற்றப் பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் ஜே. மெர்ரிக் **(J.Merric)** எழுதிய 'தி.கேமிலியான்;' **(The Chameleon)** என்னும் பாடலின் 'சாரத்தை' மட்டும் கைக்கொண்டு அதனைப் பல வருணனைகள் உபகதைகள் முதலியவற்றால் மிகவிரிவாக எழுதியிருப்பதாக வெ.ப சு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நூலுக்கு அவர்களே உரையும் எழுதி யுள்ளார்கள்.

"பாட்டொரு பக்கம் உரையொரு பக்கம் என் இருந்தால் இரண்டை யும் ஒத்துப் பார்த்துப் பொருள் தெரிந்து கொள்வது சிறிது பிரயாச மாகவிருக்குமென்று அவ்வப் பாட்டின் கீழே அதனதன் உரையும் விளக்கமும் விசேஷக்குறிப்பும் சேர்க்கப் பட்டிருக்கின்றன இவ்

விசேஷக்குறிப்பில் அடங்காதனவும் உள. அவை விரிவஞ்சி விடுக் கப்பட்டன.'' என்ற தெளிவான விளக்கத்தையும் நூலாசிரியர் முகவு ரையில் கொடுத்துள்ளார்.

நூலின் இறுதியில் அநுபந்தம் I என்ற பகுதியில் 'கோம்பி விருத் தத்தின் இங்கிலீஷ் மூலம் தரப்பட்டுள்ளது.

ஐம்பத்தெட்டு வரிகளில் ஆங்கிலத்தில் அமைந்த அந்தப் பாடலை எழுபத்து நான்கு விருத்தப் பாடல்களில் அமைத்து ஆசிரியர் ஓர் அழகிய நூலாக விரிவாக இயற்றியுள்ளார்.

நூல்கூறும் செய்தி

பாலை நில வருணனையோடு முதல் பாடல் தொடங்குகிறது. கொடுமையான வெப்பம் மிகுந்த 'மத்தியான' நேரத்தில் இரண்டு வழிப்போக்கர்கள் பாலை வழியே நடந்து சென்றனர். இருவரும் தங்கிட நிழலைத் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு சோலையைக் கண்டனர் அங்குத் தென்னை முதலிய மரங்களும் செடிகொடிகளும் நிறைந்து நிழல் பரப்பின அதன் நடுவே கடல்போன்றதொரு தடா கத்தை இருவரும் கண்டனர். அதன் கரையில் இருந்த மிகப் பெரிய மரத்தடியில் அவர்கள் இளைப்பாறினர்.

தடாகத்தின் அழகை இருவரும் கண்டு களித்துக் கொண்டிருக்கும் போது ஒருவன் வானத்தின் நீல நிறத்தைப் பல பொருள்களோடு ஒப்புமை கூறிப் புகழ்ந்தான்; அது, தான் முந்தைய நாளில் கண்ட கோம்பியின் உடல் வண்ணத்தை ஒத்திருந்ததாகக் கூறினான்.

இன்னும்வா னிறத்தினை யேய்ப்ப யாவெனிற்
துன்னிமா மஞ்ஞையின் காமர் கண்டமும்
பின்னுமே யதன்பகை யென்னப் பெற்றுநான்
நென்னல்காண் கோம்பியின் நீல மேனியும்

(பா.39)

மற்றவன் அவனை மறுத்துக் கோம்பியின் நிறம் பச்சை என்றான் (பா 40) அத்துடன் அமையாது கோம்பியின் உடல் அமைப்பையும் விளக்கத் தொடங்கிவிட்டான் (பா.41-43) அதன் பச்சை நிறத்திற்குச் சமமான நிறத்தைக் கண்டவர்கள் பூமியில் எவருமில்லை என்றும் வலியுறுத்தினான். அடுத்தவன், அதனை ஏற்றுக் கொள்ளாததுடன் அவனுடன் வாய்ச் சண்டையையும் தொடங்கிவிட்டான். வாய்ச்

சண்டை கைச்சண்டையாக முற்றும் நிலையில் அங்குவந்த மூன்றாவது வழிப்போக்கன் நடந்ததை அறிந்தான். இருவருக்கும் பொதுவாகத் தனது கருத்தை அவன் சொல்லத் தொடங்கினான்.

இத்தகைய ஒன்றை நேற்று இரவு விளக்கு வெளிச்சத்தில், தான் பார்த்ததாகவும் அதன் நிறம் கறுப்பு என்றும் கூறிவிட்டு அதைத்தான் வைத்திருப்பதாகவும் வெளியே எடுத்துக்காட்டுவதாகவும் சொல்லி வெளியே எடுத்தான். ஆனால், அது வெள்ளை நிறமாக இருந்தது. நிலைமையைப் புரிந்து கொண்டு மூவரும் அவரவர் குற்றத்தை அறிந்து கொண்டனர்.

ஒரு பொருளுக்குப் பல பக்கங்கள் உண்டு; அன்றியும் அது காலபேதம், தேசபேதம் முதலிய பேதங்களினால் மாறுதல் அடையும் இந்த உண்மையை அறியாதவர்களே தாங்கள் கண்டது மாத்திரம் சரியென்று சாதிப்பார்கள் என்ற (பா.73இன் உரை) நீதிக் கருத்துடன் ஆசிரியர் கதையை நிறைவு செய்கிறார்.

இலக்கியத் தன்மை

வெ.ப.சு. அவர்கள் தமிழிலக்கியங்களில் ஆழ்ந்தகன்ற புலமை மிகப் பெற்றிருந்ததால் இந்நூலில் வருணனை, உவமை, மேற்கோள் முதலியவற்றை மிகச் சிறந்த முறையில் அமைத்திருக்கிறார்கள்.

உவமை

குளிர் காலத்திலும் வெப்பம் செய்யும் சோலையை முதல் எட்டுப் பாடல்களில் வருணிக்கிறார். கோம்பி என்னும் ஒரு விலங்கினைத்தைப் பற்றிக் கூறும் கதையில் நண்பகல் வெப்பத்திற்கு உவமை சொல்லும் போது,

கொடிய தேளிடத்து வெங்கொடுக்கும் பாம்பின்கண்
விடமுறூஉம் பல்லுநேர் வெம்பகற் கண்ணே

(பா. 8)

பாம்பையும், தேளையும் உவமை கூறியிருப்பது புதுமை.

புராண இதிகாசச் செய்திகள்

நூலாசிரியர் புராண இதிகாசச்செய்திகள் சிலவற்றையும் உவமையாக்கியுள்ளார். இந்நூலின் பாடுபொருளான கோம்பி பற்றிய விளக்

கங்களும் நூலில் இடம் பெற்றுள்ளன. கோம்பிக்குப் பச்சோந்தி என்ற பெயரும் உண்டு. அதற்குப் பல நிறங்களுண்டு. இந்நூலுக்குப் 'பச்சோந்தி விருத்தம்' என்று பெயரிடாமல் கோம்பி விருத்தம் என்ற பொதுப் பெயரைத் தாம் அமைத்துக் கொண்டதற்கான காரணத்தை ஆசிரியர் கூறுகின்றார்.

விலங்கியல் நூற்கருத்துகள்

ஆசிரியர் விலங்கியல் துறை சார்ந்த கல்வியிற் சிறந்தவராகையால் "பச்சோந்தியைப் பற்றி இங்கே கூறப்பட்டவைகள் பொதுமக்கள் கொள்கைகள். இவற்றுக்கும் பிராணி வருக்க நூலில் (Zoology) கூறப்பட்ட உண்மைகளுக்கும் சில வேற்றுமைகள் உண்டு " என்று விரிவாக விளக்கம் தந்துள்ளார் (பக். 33-34)

ஆங்கிலக் கவிஞர் காட்டும் கோம்பி

ஆங்கிலப் பாடலின் ஆசிரியர் ஜே.மெரிக் தொடக்கத்திலேயே இரண்டு வழிப்போக்கரைக் காட்டிவிடுகிறார். தொடர்ந்து 'கேமிலியானை'ப் பற்றி அவரவர் கண்ட கருத்தைக் கூறியவாறே சண்டையிடத் தொடங்கியவுடனேயே ' when luckily came by a third' (31) என்று சொல்லிவிட்டு மூன்றாவது வழிப்போக்கன் தன் கருத்தைச் சொல்லித் தான் வைத்திருந்த கேமிலியானை எடுத்து வெளியேவிட அது வெண்ணிறமாக இருந்தது.

உடனே கேமிலியான் பேசத்தொடங்கிற்று. அதன் பேச்சைக் கவிஞர் மெர்ரிக்,

My children! the Chameleon cries
(Then first the creature found a tongue)
"You all are right; and all are wrong;
When next you talk of what you view,
Think others see as well as you;
Nor wonder if you find that none
Prefers your eye-sight to his own"

(ll.52-58)

என்று பாடியுள்ளார் இப்பகுதியை வெ.ப.சு. அவர்கள்

யாவரும் வழுவிலம் யாவ ரும்வழு
மேவின மினிக்கண்ட விளம்பு வேமெனில்
ஏவரு நம்மைப்போற் பார்ப்ப ரென்பதை
ஓவர நெஞ்சினு ளூறுத்தல் வேண்டுமால்'

(பா. 65)

நம்முடைக் கண்ணினு நம்பத் தக்கன
தம்முடைக் கண்ணென பிறர்க டாமுறல்
இம்மியத் தனைவியப் பிலைநங் கண்ணினு
மெய்ம்மையிற் பிறர்கணை நம்புவேங் கொலோ

(பா. 66)

என்றும் பாடியிருப்பது ஆங்கிலப் பாடலின் கருத்துகளோடு இணைந்து செல்வதாக அமைந்துள்ளது.

திருக்குறட் கருத்து

கோம்பியின் காரணமாக வழிப்போக்கர் மூவரும் சண்டையிட்டுப் பின் நல்லதொரு முடிவுக்கு வந்ததை ஆசிரியர்,

எப்பொரு ளெவரெவ ரிடத்துக் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொரு ளறிதன் மெய்யறி
விப்புவி தனிலென வெண்ணி டாதியாம்
தப்புறு கலாஞ்செய்து தாழ்வை யுற்றனம்

(பா. 53)

என்று இப்பாடல் வாயிலாகத் தெரிவிக்கின்றார். ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற திருவள்ளுவர் குறளை எண்ணிப் பாராததனால் துன்புமிகுந்த இக்கலகத்தை நாம் செய்யும்படி நேர்ந்தது'' என்று அம்மூவருமே சொன்னதாக உரைகூறும் வெ. ப.சு. அவர்களின் தமிழ்ப்பற்றை நம்மால் உணரமுடிகின்றது. செய்யுளில் குறள் கருத்து இடம் பெற்றுள்ளதேயன்றித் திருவள்ளுவர் கூறியதாக இல்லை. ஆனால் வழிப்போக்கர் மூவரும் 'திருவள்ளுவர் வாக்கியத்தை எண்ணிப் பாராததனால் தாம் மூவரும் துன்புற்றதாகத் தமக்குள் பேசுவதாக உரை கூறுகிறது திருவள்ளுவர் பெயரைத் துலங்க வைத்திருப்பது ஆசிரியரின் தமிழ்ப் பற்றினைப் புலப்படுத்துகிறது.

தாம் இயற்றிய இலக்கியம் பெரிதாயினும் சிறிதாயினும் எங்கெல்லாம் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ப் புலவர்களையும் சிறப்பிக்க முடியுமோ அங்கெல்லாம் வெ.ப.சு. அவர்கள் சிறப்பிப்பார். ஏனெனில் அவர் ஆங்கிலமும் தமிழும் கசடறக் கற்றறிந்த 'தமிழ்ப் பெருங்கவி'

ஆசிரியரின் அறிவியல் நூற் பயிற்சி

வெ.ப.சு. அவர்களின் இலக்கியங்கள் பலவற்றிலும் அவரது அறிவியல் நூற்பயிற்சியும் அனுபவமும் வெளிப்படுவதைக் காண முடிகின்றது.

'கொடிய பாலை வழியாகச் சென்ற இரண்டு வழிப்போக்கர்களும் ஒரு சோலையை அடைகின்றனர். அச்சோலையை வருணித்துக் கொண்டுவரும் ஆசிரியர் அங்கு ஓங்கி வளர்ந்துள்ள மரங்களைப் பற்றிச் சொல்லும்போது உயர்வு நவிற்சியாக வானத்துக் கற்பகத் தருக்கள் இங்குள்ள மரங்களுக்கு ஒப்பாகா என்று கூறுகிறார் (பா.19)

பாடலின் பொருளைக் கூறியபின் தொடர்புடைய வேறு செய்திகளையும் எடுத்துச் சொல்கிறார்.

தென்னையே யன்றித் தாகம் தீர்க்க உதவும் வேறு மரங்களும் உண்டு. **விசிறி வாழை** என்ற ஒருவகை வாழை, மட்டையில் நீரைச் சேகரித்து வைத்து பிரயாணிகளுக்கு உதவுகின்றது. அதனால் அதற்குப் '**பிரயாணி மரம்**' (Water Tree or Traveller's Tree) என்றும் பெயர் உண்டு. டெமராராப் பசுமரம்[1] (Cow Tree of Demerara) **தென்னமெரிக்கப் பசுமரம்**[2] என்னும் இருவகை மரங்கள் பசுவின் பால் போலப் போஷகமான பாலைத் தருபவை என்பன போன்ற செய்திகளையும் தருகின்றார்.

கோம்பி பற்றிய செய்திகள்

கோம்பியைப் பற்றியும் சில செய்திகளைக் கூறியிருக்கிறார்.

'பச்சோந்தி இனத்தில் பலவகை உண்டு. இந்தச் செந்து சாதாரண ஓணானின் சாதியைச் சேர்ந்தது. இது சில சமயங்களில் தூங்குவது போலத் தோன்றும். அப்படித் தோன்றும் போது திடீரெனத் தனது மிக நீண்ட நாக்கை நீட்டி ஈ முதலிய சிறுசெந்துகளைப் பற்றி

இறையாக உட்கொள்ளும் நாக்கு விசையாக வெளியே நீட்டப் படுதலும் உள்ளேயிழுக்கப்படுதலும் ஒரு குழலுக்குள் அடைக்கப்பட் டுள்ள திருகுவில் (Spiral spring) வெளிக் குதிக்க விடப்படுதலும் உள்ளே இழுத்துக் கொள்ளப்படுதலும் போலும். நாக்கின் நீளம் வால் தவிர்த்த உடல் நீள அளவிருக்கும். வால், வயிற்றுப் புறம் நோக்கி வளைந்து சுருள்வதாய் மரக் கொம்புகளைச் சுற்றிப் பற்றுதற்கேற்றது கால்கள் ஒவ்வொன்றும் ஐந்து விரல்களை உடையவை. அவைகளும் கொம்புகளைப் பற்றுதற்கு நன்கு உதவுபவை முன்னங்கால் விரல் களில் இரண்டு வெளிப்புறமும் மூன்று உட்புறமும் உள்ளன. இதற்கு நேர்மாறாகப் பின்னங்கால்களில் மூன்று விரல்கள் வெளியேயும் இரண்டு விரல்கள் உள்ளேயும் இருக்கின்றன. வெளிப்பக்கத்து விரல் களும் உள்பக்கத்து விரல்களும் எதிரெதிராக மடங்கி மரக்கொம்பைப் பற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளன

பச்சோந்தி இருபத்து நான்கு மணி நேரத்தில் ஆறுவகை நிறங்கள் தோற்றுவிப்பதைக் காணலாம். நிற மாற்றத்துக்கு அகத்தே நிகழும் கோபம், பயம் முதலியனவும் புறத்தே நிகழும் இரவு, பகல், முதலி யனவும், காரணமாம். நிறம் இரவில் வெளிரின மஞ்சள் வருணமா யும் (Cream Coloured) பகலில் ஒருவகைப் பச்சை (Grey Green) வருணமாயும் இருக்கும் பகல் நிறத்திலும் இரா நிறத்திலும் இரண்டி லும் இடையிடையே வெவ்வேறு துண்டு துண்டான பல கலப்பு வருணங்களும் காணப்படும்.

இந்தப் பிராணி நிறமாற்றமேயன்றி உடல் மாற்றமும் செய்ய வல்லது. சில சமயங்களில் உடலை உப்பிப் பெரிதாகவும் ஒடுக்கிச் சிறியதாகவும் காட்டும். பாம்பு, கீறி இரைதல் போல் இரைந்து கோபமாக இரு பக்கமும் மாறிமாறிச் சாய்ந்தசைதலும் செய்யும்

இங்கு இடம்பெற்றுள்ள செய்திகள் வெ.ப.சு அவர்களின் தாவரவியல் (Botony) விலங்கியல் (Zoology) ஆகிய அறிவியல் நூற்பயிற்சியையும் நடைமுறை அனுபவங்களையும் எடுத்துக்காட்டு வனவாய் அமைந்துள்ளன. பொது அறிவுக்குப் பயன்படும் இவற்றைத் தாம் எடுத்துக் கொண்டு கதையுடன் தொடர்புடைய தாக அமைத்திருப்பது ஆசிரியரின் திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

பாராட்டுரைகள்

எண்ணற்ற பழந்தமிழ் நூல்களை அச்சு வாகனம் ஏற்றிய ராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை இந்நூலின் சிறப்பு குறித்து, 'கோம்பி விருத்தம்' மெய்யாகவே என் மனத்துக்கு விருந்தாகியது. கோம்பி விருத்தத்தின் நடை மனோகரமானது அதன் உரை அதனை வாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அனுபவிக்கும்படி உதவுகின்றது'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

''தேன்பிலிற்றும் தெய்வச் செந்தமிழால் பாரோர்க்கும் கோம்பி விருத்தம் பாடித் தீம்புகழ் பெற்றவர் வெ.ப.சு. முதலியார் அவர்கள்'' என்பது திண்டிவனம் M.S. சுந்தரரேச ஐயரின் பாராட்டுரையாகும்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சேத்தூர் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள், ''கோம்பி விருத்தமானது காஞ்சிப்புராணம் முதலாய நூல்களைப் போல சொன்னயமும் பொருணயமும் அணி நயமும் விளக்கி நவின்றோர்க்கினிமை முதலாய அழகுடையதாய் அதிசயத்தைத் தருகின்றது'' என்று பாராட்டுகின்றார்.

மேலும் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகளும் 'யாவர்க்கும் மிக வியப்பைத் தரத்தக்கதென்று' திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

''இதில் அமைந்துள்ள சொல் நயமும், பொருள் நயமும் மிகப்பாராட்டற்பாலன. இதைப் படிக்கும் பொழுது இடையிலே வைத்துவிட்டு வெறொன்றைச் செய்தற்கு எனக்கு மனம் வரவில்லை. . இந்நூல் வித்தியாசாலையில் படிக்கும் மாணாக்கர் களுக்கு மிகப் பயன்றருமென்று நம்புகிறேன்'' - என்பது டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்களின் பாராட்டுரை.

மேலும், செந்தமிழ், உதயதாரகை, (The Morning Star), இந்துசாதனம், விவேகசிந்தாமணி, ஆரிய ஜனப்பிரியன் ஆகிய இதழ்களும் பாராட்டியுள்ளன.

6. சருவ சன செபம்

வெ.ப.சு அவர்கள் இயற்றிய நூல்களில் இது உருவத்தில் சிறிதாயினும் உள்ளடக்கத்தில் உயர்ந்தது எனலாம். சம்பத்துராஜ் ஜெயின் (Champat Raj Jain) என்ற சமணப் பெரியார் இயற்றிய 'எதிரிடைகள் இசைவுறுதல்' (confluences of opposites) என்ற

நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றியது என ஆசிரியர் இந்நூலைப் பற்றிக் கூறுகிறார்.

137 வரிகளைக் கொண்ட இந்நூல் 1934ஆம் ஆண்டு முதற் பதிப்பாக வெளிவந்தது. ஆயிரம் பிரதிகள் விற்பனையாயின. அடுத்து 1939ஆம் ஆண்டு வெளியான இந்நூலின் இரண்டாம் பதிப்பு ஆறாயிரம் பிரதிகள் விற்பனையாயின. இந்நூற் கருத்து களுக்கு மக்களிடையே இருந்த வரவேற்பையே இது காட்டுகிறது. இன மொழி, நாடு மதங்களைக் கடந்து மனித இனத்தவர்க்கு ஏற்ற நல்ல கருத்தக்களைக் கூறுவது இந்நூலின் சிறப்பாகும்.

இதனை,

எவ்வெந் நாட்டினர் எவ்வெவ் வினத்தினர்
எவ்வெவ் மதத்தினர் எனினும் ஆண்பெண்ணெனும்
இருபாலினர்க்கும் ஏற்ற பிரார்த்தனை

என்று ஆசிரியர் தமது முகவுரையில் கூறியுள்ளார்.

இது முதலியார் அவர்களுக்கு ஏற்புடைய கருத்து. இதை அவரியற்றிய அகலிகை வெண்பா-கடவுள் வாழ்த்துப் பாடல் புலப்படுத்தும்.

"ஏத்திமத மெல்லாம் எதையறிந்தேம் என்னும்? எதைச்
சாத்திரங்கள் காய்ந்து சலிக்கும்? எதை - நாத்திகமோர்
சற்றுமே ஓர்ந்திலதாச் சாதித்திடும்? அதையே
பற்றுவாய் நெஞ்சே! பரிந்து."

என்றார்.

தனக்கும் பிறர்க்கும் அறிவுரை கூறுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

நல்லோர் இணக்கமே நான்இணங் கிடுக
நல்லோர் நினைவே நான்நினைத்திடுக
நல்லோர் உரையே நான்உரைத் திடுக
நல்லோர் நடையேநான் நடந்திடுக

(வரி 17-21)

என்று தாம் அறவழி செல்வதற்குப் பிரார்த்திக்கிறார்.

நீதிபதிகள் நெறியில் நின்று
பேதமின்றி நீதிசெய்க
பற்பல மக்கட் பகுதியும் பகையற்
றொற்றுமை யுற்று நண்புடையவராய் வாழ்க.

(வரி 114-117)

என்னும் இப்பாடல் மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது. மேலும்,

பஞ்சமும் நோய்களும் பாரைவிட் டகல்க
வேண்டிய பொழுதினில் வேண்டிய அளவினில்
மிகாஅது குறையாது விண்மழை பொழிக

(வரி 80-82)

என உலக நன்மைக்காக செபம் செய்வதாகவும் செய்யுள் தொடர்கிறது.

புத்தர் கூறியுள்ள பொருள்போதி பொன்னுரையைத் தழுவி ஆசிரியர் சில கருத்துக்களை அமைத்துள்ளார்.

பகையைப் பகையால் பாற்ற முயலல்
அழலை அழலால் அவித்தல் போலும்
தழலை நீரால் அழித்தல் போல
அன்பாற் பகையை ஆற்றலே ஏற்றதாம்

(பாற்றல் - நீக்குதல்; அழித்தல்) புத்தரின் இப்பொன்மொழிகளை

வைதவர் தம்மையும் வாழ்த்துவே னாக
வெறுத்தவர் எவரையும் விரும்புவே னாக
ஒறுத்தவ ருக்கும் உதவுவே னாக
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே னாகுக

(வரி 44-47)

என்று இச்சிறு நூலில் அமைந்துள்ள 137 வரிகளிலும் இவ்வாறே ஆசிரியர் சொல்லிச் செல்கிறார். இதனைப் படிப்பவர் பிறர் உதவி யின்றித் தாமே புரிந்து கொள்ளும் வகையில் பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன.

பாராட்டுரைகள்

"எளிய நடையில் எவ்வளவு உயர் கொள்கைகள்! சிறிய அறை யொன்றில் அநந்தமான ஐசுவரியத்தைப் பார்ப்பது போல் இருக்கிறது." என்று பி.ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் இந்நூலை வியந்து பாராட்டியுள்ளார்கள். மேலும்,

"The sentiments expressed are so ennobling and the verse flows with such inspiring cadence that I am simply delighted with the piece. It already bears that stamp of perfection which cannot be improved." என்ற பாராட்டுரையைக் காலஞ்சென்ற அமைச்சர் சர்.டி.என். சிவஞானம்பிள்ளை அவர்கள் வழங்கி யுள்ளார்கள்.

7. தனிக்கவித் திரட்டு

வெ.ப.சு. அவர்கள் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பாட்டுக்களைத் தொகுத்துத் 'தனிக்கவித் திரட்டு' என ஒரு தனி நூலாக 1939 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்கள்.

கவிஞர்களின் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதையாக வடிவெடுக்கிறது என்பான் மேனாட்டுக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த்.*

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந் துரைப்பது கவிதை!

என்றார்.

வெ.ப.சு. அவர்களின் ஒவ்வொரு தனிப் பாடலிலும் அந்த நிலையைக் காணலாம். தனிக்கவித் திரட்டில் உள்ள 343 பாடல்களைக் கடவுள் வாழ்த்து, குருவணக்கப் பாடல்கள், அறிவுரைகள், அகப் பொருள் துறைக் கவிகள், பல சந்தர்ப்பங்களில் பாடியவை, நிருப கவிகள், சிறப்புப் பாயிரங்கள், தற்சிறப்புப் பாயிரங்கள் என்ற தலைப்பு களில் ஆசிரியர் வகைப்படுத்திக் கொண்டுள்ளார்

* Poery is the spotaneous overflow of powerfull feelings (- Words worth - Eyrical Ballads, Preface)

நூலின் இறுதியில் அமைந்த அனுபந்தம் என்னும் தலைப்பின்கீழ் திருவள்ளுவர் திருநாமங்கள், சமசைகள், தமிழ்மொழி வாழ்த்து, எருதின் இலக்கணம் ஆகிய தலைப்புகள் இடம் பெற்றுள்ளன.

இந்நூலுக்கு முதுபெரும் பெரும் புலவர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் முகவுரை எழுதியுள்ளார். அவர், ‘கவித்துவம் என்பது எல்லோர்க்கும் எளிதாக அமைவதன்று. சிறந்த கல்வியாளர்கள் பால் கவித்துவம் அமையாமல் இருத்தலையும் கல்வி நயம் சிறிதுடையார் மாட்டு அஃது அமைந்திருத்தலையும் நம் அனுபவத்திற் காண்கின் றோம். சிறந்த கல்வியும் கவிபாடும் வன்மையும் ஒருங்கு அமையப் பெற்றார் மிகச் சிலரே அவர்களுள் முதலியாரவர்களும் ஒருவராவார். மேனாட்டுக் கலைச் செல்வம் நிரம்பப் பெற்று மொழியிற் சிறந்த கலைப்பயிற்சியும் கவித்துவ ஆற்றலும் ஒருங்கமையப்பெற்ற திருவுடையாரைக் காண்டல் மிகவும் அருமை. இவ்வரும்பொருளாக இக்காலத்து விளங்குபவர்கள் திரு. முதலியாரவர்களேயாவார்.

''தமிழிலுள்ள சில பிரபந்தங்கள் முதல் பெரிய நூல்கள் வரையிலுள்ள எல்லா நூல்களிலும் இவர்களுக்குப் பயிற்சி உண்மையை இத்தொகை நூல் புலப்படுத்துவதாகும்'' என்று வெ.ப.சு அவர்களையும் அவர்களின் இந்நூலையும் பாராட்டியுள்ளார்.

இதில் அமைந்த பாடல்கள் ஏதேனும் ஒரு வகையில் சிறப்புடை யனவாக இருக்கின்றன. கவிகளின் அருமை பெருமைகளை யெல்லாம் சொல்லப் புகுந்தால் அதுவே ஒரு தனி நூலாகவிடும். விரிவஞ்சி ஒரு சிலவற்றின் சிறப்புகளை மட்டும் காண்போம்.

மதுரைச் சொக்கநாதர் ஒரு துறைக் கோவை பாடிய புலவரை வெ.ப.சு. அவர்கள் சிறப்புப் பாயிரத்தில்,

பெருகு மொன்பான் சுவைவளமும் பெருங்கற் பனைகள்
பலவணிகள்
மருவு வனமும் திரிபுவன மகிழுந் திரபு வனமுமுற
அருமை யருமை யெனக் கவிஞ ரதிச யிக்கக் கவிமழைபெய்
பருவ முகிலாங் குமரகுரு பரசுவாமி வழித்தோன்றல்;

(பா. 299)

எனப் பாராட்டியுள்ளார்கள். இதில் அமைந்த சிறப்புகள் யாவும் வெ.ப.சு. அவர்களுக்கும் பொருந்தும். சான்றாக இத்திரட்டி’லுள்ள பாட்டொன்றைப் பார்ப்போம்.

அகப்பொருள் அமைந்த கவிதை

தம்முடைய நெருங்கிய நண்பரான ஊற்றுமலை ஜமீந்தார் இருதாலய மருதப்பத்தேவர் மீது அகப்பொருள் அமையக் கவிஞர் இயற்றிய பாடங்களில் ஒன்று

கைக்கிளையா லவர்மேன்மங் கைக்கிளையா
ளென்னுமொரு காரி கைசேக்
கைக்கிளையா வனவுந்தொ கைக்கிளையா
வையும் பிரிந்துங் களித்து வாழ்
கைக்கிளையாள் நின்பணிசெய் கைக்கிளையாள்
கவலைமுளை தன்ன யுன்செங்
கைக்கிளையா வாளைகமு கைக்கிளையாத் தாம்வீரை
காக்குங் கோவே.

(ப. 116)

செவிலி கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது.

பதப் பிரிவு

கைக்கிளையால் அவர்மேல் மங்கைக்கு இளையாள்
என்னும் ஒரு காரிகை
சேக்கை கிளையாவனவும் தொகைக் கிளை
யாவையும் பிரிந்து
களித்துவாழ் தன்கைக் கி(ள்)ளையாள்;
நின்பணி செய்கைக்கு இளையாள்
கவலைமுளை தன்னைஉன் செங்கை(யால்)
கிள்; ஐயா
வாளை கமுகைக் கிளையா தா(வு)ம்
வீரைகாக்கும் கோவே!

அடி: 1. கைக்கிளை - ஒருதலைக்காமம்
2. சேக்கை - பறவைக்கூடு
கிளையாவனவும் - கிளைகள் எல்லாம்
தொகைக்கிளை- கூட்டமான கிளிகள்
மற்றைய கிளிகள்; கி(ள்)ளை;
3. தன்கைக் கி(ள்)ளையாள்- தான் வளர்க்கும் கிளியைக் கையில் உடையாள்.

பணிசெய்கைக்கு இளையாள்- பணிசெய்தற்குச் சலிக்கமாட்டாள்

4. கவலை முளை - (அவள் உன்னை மணாளனாக அடையாததால் ஏற்பட்ட) கவலை என்னும் முளையை
உன் செங்கையால் - உனது சிவந்த கையினால்
கிள் - கிள்ளி எறிந்து விடு
ஐயா - ஐயா

5. வாளை......கோவே - வாளைமீன்கள் மகிழ்ச்சியினால் கமுக மரங்களைக் கிளைத்துக் கொண்டும் துள்ளித் தாவும் தடாகங்களையுடைய வீரை நகரைக் காக்கும் அரசே!

தலைவி செந்தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகளுக்கு இளையவள்; அவள் ஒப்புயர்வற்றவள். மரத்தில் பறவைக் கூடு களுள்ள கிளைகள் பலவற்றையும் தமது சுற்றமான மற்றக் கிளிகள் பலவற்றையும் பிரிந்திருந்தாலும் மகிழ்ந்து வாழ்கின்ற அக்கிளியை அவள் தன்கையிலே உடையவள். உனது ஏவலை நிறை வேற்றுவ தற்கு அவள் இளைக்க மாட்டாள். அவள் உன்னைக் கணவனாக அடையாத நிலையில் அவளுக்கு ஏற்பட்ட கவலையானது வளர்ந்து பெரிய மரமாகி விடாமல் அக்கவலையை முளையிலேயே உனது சிவந்த கைவிரல்களினால் கிள்ளி எறிந்து விடு.

ஐயா! வாளை மீன்கள் கமுக மரங்களை மகிழ்ச்சியுடன் கிளைத்துக் கொண்டு துள்ளித் தாவும் தடாகங்களைக் கொண்ட வீரை நகரைக் காக்கின்ற அரசே! (வீரை-வீரகேரளம்புதூர்)

வீரைநகரை ஆளும் அரசே! திருமகளுக்கு இளையவளான தலைவி கிளியைக் கையில் ஏந்தியுள்ளாள். உனக்குப் பணிசெய்ய எந்நாளும் அவள் இளைக்க மாட்டாள். எனவே அவளது கவலையை முளையிலேயே கிள்ளி எறிந்து விடு.

தலைவி பிரிவுத் துயரால் பெரிதும் துன்புற்றாள். அவளது அழகிய செங்கையில் கிளியினை ஏந்தியுள்ளாள். தான் வாழும் கூட் டையும் தன்னோடொத்த கிளிகளையும் மறந்து அக்கிளியானது தலை வியின் கையில் இருப்பதையே விரும்பியிருக்கிறது. தலைவியின் அன்பே அதற்குக் காரணம். அக்கிளி கவலையற்று மகிழ்ந்திருக்கத் தலைவி அதை அன்புடன் பேணுகிறாள். கிளிக்கே இவ்வளவு ஆத ரவும் அன்பும் காட்டுபவள் உன்னைக் கணவனாக அடைந்தால்

உனக்கு வேண்டிய பணிகளையெல்லாம் நிறைவேற்றுவாள். உன்னை எண்ணி எண்ணித் துன்புறும் கவலை அவளது உள்ளத்தில் விதை யாக அமைந்துள்ளது. அது முளையாகி மரமாகி வளர்ந்து விடும் முன்பே அத்துன்பமாகிய விதையைக் கிள்ளி எறிந்து விடுவாயாக அரசே! என்பது இப்பாடல் தரும் விளக்கமாகும் சிலேடை, மடக்கு ஆகிய அணிகள் அமையப் பாடுவதில் அவர்கள் மிக்க வல்லவர். வெ.ப சு. அவர்களைப் போன்றோரே இத்தகைய பாடல்களை இயற்ற முடியும்.

இது அடிதோறும் முதற்சீரும் மூன்றாம் சீரும் மடக்காக வந்தயமகச் செய்யுள்.

அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிந்த வள்ளல்களும் சிற்றரசர் களும் இத்தகைய சொல் விளையாட்டுகளைக் கேட்டு மகிழ்வர்; புலவர்கள் பாடிமகிழ்வர்.

இந்த நூலை டாக்டர் உ.வே.சாமிநாத ஐயருக்கு ஆசிரியர் உரிமை யாக்கியுள்ளார். அவர் வெ.ப சு அவர்களின் புலமையை நன் கறிந்தவர். இருவரும் சிறந்த நண்பர்கள் ஐயர் அவர்களுக்கு 'மகா மகோபாத்தியாயர், என்னும் பட்டம் வழங்கப்பட்டபோது ஆசிரியர் பாடிய செய்யுளில்

பலர்புகழ் மகாமகோ பாத்யாயப் பட்டம்
இலகுயர்வு நிற்கீந்த தென்பர் - சிலரே
மிகுசான்றோர் அஃதுன்னை மேயுயர்ந்த தென்பர்
தகுசாமி நாதநீ தா

(பா.138)

உன்னையறி யாத்தமிழ ருண்டோவப் பட்டப்பேர்
தன்னையறி யாதவரோ சங்கையிலா-என்னிலையம்
என்னையது நின்னையெய்தி யேய்ந்த துயர்வெனபதற்குத்
தன்னிகரில் சாமிநா தா.

(ப. 139)

என்று அவரைப்பாராட்டியுள்ளார்.

இரங்கற்பாக்கள்

ஆசிரியரின் தனிப்பாடல்களில் இரங்கற் பாக்களும் இடம் பெற்றுள்ளன. இருவருடைய நெருங்கிய நண்பர்களுள் ஒருவரான

திருநெல்வேலி கவிராச நெல்லையப்ப பிள்ளை அவரது எழுபத்து நான்காம் வயதில் காலமானார். அவரைப் பற்றிக் கையறுநிலையில் நெஞ்சுருகிப் பாடிய பாடல்கள் இரண்டனை இங்குக் காண்போம்

கண்டவுடன் களிகூர் கண்ணும் வருகவென்று
விண்டு மலர்வாயும் மெய்யன்பால்-அண்டையில்என்
கையைப் பிடித்திருத்துங் கையும் மற்றை மெய்யுமினி
வையத்துக் காண்குவ தெவ்வாறு

(பா.236)

ஓரரைநூ றாண்டுன் னொடுபழகி யின்புற்றேன்
ஈரரைநூ றாண்டிருப்பா யென்றிருந்தேன்-பாரில் ஒரு
முக்கால் நூறாண்டும் முடியுமுனம் விண்ணுற்றாய்
எக்கால்யா னின்முகங்காண் பேன்

(பா.238)

இப்பாடல்கள் கவிஞரின் உள்ளத்து உணர்ச்சிகளை நன்கு வெளிப்படுத்தியுள்ளன.

அறிவுரைக் கவிதைகள்

ஆசிரியர் சில அறிவுரைகளை மிக எளிய நடையில் எடுத்துக் காட்டியுள்ளார் முயற்சியின் உயர்ச்சியைக் கூற வந்தவர்.

சிறிதும் விடாத முயற்சிநற் காரிய
சித்தி யளித்திடும்; மெல்லெனப்பா
யுறுபுனல் கல்லைக் குழித்திடும் சிற்றெறும்
பூர்தலால் பாறைதேய் வுற்றிடுமே

(பா.42)

என்றும்,

சோம்பல் எதையும் செயற்கரி தாக்கும்
சுறுசுறுப் பெஃதையும் செய்யஎளி
தாம்படி செய்திடும்; ஆதலாற் சோம்பல்
அகற்றி முயற்சி அடைவீரே

(பா.44)

என்றும்,

முயற்சியின் உணர்ச்சியை இவ்வாறு சொல்லிவிட்டு இன்னும்,

தேகமே தம்மன்றிச் சீவமே தமில்லை:
சென்மத்தா லுண்மைச் சிறப்பெவர்க்கும்
ஆகுவதில்லை அறிவோ டொழுக்கம் சேர்ந்
தாலன்றி யாகிடா தச்சிறப்பே

(பா.48)

என்று, அறிவும் ஒழுக்கமுமே சிறப்பளிக்கும் என்கிறார்.

"பிறப்பொக்கும் எவ்வா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"

(குறள் 972)

எனும் வள்ளுவனாரின் கருத்தைத் தழுவி இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஊழைவிட உழைப்பே சிறந்தது என்று கூறவந்த போது,

புலத்தை யுழுது விதைத்த லுழவன்
பொறுப்பாம்; அஃது புரியானேல்
நலத்த மழைகுறை வின்றிப் பெய்திட்டாலும்
நற்பலன் பெற்றிடான் ஞாலத்திலே

(பா.50)

ஆதலா லூழின் படியெலா மாமென்
றமராமல், நாம்செய் அனைத்தினையும்
காதலா லேற்றகா லத்தினிற் செய்தல்
கடமையா மிந்தப் புடவியிலே

(பா. 51)

என்கின்கிறார்.

ஆசிரியரின் இயல்பான வேளாண்துறை அனுபவம் இச்செய்யுளில் வெளிப்படுகிறது.

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்ற குமரகுருபரரின்' பொன்மொழியின் கருத்தமைந்த பாடல் ஒன்று,

திருப்திய தில்லாத செல்வர் வறியர்
திருப்தி மருவிய சித்தமுள
தரித்திரர் திண்ணமாச் செல்வர்களே; இது
சத்திய மிந்தத் தரணியிலே

(பா.67)

என்று கூறுகிறது.

நிருபகவிதைகள்

முதலியார் அவர்கள் அவ்வப்போது தமது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவதுண்டு கடிதங்களைக்கூடக் கவிதை வடிவிலேயே எழுதுவார். அத்தகைய சிலகவிதைகளை 'நிருபகவிதைகள்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இத்திரட்டில் சில நிருபகவிதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இரண்டினைக் காண்போம்.

இவர் சென்னையில் தமது நண்பர்கள் கள்ளபிரான் பிள்ளை, சிவஞானம் பிள்ளை ஆகியோருடன் சிலநாள்கள் தங்கியிருந்தார். *சென்னை அரண்மனைக்காரன்* தெருவில் அறுபத்தாறாம் மனையில் தங்கியிருந்தபோது சைதாப்பேட்டையில் தொடங்கிய 'விவசாய வித்யா சாலை' யில் சேர்ந்த செய்தியை 1881 ஆம் ஆண்டு அக்டோபரில் இராசவல்லிபுரம் முத்துசாமிப் பிள்ளைக்கும் நண்பர் அழகிய சொக்கநாத பிள்ளைக்கும் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையிலென் னுயிரனைய கள்ளபிரானைஉயர் சிவ
ஞானப்பேர்
மன்னையென தகமகிழக் கண்டு சின்னா ளவரோடும் வாசஞ்
செய்த
பின்னைவிவ சாயவித்தி யாசாலை தனிலெய்தப் பெற்றேன்
தந்தை
யன்னையினு மருள்பெருகி யாவரையும் புரந்துவரு மறத்தி
னோரே'

(பா.202)

இத்துடன் தாம் தங்கியிருந்த வீட்டு முகவரியையும் தெரிவித்துள்ளார்

நீவிரிரு வருஞ்சேம முடனிருதத வறிந்திடவோர் நிருப மிக்க
தீவிரமாவரைந்துசென்னைநகரிலர மனைக்காரன்
தெருவிற்சேணை
மேவிவிளங் கறுபத்தா றாமனைவாழ் சிவஞான விவேகன்
பார்த்து
மாவிரைவி னீகவெனு மேவ்விலா சத்தினோடும்
வரவுய்ப்பீரே

(பா.204)

சேண் - ஆகாயம்

இப்படிப்பட்ட சுவையான செய்திகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கடவுள் வாழ்த்துக் கவிதை

இத்தொகை நூலில் அமைந்துள்ள சிறந்த பாடல்களுள் ஒன்று கடவுள் வாழ்த்துப் பகுதியில் இடம் பெற்றுள்ள உமை என்னும் வாழ்த்துப்பா

என்றுமென் றோழிதிரு வாமுவரி மணைமுன்றி லேயுமிது
மீதிவர்ந்தா
டிடுவவென் றொரு புனைக் கிளையிரீஇப் பாவைதலை
யேந்திவெஞ் சுடுகாட்டிடை
நன்றுநின் றாடெனிறை புரைதியென வளைகுரவ
நாகிளங் கொம்பர் பற்றி
நகிலுற வணைத்துமரு தத்துமா மீப்படரு நறுவனத் தளவை
வலியச்
சென்றுகொண் கனையணைந் தனையென்று புன்முறுவல்
செய்தந்த மாவையென்சேய்
செவ்வேல்செஃ றருவென்ன நோக்கியரு குறுவரைச்
செயலைதனை யென்கொலோநீ
ஒன்றுவெஞ் சோகமே செய்தும்ம சோகமென வுறலென
வுதைத்தாடிட
உவையெவாம் பூப்பவுள்ளுவகை பூத்தருளுமுமை உபயபத
முன்னியுய்வாம்

(பா.6)

திணைமயக்கம்

இப்பாடலில் ஐந்திணை மயக்கம் அமைந்திருப்பது சிறப்பாகும். ஒரு திணைக்குரிய கருப்பொருளும் காலமும் மற்றொரு திணையின் கண் வருதல் திணைமயக்கம் எனப்படும்.

'இப்பாட்டு காவிய காம்பீரியமும் நாடகநயமும் உடையதாய் அருமையும் இனிமையும் விரவிய பலபல சிறப்புகள் அமைந்த செய்யுளாம் இதனில் ஐந்திணை மயக்கம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வாறு ஐந்திணை மயக்கம் ஒருங்கமைந்த செய்யுள் யான் அறிந்தவரை ஒன்றே உள்ளது. அது, காஞ்சிப்புராணம் நாட்டுப்படலத்து வரும், கறிக்கொடியும் ..வயங்குமோர் பால் என்னும் பாட்டு'

இப்பாட்டு ''அருமையினும் அருமையாக ஐந்திணை மயக்கமும் ஓரிடத்தே ஒருங்கே அமையப் பெற்றிருப்பதனோடு அமையாமல் அதற்கு மேலாக மகளிரால் மலரும் மரம் பத்துள் ஒரு பாதியாகவுள்ள ஐந்து மரம் அமைக்கப்பெற்றுள்ளது.

மேற்கொண்டு விம்மிதத்தின்மேல் விம்மிதமாக ஒன்பது ரசங்களுள் ஒரு பாதிக்கும் அதிகமான சிருங்காரம் ஆசியம், கருணை, ரௌத்திரம், அதிசயமென்ற ஐந்திரசங்களுக்கிடமாக உள்ளது'' என்று இந்நூலைப் பதிப்பித்த காலஞ்சென்ற மேலகரம் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் தமது பதிப்புரையில் கூறியுள்ளார்.

நெய்தல் நிலத்துப் புன்னை, மாதர் மரக்கிளையில் ஊஞ்சலாட மலரும்; பாலை நிலத்துக் குரவம் அவள் கட்டித் தழுவ மொட்டவிழும்; அவள் சிரிக்க முல்லை பூத்துக் குலுங்கும்; அவள் பார்வைபட்டு மருதத்து மா மரம் மலரும். அவள் எட்டி உதைக்கக் குறிஞ்சியின் அசோகம் பூப்பூக்கும். இங்கு அமைந்துள்ள ஐந்திணை மயக்கம் இது.

இலக்கியநயம் செறிந்த செய்யுள்கள் அடங்கிய இத் தனிக்கவித் திரட்டு பாலொடு தேன் கலந்தாற்போல் படிப்போர்க்கு இன்பம் தருவதாகும்.

குருவணக்கம்

இது திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் மீது பாடிய கவிதை. 'குருவணக்கம்' என்ற தலைப்பின் கீழ் 32 பாடல்களைக் கொண்டு அமைந்தது இப்பகுதி திருவாவடுதுறை ஆதீனகர்த்தராய் 15 ஆம் பட்டம் வகித்திருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளை ஆசிரியர் தெரிசித்தபோது பாடியவை. அவர்

பன்னருஞ்சீர் மன்னம் பலவாண தேவேயான்
உன்னடியார் கூட்டத் தொருவனென - அன்னா.
மருங்காக வந்தானேன்; மாமேரு வைச்சார்
கருங்காக மும்பொற்கா கம்

(பா.8)

என்று தொடங்குகிறார். மேலும் தொடர்ந்து ஆதீனகர்த்தரை வழிபடும் பாடல்கள் அவருடைய உள்ளுணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன.

பொய்யன்று மெய்யாம் புதுமையொன்று கேள்;நினது
கையதனின் மிக்கதுகால் கைஇந்த- வையத்துச்
செல்வமே ஈந்திடும்: நின் சேவடியோ, வான்முத்திச்
செல்வம் அளிக்குமினி தே

(ப. 14)

இப்படியே உணர்ச்சி வசப்பட்டவராய் மேலும் பாடுகிறார்.

கொள்ளைநிதி ஊதியமாக் கொள்ளமுயல் வாணிகத்தில்
உள்ளமுத லும்மிழந்தோ னொப்பவே - வள்ளலே
உன்னை யடைவான் உனைநாடி யுற்றயான்
என்னை இழந்தேன் ஈ தென்?

(பா.19)

அம்பலவான தேசிக மூர்த்திகளை வணங்கி அவருக்குப் பாத காணிக்கை வைத்துப் பாடியபின் வெ.ப.சு அவர்கள் விடைபெறும் போது நடந்த நிகழ்ச்சியொன்றும் பதிப்பாசிரியரால் குறிப்பிடப் பட்டுள்ளது.

வெ.ப.சு. அவர்கள் ஆதீனகர்த்தரிடம் விடைபெறும்போது அவர் இவருக்குத் திருநீறும் பட்டாடையும் அளித்தார். இவர் உடனே 'அடியேன் பாதகாணிக்கை வைத்தது மாணவன் கடமையுடன் செய்தது. அது சீடர்கள் ஆசாரியார்க்குச் செய்ய வேண்டிய முறை. ஆசாரியர் சீடர்களுக்கு ஆசியளித்தலே மரபு; கடப்பாடுடையரல்லர். அதனால் ஆசி மட்டும் அருளுக என்றார். அதற்குத் தேசிகர், 'ஆசைப் பட்டுக்(விரும்பி, பொற்பட்டு)கொடுக்கின்றேன். ஏற்றுக்கொள்க என நூலாசிரியர் ஆசைப்பட்டுடுத்தல்(திசைகளையே பட்டாக உடுத்தல்) திகம்பரன் என்ற சிவபிரானேயான சந்நிதானத்துக்கே தகும் என்றார்.

சிலேடைநயம் தோன்ற வெ.ப.சு. இவ்வாறு சொன்னார். ஆசை என்பது *திக்கு* என்றும் *திகம்பரன்* என்பது *திக்கு அம்பரன்* என்றும் பிரிந்து திக்குகளையே ஆடையாக உடையவன் என்றும் பொருள் தரும் அது,

'திக்குகளையே பட்டாகக் கொண்டு உடுத்தல் திகம்பரன் என்ற பெயரையுடைய சிவபெருமானுக்கு உரியது. சிவபெருமானே அடியார்களை உய்விக்கும் பொருட்டுத் தேசிகராக எழுந்தருளி வந் திருக்கிறான் என்ற கோட்பாட்டின்படி அது சிவபெருமானாகிய தங்

களுக்கே உரியதாகுக' என்று பணிவுடன் சொல்ல அதைக் கேட்டுத் தேசிகரும் மகிழ்ந்து தீருசீறு மட்டும் அளித்து விடை கொடுத்தார்.

'சிவபெருமானே அடியார்களை உய்விக்கும் பொருட்டுத் தேசிகராக எழுந்தருளி வந்திருக்கிறார்' என்று கூறுகிற வெ ப சு அவர்கள் எந்த அளவு குருபக்தி மிக்கவர் என்பதை இப்பகுதியிலுள்ள பாடல்கள் விளக்குகின்றன.

சிந்தைக்கினிது செவிக்கினிது வாய்க்கினிது
வந்தித் திடவினிது மற்றெம்மைப் - பந்தித்த
வெம்பவநோய் தீர்த்தெமக்கு வீடாத வீடளிக்கும்
அம்பலவா ணன்சீ ரடி

என வணங்கி முடிக்கின்றார்

படிக்குந்தொறும் படிக்குந்தொறும் தனிக்கவித் திரட்டிலுள்ள ஒவ்வொரு பாடலும் சுவை மிக்கதாய் அமைந்துள்ளன.

8. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்

இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துகள் பேராசிரியர் பி.சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆய்வில் கண்டவை. அக் கருத்துகளை நூல் வடிவில் கொண்டுவர எண்ணிய வெ.ப.சு. அவர்கள் அவற்றை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

''எனக்கென இதில் ஒன்றுமில்லை. திரு.பி.சுந்தரம்பிள்ளையவர்கள் கற்பித்தபடியே எழுதுகிறேன்'' என்று வெ.ப சு. அவர்கள் நூலைத் தொடங்கியுள்ளார்கள்.

தமிழோடு ஆங்கில மொழியையும் கற்றுத் தேர்ந்த புலவர் பெருமக்களுள் பேராசிரியர் பி சுந்தரம் பிள்ளையும் ஒருவர். அவரைப் பற்றி ஆசிரியர் வெ ப.சு, அவர்கள்,

''திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் புரொபசர் பி சுந்தரம் பிள்ளை எம்.ஏ. இங்கிலீஷிலும் தமிழிலும் ஒருங்கே பாண்டித்திய முள்ள மிகச் சிலருட் சிறந்தோராவர் என்பதும், ஆங்கில இலக்கியங்கள், சாஸ்திரங்கள், இவைகளிற் பயிற்சியுள்ள தமிழ் விற்பன்னரை விசேடமாக மகிழ்வித்து அத்துவிதத் தத்துவக் கருத்துகளை ஒருபுடை விளக்கும் மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் முதலிய சில நூல்களுக்கு ஆசிரியர் என்பதும் மகாராஜா கல்லூரியில் தத்துவ சாஸ்திர பட்டா

சாரிய (Philosophy Professor)ராக வீற்றிருந்தவர் என்பதும் தமக்க மைந்த ஒழிவு காலங்களில் செய்யும் முயற்சிகளுள் பூர்வ சரித்திர ஆராய்ச்சியே பிரதான முயற்சியாகக் கொண்டு அதற்காக நெடுங்கா லம் உழைத்துத் 'திருஞான சம்பந்தர் கால நிர்ணயம்' முதலிய சரித்திர சம்பந்தமான சில உண்மைகளை நூதனமாகக் கண்டுபிடித்து அவை களை இனிது விளக்கி நிலை நிறுத்தியதனால் அத்தகைய உண்மை களின் அருமை அறிந்த ஐரோப்பிய சங்கத்தார்களால் கவுரவமாக வழங்கப்பட்ட பல பட்டப்பெயர்கள் பூண்டு தென்னிந்தியாவுக்கோர் அருமையான ஆபரணமாக விளங்கினாரென்பதும் பலர் அறிவர்'' என்று விரிவாக உரைத்துள்ளார்.

'இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்' என்ற இந்நூலில் அடங்கியுள்ள கருத்துகள் அவர் கொண்டவை. அத்தகைய அறிவார்ந்த கருத்துகளைக் கூறும் அளவுக்குத் தகுதியும் திறமையும் உடையவர் சுந்தரம் பிள்ளை. அவருடைய இருமொழிப் புலமையையும் ஆராய்ச்சி அறிவுத் திறனையும் வெளிநாட்டு நல்லறிஞர்கள் பாராட்டிப் பட்டமளித்துள்ளார்கள்.

திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

என்பார் பாரதியார். திறமான புலமையுடைய சுந்தரனாரின் கருத்துகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன என்கிறார் வெ.ப.சு. அவர்கள்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சென்னையில் ஒருமுறை தம் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது வெ.ப.சு. அவர்களும் அங்கிருந்தார்கள். நண்பர் ஒருவர் இராமாயணத்தைப் பற்றிச் சுந்தரனார் கொண்டுள்ள கருத்துகளை அறிய விரும்பினார். அப்போது பேராசிரியர் எடுத்துக்கூறிய கருத்துகளை அமைத்து வெளியிடப்பட்டதுதான் இந்நூல் என்கிறார் ஆசிரியர்.

மேலும் அவர், ''இதை எழுதும் யானோ பூர்வ சரித்திர ஆராய்ச்சிக்கு உரிய சாசன சர்ச்சை முதலியன ஒன்றும் அறியாதேன். அவர்(பேராசிரியர்) கூறிய கொள்கைகளோ அம் முறைகளை நன் குணர்ந்தார்க்கே முற்றும் புலப்படற்பாலன. அவரே இக்கொள்களை எழுதியிருப்பின் மிக நன்றாக இருக்கும். இவ்விரு வழிகளுள் யாதேனுமொரு வழியாக அக்கொள்கை வெளிவருமென்று இதுவரை

எதிர்பார்த்திருந்தேன். அவ்வாறு வெளிவராமையால் அக்கொள்கை களில் அடங்கியுள்ள அரிய கருத்துகள் உலகத்தாருக்குப் பயன் படாமல் இறந்துவிடலாகாதே என்ற பயத்தினாலும் யான் இதனை எழுதத் துணிந்தேன்...'' என்று இந்நூல் எழுதுதற்குரிய காரணங்களை வெ.ப.சு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''தென்னிந்தியாவில் பூர்வீகப் பழங்குடி திராவிடர் என்றும் வட நாட்டிலிருந்து தென்னாடு போந்தவர் ஆரியர் என்றும் இவர்களில் ஒருவர் மற்றொருவர் உரிமைகளைக் கைப்பற்ற முயல இருவருக்கும் போர் விளைந்ததென்றும், அப்போரில் ஆரிய அரசனான இராமன் திராவிட அரசர்களாகிய வாலி, இராவணன் ஆகிய இவர்களை வென்றான் என்றும் இவ்வெற்றிப் பிரதாபத்தையே ஆரிய முனிவரான வான்மீகர், இராமாயணம் என்னும் பெருங்காப்பியமாகச் செய்து முடித்தார்'' என்றும் கூறுவதே இராமாயணத்தின் உள்ளுறை பொருளாக அமைந்தது என்றும் பூர்வீகத் திராவிடருள் திணை வகுப்பேயன்றிச் சாதிவகுப்பில்லை. நிலையான சாதிபேதம் இருந்த தாக இவரது பழைய நூல்களில் ஆதாரம் ஒன்றும் காணப்படவில்லை. ஆரியர் தென்னிந்தியாவில் நுழைந்து ஸ்திரப்படும்வரை ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரோடு உடனுண்டு உறவாடி வாழ்ந்தனர். திராவிடர், ஆரிய சாதியைச் சேர்ந்த நாற்பெரும் வகுப் புகளுள் எவ்வகுப்பையும் சேர்ந்தவரல்லர். ஆரியரைப்போலவே திராவிடரும் ஒரு தனிப் பெருஞ்சாதியார். ஆரியர் தென்னிந் தியாவில் நிலைத்த பின்னரே திராவிடர்களுக்குள் உலைவும் சிதைவும் ஏற்பட்டன'' என்றெல்லாம் அறுதியிட்டுரைப்பதே சுந்தரம் பிள்ளை கூறும் தென்னிந்திய சாதிவரலாறு என்றும் வெ ப.சு விளக்கம் தந்துள்ளார்.

இராமாயண காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை, இராமாயண பூர்வகாலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை, இராமாயண உத்திரகா லத்துத் தென்னிந்திய சாதி நிலைமை ஆகியவை ''சாதி இலக்கணமும் தென்னிந்திய சாதி நிலைமையும்'' என்ற இத் தலைப்பின் கீழ் தென் னிந்திய சாதி வரலாறு இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

பல்வேறு திறமைகள் பெற்றவரான டி.வில்சன் என்பாரைப் பதிப் பாசிரியராகக் கொண்டு சேலத்திலிருந்து வெளிவந்த 'தட்சிண தீபம்' வார இதழில் இது முதலில் கட்டுரையாக வெளிவந்தது.

இந்நூலைப்பற்றி ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை,

"I have every hope that these pages will tend to stimulate healthy enquiry and research into the dark pages in the history of our ancient motherland"

என்று பாராட்டியுள்ளார்.

9. கல்வி விளக்கம்

மேலை நாட்டறிஞர் ஹெர்பர்ட் ஸ்பென்சர்(Herbert Spencer) எழுதிய 'Education' என்ற ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு 'கல்வி விளக்கம்' என்னும் நூல்.

வெ.ப.சு.அவர்கள் தம்முடைய நண்பர்கள் திரு. எஸ்.வி. கள்ள பிரான் பிள்ளை , திரு.சி.அப்பாவுபிள்ளை ஆகிய இருவருடன் சேர்ந்து மூல நூலை 1899 இல் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இந் நூல், பயன்தரும் அறிவு யாது? அறிவுப் பயிற்சி, நன்னெறிப் பயிற்சி, உடற்பயிற்சி என்னும் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் முதலிரண்டு பகுதிகளே இம்மூவரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

அப்போது மூல நூலாசிரியர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் அவர் களுடைய இசைவு பெறவேண்டியது இன்றியமையாததாக இருந்தது. அவரது ஒப்புதல் பெறுவதற்கு அப்போதைய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டங்கன் (D.Duncam M.A. D.Sc.LLD) இவர் களுக்குப் பேருதவி புரிந்துள்ளார்.

"தமிழ்மொழியோடு பலவகையிலும் மாறுபட்ட இங்கிலீஷ் பாஷையிலுள்ள நூல்களை மொழி பெயர்ப்பது பொதுவாகக் கஷ்ட சாத்தியம். அவ்வாறாக சாஸ்திர சம்பந்தமான சங்கேத மொழிகளும் தமிழிற் காணப்படாத பண்புக் கருத்துக்களடங்கிய பதங்களும் மூல நூலில் எங்கும் மிகவும் செறிந்திருத்தலால் இம்மொழிபெயர்ப்பு எவ் வளவு சிரமப்பட்டு இயற்றப்பட்டிருக்கிறதென்பது இதனையும் மூல நூலையும் ஒப்பு நோக்குவதனால் இரு பாஷைகளையும் கற்றறிந் தோருக்கும் முக்கியமாக மொழிபெயர்ப்பு வேலையில் பழகியவர் களுக்கும் எளிதில் விளங்கும்" என்பது மொழிபெயர்ப்பாசிரியர் களின் கருத்தாகும்.

மூவரும் அரும்பாடுபட்டு மூல நூற்கருத்துகளிலிருந்து மொழி பெயர்த்துள்ள ஓரிரு பகுதிகளை இங்குக் காண்போம்.

"பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வெளி அலங்காரம் செய்தல் போலவே அவர்கள் உள்ளத்திற்கும் செய்கின்றார்கள். என்றும் தன் உடலில் வர்ணம் பூசிக் கொள்வதால் பயன் ஒன்றும் ஏற்படாது என்று தெரிந்தும் அவ்வர்ணப் பூச்சில்லாமல் தான் வெளியில் சென்றால் பிறர் கண்டு நகைப்பார்களே என்று கருதும் ஓரினாகோ இந்தியன் போல, லத்தீன் கிரேக்க பாஷைகளில் தம் மக்களுக்குப் பயிற்சி ஏற்படுவதால் ஒரு பயனும் அடைய மாட்டார் கள் என்று தெரிந்த பெற்றோர்களும் அந்தப் பாஷைகளைத் தெரிந் திருத்தலே கவுரவம் என்று பிறர் கருதுவார்கள் என்றெண்ணி அப்பாஷைப் பயிற்சிக்காகப் பள்ளிக்குத் தம் பிள்ளைகளை அனுப்பு கிறார்கள்" என்பது மொழிபெயர்ப்பின் ஒருபகுதி.

இன்னொரு பகுதியை அதன் ஆங்கில மூலத்தோடு பார்க்கலாம்.

Education

Thus to the question we set out with what knowledge is most worth - the uniform reply is - science. This is the verdict on all the counts. For direct self preservation, or the maintenence of life and health, the all important knowledge is -Science. For that indirect self preservation which we call gaining a livelihood, the knowledge of greatest value is - Science. For the due discharge of parental functions, the proper guidance is to be found only in Science. For that interpretation of national life, past and present, without which the citizen cannot rightly regulate his conduct, the indispensable key is - Science. Alike for the most perfect production and present enjoyment of art in all its forms, the needful preparation is still - Science and for purposes of discipline - intellectual, moral, religious - the most efficient study is, once more Science. The question which at first seemed so perplexed, has become, in the course of our enquiry comparatively simple. (Education - Herbert Spencer)

தமிழாக்கம்

"சிறந்த உபயோகமுள்ள அறிவு யாது? என்று நாம் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு மாறாக ஒரே உத்தரம் சாஸ்திரம் என்பது. இதுவே

சகல விவாதாமி சங்கங்களுக்கும் தீர்ந்த முடிவு. நேரான தற்காப்புக்கு அதாவது பிராணனையும் சுகத்தையும் பேணுவதற்கு சர்வ முக்கிய ஞானம் சாஸ்திரம்., ஜீவனம் சம்பாதித்தல் என்று நாம் சொல்லுகிற இடையிட்ட தற்காப்புக்கு அத்தியந்த உபயோகமுள்ள அறிவும் சாஸ்திரம். பெற்றோர்களுக்குரிய கடமைகளைச் சரியாக நிறைவேற்ற வழிகாட்டுவதும் சாஸ்திரம். ஒரு ஜாதியாருடைய வாழ்க்கை வழிகள் சென்ற காலத்திலும் தற்காலத்திலும் உள்ள நிலைமையை விளங்கச் செய்து அதனால் நகர, கிராமவாசிளாக நாம் செய்தற்குரிய கடமை களை நன்கு நிறைவேற்றுதற்கு இன்றியமையாத வழிகாட்டியும் சாஸ்திரம். சகலவகை நற்கலை வேலைகளையும் குறைவின்றிச் செய் வதற்கும் அவற்றின் வனப்புக்களை நோக்கி ஆனந்திப்பதற்கும் தக்கபடி சித்தப்படுத்துவதும் சாஸ்திரம். அறிவு, சன்மார்க்கம் சமய பக்தி இவைகளை சிக்ஷாக்கிரமமாகப் பயிற்சி செய்வதற்குச் சிறந்த சாதனம் சாஸ்திரம். முதலில் மலைவாகத் தோன்றிய விஷயம் அதைப் பற்றி நாம் விசாரித்து வருகையில் (பழைய மலைவை நோக்க) எளிதாய்விட்டது ''

மொழிபெயர்க்கும்போது மூல மொழியிலுள்ள சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் கிடைக்காமற்போகலாம். அப்போது ஏற்ற சொற்களை உருவாக்கலாம் அல்லது வேறு ஏதேனும் ஒரு சொல் மக்கள் வழக்கிலிருந்தால் அதைப் பயன்படுத்தலாம். சான்றாக Science என்ற சொல்லுக்கு 'சாஸ்திரம்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதுவும் பிற மொழிச் சொல்லே. இதைப்போன்ற சிக்கல்கள் பல குறுக்கிடும். எனவேதான் மொழிபெயர்ப்பு எளிதில்லை என ஆசிரியர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனாலும், இங்கே மூலநூற் கருத்துகள் மொழிபெயர்ப்பில் தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறு அமைந்துள்ளன.

வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் கவிஞராக, இருமொழிப் புலமை மிக்கவராக, ஆழ்ந்தகன்ற ஆய்வுத்திறன் கொண்டவராக, தமிழிலக்கிய உலகில் முதுபெரும் புலவராக விளங்கினார் என்பதை இங்குக் கூறப்பட்ட அவருடைய இலக்கிய ஏடுகள் எடுத்துக் காட்டுகின்றன

துணைநூற் பட்டியல்

நான் அறிந்த தமிழ் மணிகள், *ஆச்சார்யா.பி.ஸ்ரீ, வானதி பதிப்பகம்,* சென்னை - 17, 1971.

திருவானைக்கா புராணம், கச்சியப்ப சுவாமிகள், ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடம்,1908.

தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரியபெருமாள், காமதேனு பப்ளிஷர்ஸ், சென்னை, 1996.

கம்பராமாயணம்(பாலகாண்டம்),கோபாலகிருஷ்ண மாச்சாரியார் வை. மு. மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை.

கம்பராமாயணம் (அயோத்தியா காண்டம்),கோபாலகிருஷ்ணமாச் *சாரியார் வை. மு. மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை,*1949.

அடியும் முடியும், கைலாசபதி.க., குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1996.

பரிபாடல் (மூலமும் உரையும்), சாமிநாத ஐயர். உ.வே. (ப ஆ.)கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1935

தளவாய்த் தாத்தா (அல்லது) **தளவாய் அரிய நாயக முதலியார்,** சுப்பிரமணியஐயர்.எம்.எஸ்., தினமணி காரியாலயம், சென்னை,1944

கலசைச் சிலேடை வெண்பா, *சுப்பிரமணியத் தம்பிரான், சைவ* சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1936.

நெல்லைத் தமிழ்ப் புலவர்கள், சுப்பிரமணிய பிள்ளை.இ.மு. இரண்டாம் புத்தகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1959

இலக்கிய வரலாறு, சுப்பிரமணிய பிள்ளை கா., ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1956.

நெல்லை மாவட்டத் தமிழாளர்,சுப்பிரமணியன் ச.வே.(ப.ஆ.) உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 2004.

தொண்டை மண்டல சதகம், படிக்காசுப் புலவர், மதராஸ் ரிப்பன் அச்சகசாலை, 1913

தமிழ் அறிஞர் முதலியார், பாஸ்கரத்தொண்டைமான்.தொ.மு. ஹிலால் பதிப்பகம், திருநெல்வேலி, 1941.

புதுமைப்பித்தன் படைப்புகள், புதுமைப் பித்தன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1988.

இவர்கள் பார்வையில் அகலிகை, ரத்னம் க., ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1998.

இலக்கண விளக்கம் (அணியியல்)ராஜகோபாலாச்சாரியார்.கே., ஸ்டார் பிரசுரம், சென்னை, 1963.

விருத்தப்பாவியல், வீரபத்திர முதலியார் தி., சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1984.

பொதிகை-ஆய்வுமலர், வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், திருநெல்வேலி, 1986.

பொதிகை-ஆய்வுமலர் 2-இதழ். 1, வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், திருநெல்வேலி, 1987.

பொதிகை-ஆய்வுமலர் 2, இதழ். 2 வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், திருநெல்வேலி, 1987.

பொதிகை-ஆய்வுமலர் 3, இதழ். 1 வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், திருநெல்வேலி, 1988

பொதிகை-ஆய்வுமலர் 1, இதழ். 2 வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், திருநெல்வேலி, 1986.

வெ.ப.சு. அவர்களின்
இலக்கிய நூல்கள்

1. அகலிகை வெண்பா
2. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்
3. கம்பராமாயண சாரம் (7-காண்டங்கள்)
4. கல்வி விளக்கம்
5. கோம்பி விருத்தம்
6. சருவசன செபம்
7. சுவர்க்க நீக்கம் -முதற்காண்ட மொழிபெயர்ப்பு
8. தனிக்கவித் திரட்டு
9. நெல்லைச் சிலேடை வெண்பா

வெ.ப.சு. (வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்) மரபு வழிவந்த தமிழ்ப்பெருங்கவிஞர். தமிழொடு ஆங்கிலமும் கசடறக் கற்றுத் தேர்ந்த இருமொழிப் புலவர். மேலைநாட்டுப் பெருங்கவிஞன் மில்டனிடமும் தமிழ்நாட்டுப் பாட்டரசன் கம்பனிடமும் ஈடுபாடு மிகக் கொண்டவர். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். அறிவியல் நூல்களைத் தமிழில் பயிற்றுவிக்க முடியும் என்பதை நிறுவிக் காட்டியவர். 'அறிவியல் தமிழ்' என்ற சொற்பிறப்புக்கு முன்பே அத்துறைக்கு வித்திட்ட வித்தகர். வெ.ப.சு கற்ற கல்வியும், தோன்றிய துறையும், அதில் அவர் ஆற்றிய அரும்பணியும் அறிவியல் தொடர்புடையனவே. ஆயினும் தமிழிலக்கியத் துறைக்கு அவரது பங்களிப்பு மிகுதி. எனவே அவர் சாகித்திய அகாதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் இடம் பெற்றுள்ளார்.

சி.சுப்பிரமணியன்: இந்நூலாசிரியர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரின் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர். அவர் இயற்றிய அகலிகை வெண்பா என்னும் சிற்றிலக்கியத்தைத் தமது மாணவப் பருவத்தில் கல்லூரியில் பாடநூலாகப் பயின்றவர். பின்னர் முதலியார் நூல்கள் அனைத்தையும் ஆழ்ந்து கற்று ஆராய்ந்து பல்கலைக்கழக ஆய்வுப்பட்டமும் பெற்றவர்.

Vellakal Pa. Subramania Mudaliar (Tamil)Rs.25.

ISBN 81-260-2088-1